ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



# பகவத்கீதா ஸாரம்


## (முதல் ஷட்கம்)



யதிராஜ பாதுகா ஆசிரியர்

ஸ்ரீ உ வே V V ராமாநுஜம் ஐயங்கார் ஸ்வாமி

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



ஸ்ரீவைஷ்ணவ ரத்நமாலா - 15

# பகவத்கீதா ஸாரம்

## (முதல் ஷட்கம்)


யதிராஜ பாதுகா ஆசிரியர்

ஸ்ரீ உ வே V V ராமாநுஜம் ஐயங்கார் ஸ்வாமி



கீர்த்தி மூர்த்தி ஸ்ரீ உ வே காரப்பங்காடு வேங்கடாசாரியார் ஸ்வாமி நினைவு வெளியீடு

Released by Maran's Dog ,Toronto, Canada

1999

Rs 10

**ஸ்ரீ:**
**ஸ்ரீமதே ராமானுஜாய நம:**
**ஸ்ரீவேங்கட குரவே நம:**

# அடியேன் செய்யும் விண்ணப்பம்

**கீர்த்தி மூர்த்தி ஸ்ரீ உ வே காரப்பங்காடு வேங்கடாசாரியார் ஸ்வாமி** நினைவாக வெளியிடப்பட்டுவரும் **ஸ்ரீவைஷ்ணவ ரத்நமாலாவின்** இந்த இதழில், யதிராஜ **பாதுகா ஆசிரியர் ஸ்ரீ உ. வே. V. V.** ராமானுஜம் ஐயங்கார் **ஸ்வாமி எழுதி** யதிராஜ பாதுகா இதழ்களில் **"பகவத்கீதா ஸாரம்" என்ற** தலைப்பில் வெளியிடப்பட்ட தொடர் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு கீதையின் முதல் ஷட்கத்தின் ஸாரார்த்தங்களைத் தெரிவிக்கும் முதல் பாகமாக வெளியிடப்படுகிறது. ஸ்ரீ உ வே காரப்பங்காடு ஸ்வாமி ஸ்ரீமத் பகவத்கீதையின் ஸாரார்த்தங்களை தொடர்ந்து 18 நாட்கள் திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்த ஸாரதி ஸ்வாமி ஸந்நிதியில் 1969ம் ஆண்டு உபன்யஸித்த பொழுது ஏடுபடுத்தப்பட்ட குறிப்புகளின் விரிவாக்கமாக இக் கட்டுரைகள் அமைந்துள்ளன.

ஸ்ரீவைஷ்ணவ உலகிற்கு மஹோபகாரகரான ஸ்ரீ யதிராஜ பாதுகா ஆசிரியர் ஸ்வாமியை அறியாதார் இருக்க முடியாது. கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக இந்த ஸ்வாமி செய்து கொண்டு வரும் பகவத் பாகவத ஆசார்ய கைங்கர்யங்கள் பலப்பல. சிலவன வற்றை இங்கு அநுஸந்தித்து ஸத்தை பெறுகிறேன்.

ஸ்ரீ உ வே **V. V.** ராமானுஜம் ஐயங்கார் ஸ்வாமி ஸ்ரீமுதலியாண்டான் ஸ்வாமி திருமாளிகையைச் சேர்ந்தவர். ஸ்ரீமுதலியாண்டான் ஸ்வாமி சிஷ்யர்கள் சபை செயலாளராக பல ஆண்டுகளாகத் தொடர்ந்து பணியாற்றி வருபவர். ஸ்ரீமுதலியாண்டான் ஸ்வாமியின் சிஷ்யர்களில் தலை சிறந்து விளங்குபவரான நம் ஸ்வாமி

ஸ்ரீமுதலியாண்டான் ஸ்வாமி திருமாளிகையில் சிறந்த பொறுப்புகள் ஏற்றுப் பலவித ஸம்ப்ரதாய வளரச்சிப்பணிகளில் ஊக்கமுடன் ஆக்கபூர்வமாகச்செயலாற்றி வருபவர். திருமாளிகை சிஷ்யர்கள் சபை ஆதரவில் வெளிவந்துகொண்டிருக்கும் ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாய பத்திரிகையின் ஆசிரியராகத்தொடக்கம் முதல் திறம்படச்செயலாற்றி வருபவர் கீர்த்திமூர்த்திகளான ஸ்ரீ உ. வே காஞ்சி ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியார் ஸ்வாமி ஸ்ரீ உ. வே காரப்பங்காடு வேங்கடாசாரியார் ஸ்வாமி , ஸ்ரீ உ வே திருமலைநல்லான் ராமக்ருஷ்ணய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீ உ வே வேளுக்குடி வரதாச்சாரியார் ஸ்வாமி, ஸ்ரீ உ வே காரப்பங்காடு ரங்கராமானுஜ ஐயங்கார் ஸ்வாமி, ஸ்ரீ உ வே ஶதாபிஷேகம் கோவிந்த நரஸிம்ஹாசாரியார் ஸ்வாமி போன்ற ப்ரஸித்த மஹாவித்வாந்களின் காலக்ஷேப உபந்யாஸ கோஷ்டிகளில் நெடுங்காலம் அந்வயித்துச்சிறந்த ஶாஸ்த்ர ஸம்ப்ரதாய ஜ்ஞாநம் பெற்றுப்பரம ஸாத்விகராகவும் சிறந்த உபந்யாஸகராகவும் திகழ்பவர் நம் ஸ்வாமி .நம் பூர்வர்கள் அருளிச்செய்த *கூரேஶவிஜயம்* *யதீந்த்ரப்ரவணப்ரபாவம்* *வாக்யகுருபரம்பரை வ்யாக்யாநம்* ஆகிய க்ரந்தங்களைப் பதிப்பிட்டு வெளியிட்டு மஹோபகாரம் புரிந்தவர். மற்றும் நம் ஸ்வாமி எம்பெருமானார், ஸ்ரீ மணவாளமாமுநிகள் வைபவபரமாகப்பல மலர்களை வெளியிட்டுப்புகழ் பெற்றிருப்பவர். மேலும் ஸ்ரீமுதலியாண்டான் ஸ்ரீ கூரத்தாழ்வான் ஸ்ரீ அநந்தாழ்வான் ஸ்ரீ எம்பார் ஸ்ரீ பராஶர பட்டர் முதலான நம் பூர்வாசார்யர்களின் வைபவங்கள் பல க்ரந்தங்களில் அருளிச்செய்யப்பட்டுள்ளனவற்றைத்தொகுத்து வெளியிட்டிருக்கிறார். இது தவிர *அஷ்டஶ்லோகீ வ்யாக்யாநம்* *ஸ்ரீவைஷ்ணவம்* *பகவத்கீதா ஸாரம்* *ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமப்பொருள் விளக்கம்* *சிறையிருந்தவள் ஏற்றம்* *ஈடுவளர்ந்த சரிதை* *மட்டையடி உத்ஸவம்* *நம்மாழ்வார்



வைபவம்* *விஶிஷ்டாத்வைதம்* *ஸ்ரீஶைலேஶமந்திரப்ரபாவம்* *வைணவ மரபுகள்* *திருக்கோளூர்ப்பெண்பிள்ளை ரஹஸ்யம்* *திருவல்லிக்கேணி பெண்பிள்ளை ரஹஸ்யம்* *ஸ்ரீபார்த்த ஸாரதி* போன்ற பல தலைப்புகளில் தொடர் கட்டுரைகளை எழுதி வெளியிட்டிருக்கிறார். இதுமட்டுமல்லாமல் மேற்கூறிய மஹாந்களின் காலக்ஷேப கோஷ்டிகளில் ஏற்பட்ட அந்வயம் பிற்காலத்தவர்களுக்கும் பயன்படும்படி அம்மஹாந்கள் அருளிச்செய்த அர்த்தவிஶேஷங்களையெல்லாம் அவ்வப்பொழுது ஏடுபடுத்தித் தொகுத்து அவற்றை மேலும் விரிவுபடுத்திப் பரம போக்யமான பல உபந்யாஸக்கட்டுரைகளாக வெளியிட்டிருக்கிறார். தாமும் பல சிறந்த கட்டுரைகளை எழுதி வெளியிட்டிருக்கிறார். கடந்த பல வருடங்களாகத் தம்முடைய திருமாளிகை, ஸ்ரீபார்த்தஸாரதி ஸந்நிதி, ஸ்ரீவானமாமலை மடம் மற்றும் பல இடங்களிலும் ஸந்நிதிகளிலும் உபந்யாஸங்களையும் க்ரந்தகாலக்ஷேபங்களையும் ஸாதித்து வருகிறார். பல மஹாந்களின் அநுக்ரஹ கடாக்ஷ விஶேஷத்தைப்பெற்ற நம் ஸ்வாமி ம்ருதுபாஷி யாகவும் சிறந்த வித்வானாகவும் கைங்கர்யநிரதராகவும் விளங்குவ துடன் இன்றைய இளைய தலைமுறை அனைத்து ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் ஒரு முன்னுதாரணமாக விளங்கிவருகிறார் என்று சொன்னால் அது மிகையாகாது .இப்பொழுது வெளியிடப்படும் பகவத்கீதா ஸாரத்தின் மேல் இரண்டு பாகங்களும் விரைவில் வெளிவரும்படி அநுக்ரஹிக்கவேண்டுமாய் திவ்யதம்பதிகளை வேண்டிநிற்கிறேன். ஸ்வாமியின் மேற்குறிப்பிட்ட மற்ற பல தொடர்கட்டுரைத்தொகுப்புகளும் நூல் வடிவில் வெளிவர வேண் டும். அன்பர்கள் ஆவன செய்யும்படி வேண்டுகிறேன்.

ஸ்ரீ உ. வே காரப்பங்காடு வேங்கடாசாரியார் ஸ்வாமியின் உபந்

யாஸத் தொகுப்பாக ஒரு ஶ்லோகம் விடாமல் பகவத்கீதை விரிவுரை, கூடிய சீக்கிரம் வெளியிடப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்வாமி 1 9 5 6 ம் ஆண்டு திருவல்லிக்கேணி வானமாமலை மடத்திலும் 1 9 6 5 ம் ஆண்டு மதுரை ஸ்ரீ கூடலழகர் ஸந்நிதியிலும் 1 8 நாட்கள் தொடர் உபந்யாஸங்கள் ஸாதித்த பொழுது எடுக்கப்பட்ட குறிப்புகளை அடியேனுக்கு அநுக்ரஹித்துள்ளார் ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ உ வே V K ஸ்ரீநிவாஸாச்சாரியார் ஸ்வாமி. இதுதவிர ஸ்ரீரங்கம் ஸ்ரீ உ வே C R ஸ்ரீநிவாஸாச்சாரியார் ஸ்வாமியால் ஏற்கனவே வெளியிடப்பட்ட பகவத்கீதை வெளியீடும் இப்பொழுது கிடைப்பதற்கரிதாயிருப்பதால் இவையனைத்தையும் தொகுத்து வெளியிடும் பணியில் அடியேன் ஈடுபட்டுள்ளேன். அம்பத்தூர் Divine Science Trust நிர்வாஹஸ்தர்கள் இவற்றை வெளியிடுமாறு அடியேனை நியமித்துப் பொருளுதவியும் செய்துள்ளனர். இது தவிர *தத்வ பூஷணம்* *ரஹஸ்ய விவேகம்* என்னும் இரண்டு க்ரந்தங்களும் வெளிவர ஸித்தமாய் உள்ளன .இந்த வெளியீடுகளை உகந்து ஏற்று அடியேனை அநுக்ரஹிக்குமாறு அன்பர்களை ப்ரார்த்தித்துக் கொள்கிறேன்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்

தாஸன்

முரளீதரன்

# பகவத்கீதா ஸாரம்

## சாஸ்த்ராவதரணம்

வேதங்களுக்கு மேலான உயர்ந்த ப்ரமாணம் கிடையாது. இதிஹாஸ ச்ரேஷ்டமான ஸ்ரீராமாயணமும் மஹாபாரதமும் வேதத்தை உபப்ருஹ்மணம் செய்ய அவதரித்த காவ்யங்கள். ஐந்தாவது வேதமாகக் குலாவப்படுவது மஹாபாரதம். *மஹாபாரதத்தால் தூது போனவனேற்றம் சொல்லுகிறது* என்கிறபடி இது கண்ணனுடைய பெருமையைச் சொல்லும் இதிஹாஸம். ஒன்றேகால் லக்ஷம் க்ரந்தம் கொண்டது மஹாபாரதம். இதில் ஸாரமானவை இரண்டு. ஒன்று கண்ணன் நேரே அருளிய பகவத்கீதை. மற்றொன்று கண்ணன் திருமுன்பே பீஷ்மர் அருளிய ஸஹஸ்ரநாமம். பரதத்வமான கண்ணன் *நான்தான் பரதத்வம்* என்று பறை சாற்றுவதாக அமைந்துள்ளது கீதை. தத்வதர்சியான பீஷ்மர் *இதுதான் பரதத்வம்* என்று கண்ணனைக் காட்டிச் சொன்னது ஸஹஸ்ரநாமம். வேதாந்த விழுப்பொருளை வடிகட்டி நமக்குப் பருகப் பாலெனத் தருகிறான் கண்ணன் கீதையில்.

ஸர்வோபநிஷதோ காவோ தோக்தா கோபாலநந்தந : |
பார்த்தோ வத்ஸ : ஸுதீர் போக்தா துக்தம் கீதாம்ருதம் மஹத்||

வஸுதேவஸுதம் தேவம் கம்ஸசாணூரமர்த்தநம்|
தேகீபரமாநந்தம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்||

என்பவை பகவத்கீதையில் முதல்முன்னம் படிக்கப்படும் த்யான ச்லோகங்கள். எல்லா உபநிஷதங்களும் பசுக்கள். கோபாலநந்தனான கண்ணன் அர்ஜுனனைக் கன்றாகக் கொண்டு (வ்யாஜமாகக்

கொண்டு) இப்பசுக்களைக் கறந்து கீதாம்ருதமான பாலை உலகத்தவர் பருகும்படி தந்தருளுகிறான். அடுத்த ச்லோகம் கண்ணனை ஜகத் குருவாகப் போற்றுகிறது. நமதாசார்யர்கள் கண்ணனை கீதோபநிஷதாசார்யன் என்று வாய்நிறைய அழைத்து மகிழ்கின்றனர்.

பகவத்கீதை 18 அத்யாயங்கள் கொண்டது. பாரதயுத்தம் தொடங்கும்போது பாண்டவ ஸைன்யமும் துரியோதன (கௌரவ) ஸைன்யமும் எதிரிகளாக அணிவகுத்து நிற்கின்றன. பாண்டவர்களில் சிறந்த வில்லாளியான அர்ஜுனனின் அநுமக்கொடி பொருத்திய தேரைக் கண்ணன் பார்த்தஸாரதியாகத் தேரோட்டியிடத்தில் அமர்ந்து நடத்த, *கண்ணா! இரு ஸேனைகளின் மத்தியில் தேரை செலுத்தி நிறுத்துவாயாக* என்று அர்ஜுனன் நியமிக்க, அப்படியே கண்ணனும் செய்கிறான். எதிரி ஸைன்யத்தில் உறவினர்களும் ஆசார்யர்களும் நிறைந்திருப்பதைக் கண்ட அர்ஜுனன், இவர்களைக் கொல்வது பாபமாயிற்றே என்று துக்கப்பட்டு *நான் சண்டையிட்டு இவர்களைக் கொல்ல மாட்டேன். இவர்களையெல்லாம் கொன்று பெறும் ராஜ்யம் எங்களுக்கு வேண்டாம்* என்று யுத்தத்தினின்று விலக எண்ணித் தன் வில்லான காண்டீபத்தைக் கீழே எறிகிறான். கண்ணன், *அர்ஜுனா! இப்படிச் செய்வது தவறு. யுத்தம் பண்ணுவது க்ஷத்ரிய தர்மமாகும். யுத்தம் பண்ணிப் புகழ் பெறுவாயாக* என்று அவனுக்கு கீதா சாஸ்த்ரத்தை உபதேசம் பண்ணுகிறான். அஸ்தானத்தில் (இடமில்லாதவிடத்தில்) ஸ்நேஹம் காருண்யம் இவை காட்டி தர்மம் எது என்று நிச்சயிக்க முடியாமல் குழம்பி, *எனக்கு எது ச்ரேயஸ் தருமோ அதை நீயே நிச்சயித்துச் சொல்ல வேண்டும். உன்னை அடிபணிந்து, உனக்கு சிஷ்யனாயிருந்து கேட்கிறேன். அருளிச்செய்ய வேண்டும்* என்று கேட்ட அர்ஜுனனுக்கு மோக்ஷ சாஸ்த்ரமான



கீதையை அருளிச்செய்கிறான் கண்ணன். கீதோபதேசக் கடைசியில் *என்னுடைய ஐயமெல்லாம் விலகின. நான் நிலை நின்று நீ சொல்லுகிறபடி செய்வேன்* என்று அர்ஜுனன் சொல்லி யுத்தத்தில் ஊக்கமுடையவனாகிறான். அர்ஜுனன் மனதில் குழப்பத்தை விளைவித்தவனும் கண்ணனே. அதைத் தெளிவிப்பவனும் கண்ணனே. அர்ஜுனன் கீதையை ஓரளவுக்கே புரிந்து கொண்டான். ஆழ்ந்து கற்றுத் தெளிந்தான் என்று சொல்ல முடியாது.

*வார்த்தை* என்றும் *பெருவார்த்தை* என்றும் *மெய்ம்மைப் பெருவார்த்தை* என்றும் பகவத்கீதை, அதிலும் முக்கியமாகக் கண்ணன் தரும் அபயப்ரதாநமான சரமச்லோகம் போற்றப் படுகிறது. இதை உண்மையில் உணர்ந்து அதன்படி நடைமுறையில் இருந்து காட்டியவர்கள் நமது ஆழ்வார்களும் ஆசார்யர்களுமே.

பாரத யுத்தத்தின் நடத்தையைப் பிறவிக்குருடனான த்ருதராஷ்ட்ரனுக்கு க்ருஷ்ண பக்தனான ஸஞ்சயன் விவரிக்கிறான். த்ருதராஷ்ட்ரன் வெளிக்கண்ணில்லாதவன் மட்டுமல்ல. உட்கண்ணும் இல்லாதவன். கீதையில் முதலத்யாயம் *அர்ஜுனவிஷாதயோகம்* எனப்படும். இந்த அத்யாயமும் இரண்டாம் அத்யாயத்தில் முதல் 11 ச்லோகங்களும் சாஸ்த்ரத்துக்கு முன்னுரையாக அமைந்துள்ளன. இரண்டாம் அத்யாயம் 12ம் ச்லோகத்திலிருந்தே கீதா சாஸ்த்ர ஆரம்பம் என்பது நமது ஆசார்யர்களின் கொள்கை. பகவத்கீதையின் ஸாரமான பொருள்களை *கீதார்த்த ஸங்க்ரஹம்* என்னும் நூலில் பரமாசார்யரான ஸ்ரீஆளவந்தார் சுருக்கமாக அருளிச்செய்தார். அதைத் தழுவி நம் ஸ்வாமி எம்பெருமானார் *கீதா பாஷ்யம்* என்னும் விரிவான நூலை அருளிச் செய்துள்ளார். இந்த பாஷ்யத்தை விளக்குவதாக அமைந்துள்ளது ஸ்ரீ

வேதாந்த தேசிகர் அருளிச்செய்த "தாத்பர்ய சந்த்ரிகை" என்னும் க்ரந்தம்.

அஸ்தாநஸ்நேஹகாருண்ய தர்மாதர்மதியாகுலம் |
பார்த்தம் ப்ரபந்நமுத்திச்ய சாஸ்த்ராவதரணம் க்ருதம் ||

இடமில்லாதவிடத்தில் வைக்கப்பட்ட அன்பு தயை இவைகளால் வரும் "தர்மயுத்தம் அதர்மம்" என்ற எண்ணத்தினால் கலக்க முற்றவனும் கண்ணனைச் சரணம் பற்றினவனுமான பார்த்தனை உத்தேசித்து (வ்யாஜமாகக் கொண்டு) கீதா சாஸ்த்ரத்தின் உபோத்காதம் (முதலத்யாயமும் இரண்டாம் அத்யாயத்தின் முதல் 11 ச்லோகங்களும்) அருளிச்செய்யப்பட்டது. இது கீதார்த்த ஸங்க்ரஹத்தின் ஐந்தாவது ச்லோகம். பகவத்கீதையில் "நத்வேவாஹம்" (1-12) என்ற ச்லோகம் தொடங்கி "ஸர்வதர்மான் பரித்யஜ்ய" (18-66) வரை கீதா சாஸ்த்ரம் என்பது நம் ஸ்வாமி எம்பெருமானார் திருவுள்ளம்.

ஸ்வதர்மஜ்ஞாநவைராக்யஸாத்யபக்த்யேக கோசர: |
நாராயண: பரம் ப்ரஹ்ம கீதாசாஸ்த்ரே ஸமீரித: ||

என்பது கீதார்த்த ஸங்க்ரஹத்தின் முதல் ச்லோகமாகும். ஸ்வதர்ம அநுஷ்டாநத்தினாலும் (வர்ணம் ஆச்ரமம் இவற்றிற்குச் சேர கர்மாநுஷ்டாநம்), ஆத்மஜ்ஞாநத்தினாலும் வைராக்யத்தினாலும் உண்டான பக்தியோகம் ஒன்றினாலேயே அடையப்படுமவனான மேலான தெய்வமான நாராயணன் கீதா சாஸ்த்ரத்தினால் நன்றாக அருளிச்செய்யப்படுகிறான். நாராயணனே உத்க்ருஷ்டமான தெய்வம். அவன்தான் பரப்ரஹ்மம். அவன் பக்தியோகஸாத்யன் என்று உலகத்தவர்களுக்குச் சொல்ல வந்தது கீதா சாஸ்த்ரம்.



இதுவே கீதா சாஸ்த்ரத்தின் திரண்ட பொருளாகும். கர்மாநுஷ்டாநத்தினாலும் ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தை (பகவச்சேஷத்வத்தை) உள்ளபடி அறிவதாலும் மனம் நிர்மலமான (தோஷமற்றதாகி சுத்தி பெற்ற மனத்தவன்) ஒருவனுக்கே பகவானை இடைவிடாது மனனம் செய்வதாகிற பக்தி ஸித்திக்கும். இப்படி உபாஸிப்பவனுக்கு பகவத்ப்ராப்தி (அவனை புருஷார்த்தமாக அடைதல்) ஸித்திக்கிறது. ஆக, கீதா சாஸ்த்ரம் கண்ணனெம்பெருமானின் பரத்வத்தைச் சொல்லுவதிலும் பக்தியே அவனை அடையத்தக்க உபாயம் என்ற உண்மையைச் சொல்லுவதிலும் முக்கிய நோக்குடையது என்று தெரிகிறது.

சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட முறைகளின்படி எதுவும் குறையாமல் பக்தியை நியமத்துடன் அநுஷ்டிப்பது பக்தியோகம். இதற்கு கர்மாநுஷ்டாநமும் ஆத்ம யாதாத்ம்ய ஜ்ஞாநமும் அங்கங்கள். பக்தியே உயர்ந்த மோக்ஷோபாயம் என்று அறுதியிட்டருளுகிறார் தமது கீதா பாஷ்யத்தில் நம் ஸ்வாமி எம்பெருமானார். இப்படிச் சொல்லப்பட்ட பக்தியோகத்தையும் புறக்கணித்து, பகவானே உபாயமும் உபேயமும் என்று அவனைப் பற்றுவது சரணாகதி. இதுவே கீதா தாத்பர்யம் என்பதை ரஹஸ்ய க்ரந்தங்களில் நமது ஆசார்யர்கள் ஸ்தாபித்தருளியுள்ளார்கள். சரணாகதி கத்யத்தில் நம் ஸ்வாமி எம்பெருமானார் அநுஷ்டித்துக் காட்டிய மேலான அர்த்தம் இதுவே. "பக்த்யேக கோசர:" என்பதற்கு முமுக்ஷுவான பக்தனுக்கு உபாயமும் உபேயமும் எம்பெருமானே என்று ஏக சப்தார்த்தமாகச் சொல்வதுண்டு.

பகவத் ப்ரஸாதத்தினால் கிடைக்கப் பெற்ற திவ்ய சக்ஷுஸ்ஸினால் (தெய்வீகக்கண்ணினால்) போர்க்களத்தில் நடப்பதையெல்லாம் கண்டு, குருடனான அரசனுக்கு (த்ருதராஷ்ட்ரனுக்கு) ஸஞ்ஜயன்

வர்ணிப்பதாகச் சரித்திரம். கீதையில் முதல்முன்னம் அரசனின் கேள்வி பார்க்கப்படுகிறது.

> தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ : |
> மாமகா : பாண்டவாச் சைவ கிமகுர்வத ஸஞ்ஜய ||

தர்மம் விளையும் பூமியான குருக்ஷேத்திரத்தில் யுத்தம் பண்ணுவதில் முயற்சி கொண்டு கூடியிருந்த என்னவர்களும் பாண்டவர்களும் ( என் பிள்ளைகளும் பாண்டுகுமாரர்களும் ) என்ன செய்தார்கள்? இது கேள்வி. யுத்தம் செய்யக் கூடியவர்கள் என்ன செய்தார்கள் என்று ஏன் கேட்க வேண்டும்? என் பிள்ளைகள் என்று தனது துரபிமானத்தை முதலிலேயே காட்டிவிடுகிறான் அரசன். தன் பிள்ளை நிச்சயமாக வெற்றி பெறுவான் என்ற நம்பிக்கை அவனுக்கில்லை. தர்மம் விளையும் பூமியின் மகிமையினாலும் தமது ஸாத்விக ஸ்வபாவத்தாலும், பொதுவாக நாசத்தை விரும்பாத தருமபுத்திரர் யுத்தத்தினின்றும் விலகிவிட்டாரா? அல்லது க்ஷேத்ர மகிமையினால் என் பிள்ளை சிறிது நிலம் தந்து அவர்களுடன் ஸமாதானம் செய்து கொண்டானா? இது அரசன் மனதிலோடும் எண்ணம். ஆனால் ஸஞ்ஜயன் பதில் இவ்வெண்ணத்தை ப்ரதிபலிக்கவில்லை. கீதா பாஷ்யத்தில் நம் ஸ்வாமி எம்பெருமானார் முதலத்யாயத்தில் ஒரு சில ச்லோகங்களுக்கே வ்யாக்யானம் அருளிச் செய்துள்ளார். துரியோதனன் தனது ஸேனையின் பலத்தையும் எதிரி ஸைன்யத்தின் பலத்தையும் சீர் தூக்கிப் பார்க்கிறான். பத்தாவது ச்லோகமிது : —

> அபர்யாப்தம் ததஸ்மாகம் பலம் பீஷ்மாபிரக்ஷிதம் |
> பர்யாப்தம் த்விதமேதேஷாம் பலம் பீமாபிரக்ஷிதம் ||
> பீஷ்மமேவாபிரக்ஷந்து பவந்த : ஸர்வ ஏவஹி |



என்று அவன் ஆசார்யரான துரோணரை வேண்டுகிறான். இங்கு துரியோதனன் "பீஷ்மரால் ரக்ஷிக்கப்பட்ட நமது சேனையின் பலம் போதாததாயுள்ளது. (அபர்யாப்தம்) பீமசேனனால் ரக்ஷிக்கப்பட்ட அவர்கள் சேனையின் பலமோ போதியதாகவே உள்ளது. (பர்யாப்தம்)" என்கிறான். ஆதலால் "**நீங்கள் எல்லோரும் கூடி பீஷ்மரை நன்றாக ரக்ஷிக்க வேண்டும்**" (**அவருக்குத் துணை** புரிய வேண்டும்) என்றும் கேட்டுக் கொள்கிறான். இங்கு நம் ஸ்வாமி எம்பெருமானார் "**துர்யோதந : அந்தர்விஷண்ணோபவத்**" என்று பாஷ்யமிடுகிறார். மேலே பீஷ்மர் சங்கொலி எழுப்பியதை, "தஸ்யவிஷாதமாலக்ஷ்ய பீஷ்ம : தஸ்ய ஹர்ஷம்ஜநயிதும்" (அவன் துக்கத்தைக் கண்ட பீஷ்மர் அவனை உத்ஸாஹ மூட்டுவதற்காக) சங்கொலி எழுப்பினார் என்று கூறுகிறார்.

துரியோதனன் தன் வெற்றி நிச்சயம் என்று எப்பொழுதும் நம்பும் இயல்பினன். யுத்தத்தில் யாவரும் அழிந்து தான் தனியனாக இருந்தபோது கூட அச்வத்தாமனை சேனை முதல்வனாக ஆக்கி யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதில் முனைந்தவன். பாண்டவ சேனையைவிட தனது சேனை பெரியதாயிருந்தும், "நமது சேனாபலம் போதாது – அவர்கள் பலம் போதியது" என்று அவனே சொல்லுவானேன்? அவன் உள்ளம் மிகவும் கலக்கமுற்றான் என்றும் அந்த கலக்கத்தை கண்டு பீஷ்மர் சங்க நாதம் பண்ணினார் என்றும் சொல்லப்படுகிறது. இந்த ச்லோகத்தில் தத்வார்த்தம் எதுவுமில்லை. கதைப் போக்கு மட்டும் தான் உள்ளது. ஆயினும் துரியோதனன் பேச்சை ஆழ்ந்து ஆராய்ந்து அவன் உள்ளத்திலோடும் கருத்தை விளக்குவது நம் ஸ்வாமி எம்பெருமானார் பாஷ்யத்தின் தனிச்சிறப்பு. கதைப் போக்கையே இப்படி ஆழ்ந்து நோக்கி ப்ரகரணத்துக்குச் சேர விளக்கும் ஸ்வாமி தத்வார்த்தங்களை இன்னும் ஆழ்ந்து நோக்கி விளக்குவார் என்பதைச் சொல்லவும் வேணுமோ?

ஸ்ரீராமாயணத்தில் இளையபெருமாள் அண்ணனுடன் வனத்திற்குக் கிளம்புகையில் ஸுமித்ராதேவி அவனை ஆசீர்வதித்து *ராமம் தசரதம் வித்தி மாம் வித்தி ஜநகாத்மஜாம்* என்ற ப்ரஸித்தமான ச்லோகத்தைப் புத்திமதியாகச் சொல்லுகிறாள். *ராமனைத் தகப்பனாகக் கொள். ஜானகியைத் தாயாகக் கொள்.* என்ற பொருளே மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது தெரிகிறது. ஆனால் பெரியவாச்சான்பிள்ளை *தசரதனை ராமனாக எண்ணு வாய். என்னை ஸீதையாக நினை* என்று தாய் சொல்லுவதாக விளக்குகிறார். இதுவே இளையபெருமாளுடைய இயல்புக்குச் சேரும்.*உனக்கு எல்லாமான ஸ்ரீராமனை ஸேவிக்கும்பொழுது தகப்பனையும் அன்புடன் நினைப்பாயாக* என்று தாய் மகனுக்குச் சொல்லுகிறாள்* என்று இலக்குவன் இயல்புக்குச் சேர இங்கு வ்யாக்யான ஸாரம்.

பாண்டவர் மேலுள்ள பகையுணர்ச்சியால் துரியோதனன், *அவர்கள் அழிவார்கள், நானே வெற்றி பெறுவேன்* என்று மனக் கோட்டை கட்டுகிறான். ஆனால் இரு சேனைகளிடமுள்ள மகாவீரர்களைச் சொல்லும்போது (ச்லோ. 4-9) பாண்டவ ஸைன்யத்திலேயே அதிகமான மஹாரதர்கள் உள்ளதாகக் கணக்கிடுகிறான். தனது ஸைன்யத்தை *பீஷ்மாபிரக்ஷிதம்* என்பது யுக்தம். பீஷ்மர் மஹா வீரர், சேனாதிபதி, குலமுதல்வர் என்று பலபடியாலும் பெருமை பெற்றவர். எதிரி ஸைன்யத்தில் சேனாதிபதி த்ருஷ்டத்யும்னன். தலைசிறந்த வீரன் அர்ஜுனன் (வில்லாளி). முதல்வன் தருமன். இப்படியிருக்க அவர்களைச் சொல்லாமல் *பீமாபிரக்ஷிதம்* என்று பீஷ்மருக்கு எதிர்த்தட்டாக பீமனைச் சொல்வானேன்?

சிறு வயதிலிருந்தே பீமனிடம்தான் துரியோதனனுக்கு பயம்.



இவனையும் இவன் தம்பிகளையும் விளையாட்டில்கூட துன்புறுத்தி மகிழ்ந்தவன் பீமனே. அவனே இவர்களைத் தனித்தனியாகக் கொல்லுவதாக சபதமும் பண்ணியுள்ளவன். அவனிடம் தனி பயமிருந்தது துரியோதனனுக்கு. தன் சபதத்தைக் கட்டாயம் முடிக்கக்கூடிய பலம் பீமனுக்கு உண்டு என்பது துரியோதனனுக்குத் தெரியும். மேலும் பீஷ்மரைச் சேனாதிபதியாக இருத்தினாலும் அவர் தருமத்திலேயே கருத்துள்ள பாண்டவர்களிடம் தனி அன்பு பூண்டவர். அவர்களிடம் தம் வலிமையைப் பூரணமாகக் காட்ட மாட்டார் என்ற ஐயமும் துரியோதனனுக்கு உண்டு. போரின் துவக்கத்தில் தருமர் தன்னை வந்து வணங்கியபோது *ஜயம் பெறுவாய்* என்று அவனை ஆசீர்வதித்துத் தன்னை முடிக்கும் வழியையும் காட்டித்தந்தார் பீஷ்மர். இதையெல்லாம் மனதில் கொண்டதால்தான் துரியோதனன் மனநடுக்கமுற்று துரோணரை முன் கூறியபடி வேண்டியதாக வ்யாக்யானமிடும் நம் ஸ்வாமி எம்பெருமானாரின் திருவுள்ளக் கருத்தை தாத்பர்ய சந்திரிகையில் தேசிகன் விரிவுக்கஞ்சாமல் நன்கு விளக்கியுள்ளார்.

மேலே பீஷ்மர் சங்கொலியெழுப்பக்கண்டு பாண்டவ ஸைன்ய வீரர்கள் சங்கொலியெழுப்பியதை ஸஞ்ஜயன் அரசனிடம் சொல்லுகிறான். ஹ்ருஷீகேசன் பாஞ்சசன்னியத்தையும், தனஞ்ஜயன் தேவதத்தத்தையும் (அர்ஜுனனுடைய சங்கின் பெயர் இது) மற்ற வீரர்கள் தத்தம் சங்கங்களையும் உறக்க சப்தித்தனர் என்கிறான் ஸஞ்ஜயன். இங்கும் ஸ்வாமியின் பாஷ்யம் தனிச்சிறப்புடன் விளங்குகிறது. பீஷ்மரின் அச்சங்கொலியைக் கேட்டு, *ஸர்வேச்வரேச்வர : பார்த்தஸாரதி : ரதீ ச....ஸ்ரீமத்பாஞ்சஜன்யதேவதத்தௌ திவ்யௌ சங்கௌ ப்ரதத்மது : * என்றருளுகிறார் நம் ஸ்வாமி. இந்த அழகான பங்க்திகளை விளக்கவும் வேணுமோ? ரதி என்பது யஜமானனை. ஸாரதி என்பது பணியாளனை. ஆனால்

இங்கு ஸாரதி ஸர்வேச்வரேச்வரன். இவர்கள் சங்கங்களை ஸ்ரீமத் – வெற்றி பொருந்தியவை என்றும் திவ்யௌ (தெய்வீகமானவை) என்றும் குறிப்பிடுகிறார். அப்பொழுதே கௌரவர்கள் தங்கள் பலம் பயனற்றது என்று நெஞ்சுடைந்து உணர்ந்தனர் என்று அவர்கள் வெற்றியை விரும்பிய அரசனிடம் ஸஞ்ஜயன் கூறியதாக பாஷ்யம் அமைந்துள்ளது. ஸ்ரீபார்த்தஸாரதியான பகவான் இருக்கும் இடத்தில் வெற்றி நிச்சயம் என்று காட்டப்பட்டதாயிற்று. இதுவே கீதையின் முடிவில் ஸஞ்ஜயன் சொல்லுவதும்.

இதே சமயத்தில் அர்ஜுனன் நெஞ்சில் இன்னொருவிதமான மிகப்பெருங்கலக்கத்தைக் (கண்ணன் விளைவித்ததுதான் இது) காண்கிறோம். எதிரி ஸைன்யத்தில் கிட்டின உறவினர்கள் (பாட்டனார், மாமன் முதலானோர்) நண்பர்கள், ஆசாரியர்கள் யாவரும் அணிவகுத்து நிற்கக்கண்ட பார்த்தன் கருணையால் உந்தப்பட்டு இவர்களை *ஸ்வஜந* (தன்னவர்கள்) என்று, *இவர்களைக் கொல்லுவது மாபாபமன்றோ? பல வீரர்களைக் கொன்று அவர்களுடைய ஸ்த்ரீகளை விதவைகளாக்கினால் அவர்கள் குல தர்மத்தினின்றும் நழுவி பாபத்தில் இழியக்கூடும். குலநாசம் ஏற்படும். இப்பாபச்செயலில் நான் இழிய மாட்டேன். சண்டையிடாத எங்களைக் கௌரவர்கள் கொன்று வெற்றி பெற்று ராஜ்யமாளட்டும்* என்று கண்ணனிடம் கூறினான்.

அர்ஜுனனுடைய உள்ளம் கருணை நிறம்பியது. கருணையுள்ளம் படைத்தவனே சிறந்த வீரனாக முடியும். அவன் ஸ்வபாவம் உத்தமமானது. எதிரிகளானாலும் *அவர்கள் க்ஷேமப்படட்டும் நானே கஷ்டத்தை அநுபவிக்கிறேன்* என்றது உத்தம குணத்தினால் தான். *இவர்கள் துர்க்கதியைக் கண்டு சொன்னேன். நான் ஒருவன் நரகம் புகுந்தாலும் இவர்கள் யாவரும் வாழ்ச்சி பெறுவார்களன்றோ?* என்று சொன்ன நம் ஸ்வாமி எம்பெருமானாரின் சரித்திரம் இங்கு நினைக்கத்தகுந்தது.



ஆனால் அர்ஜுனன் கருணை தவறான இடத்தில் பாய்ந்தது. அதனால் அக்கருணை அதர்மமானது, குற்றமுற்றது. *அஸ்தாந ஸ்நேஹ காருண்ய தர்மா தர்ம தியாகுலம்* என்று கீதா ஸங்க்ரஹ ச்லோகத்தில் இதைக் காட்டியருளுகிறார் ஸ்ரீஆளவந்தார்.

*நீர்மையில் நூற்றுவர் வீய* என்பது ஆழ்வார் திருவாக்கு. நீர்மையின்மையால் கௌரவர் மாய்ந்தனர். நீர்மை நெஞ்சம் படைத்த பாண்டவர் வாழ்ந்தனர். ராஜஸூயத்தின் பொழுது கெட்ட சகுனம் காண, வ்யாஸர், *உன் காரணமாக இவ்வுலகம் அழியப்போவதைக் காட்டுகிறது இச்சகுனம்* என்ன, மிகவும் சோகமடைந்து தருமன் அதிகமான பொறுமையைக் கைக்கொண்டான். த்ரௌபதியின் பேராபத்திலும் மௌனமாக இருந்தான். ஆனால் யுத்தத்தின் பொழுது காட்டப்பட்ட கருணை இடமில்லாதவிடத்தில் காட்டப்பட்டதாகப் பழிக்கப்படுகிறது. அர்ஜுனன் யுத்தத்தினின்றும் விலகுவது அதர்மம். யுத்தம் பண்ணுவதே தர்மம் என்பதை அவன் நெஞ்சிலே வலியுறுத்தவே கீதை அவதரித்தது. அர்ஜுனனும் மாயோனையடிபணிந்து, *எனக்கு நன்மையை நீயே நிச்சயித்துச் சொல்ல வல்லவன். சிஷ்யனாக அடிபணிந்து நின்று கேட்கும் எனக்குச் சொல்வாயாக* என்று கேட்க, ப்ரபன்னனான அவனை வ்யாஜமாகக் கொண்டு நாம் எல்லோரும் பயனடையும் பொருட்டு கீதா சாஸ்த்ரத்தை உபதேசம் பண்ண முற்படுகிறான் கண்ணனெம்பெருமான்.

# இரண்டாம் அத்தியாயம் – ஸாங்க்ய யோகம்

அர்ஜுனன் வேதம் மற்றும் இதர சாஸ்த்ரங்களை ஓதி உணர்ந்தவன். யுத்தம் நடந்து அதனால் பல ஸ்த்ரீகள் தோஷமுள்ள சரித்திரம் உள்ளவர்கள் ஆகலாம். இதனால் குலத்துக்கு மாசு ஏற்படும். மேலும் தர்மமடியான ப்ரஜைகள் இல்லாமல் பெரியோர்களுக்கு ச்ராத்த தர்ப்பணாதிகள் பண்ணாமல் குலதர்மமே அழிந்துவிடும். இவற்றையெல்லாம் கண்ணனிடம் சொல்லி (1–40–44) *யுத்தம் வேண்டாம். கௌரவர்களே அரசாளட்டும்* என்றதால் அவன் ஓரளவிற்கு அறிவுள்ளவன் என்று தெரிகிறது. ஆனால் *பூஜைக்குரிய பிதாமஹரையும் (பீஷ்மரையும்) ஆசார்யரையும் (த்ரோணரையும்) அம்புகளால் எப்படி அடிப்பேன்?* என்று கேட்பதால் உண்மையான அறிவுள்ளவன் என்று சொல்ல முடியாது. சரீரம் வேறு. ஆத்மா வேறு. மேலும் ஆத்மா அழிவற்றது என்ற ஜ்ஞாநமிருந்தால் இந்தப் பேச்சுக்கு இடமேயில்லை. கீதோபதேசம் ஆகி யுத்தத்தில் முழு மனத்துடன் ஈடுபட்டபோதும் தனதாற்றல் முழுவதையும் அவன் பீஷ்மரிடம் காட்டவில்லை. இதனால் கண்ணன் தனது சபதத்தையும் விட்டு சக்ராயுதத்தை எடுத்துக் கொண்டு பீஷ்மரை எதிர்க்க முற்பட்டபோதே அர்ஜுனன் அவனை தடுத்து நிறுத்தித் தான் தனது நிஜ வீரத்துடன் சண்டையிடுவதாகச் சொன்னான். அம்பினால் அழியக்கூடியது எப்படியும் ஒருநாள் அழிய வேண்டிய உடல் மட்டுமே. இதை அழியாமல் காப்பாற்றிக் கொள்வது என்பது முடியாத காரியம்.

அசோச்யாநந்வசோசஸ்த்வம் ப்ரஜ்ஞாவாதாம்ச்ச பாஷஸே |
கதாஸூநகதாஸூம்ச்ச நாநுசோசந்தி பண்டிதா: ||

என்கிறான் பகவான். ஏதோ அறிந்தவன் போல் பேசிக்கொண்டு வருத்தப்படவேண்டாத விஷயத்தில் வருத்தப்படுகிறாய். உண்மை அறிவுள்ள பண்டிதர்கள் இருப்பவர்களுக்காகவோ இறந்தவர்களு



க்காகவோ வருந்துவதில்லை. இந்த துக்கம், *ஆத்மாவும் தேஹமும் வேறுபட்டனவல்ல, ஒன்றே* என்ற தவறான உணர்வினால் ஏற்படுகிறது. இவற்றை ஒன்று என ப்ரமிப்பவன் அவிவேகி. (பகுத்தறிவில்லாதவன்) கீதா சாஸ்த்ராரம்பத்தில் கண்ணனுடைய உபதேசம் இந்த தேஹாத்மப்ரமமான மோஹம் (கலக்கம்) விலகும் வகையில் அமைகிறது. ஸ்ரீஆளவந்தார் அருளிச்செய்த இரண்டாம் அத்யாய ஸங்க்ரஹ ச்லோகம் –

நித்யாத்மாஸங்க கர்மேஹாகோசரா ஸாங்க்யயோகதீ: |
த்விதீயே ஸ்திததீலக்ஷா ப்ரோக்தா தந்மோஹசாந்தயே ||

[தந்மோஹசாந்தயே] – அர்ஜுனனுடைய கலக்கத்தைப் போக்குவதற்காக, [நித்ய – ஆத்ம – அஸங்க – கர்ம – ஈஹா – கோசரா] நித்யமான ஆத்மாவையும், பற்றற்ற கர்மயோகத்தில் விருப்பத்தையும் விஷயமாகக் கொண்ட, [ஸ்திததீலக்ஷா] ஜ்ஞாந யோகத்தில் கொண்டுவிடுமதான (பலனாகவுடைய) [ஸாங்க்ய – யோக – தீ:] ஆத்மா, கர்மா இவைகளைப் பற்றிய உண்மையறிவு (கண்ணனால்) பேசப்பட்டது.

நம்மிடம் பலபல தோஷங்கள் இருக்கலாம். பொய் சொல்லுவது வஞ்சிப்பது முதலான பாபங்களைவிட *புநரபிஜநநம், புநரபி மரணம்* என்னும்படியான பிறவிச்சுழலில் மூட்டும் ப்ரபல பாபம் தேஹாத்மாபிமானம் என்கிற அஜ்ஞாநமே. இதுதான் எல்லா துன்பங்களுக்கும் ஆணிவேராகும். தனக்கு நலனளிக்கும் அறிவை நிச்சயித்துச் சொல்லுமாறு பார்த்தனால் வேண்டப்பட்ட ஸ்ரீபார்த்தஸாரதி முதலில் *ஆத்மா தேஹத்தினின்றும் வேறுபட்டது, அழிவற்றது* என்பதையே பரக்கச் சொல்லுகிறான். *ஸங்க்யா* என்றால் *எண்* என்று பொருள். இங்கு புத்தி, அறிவு என்ற

பொருளில் சொல்லுகிறது. புத்தியால் – அறிவால் நிர்ணயித்துக் கொள்ள வேண்டிய ப்ராமாணிகமான தத்வமான ஆத்மாவை ஸாங்க்யம் என்றும் அதைப்பற்றிய ஞ்ஞாநத்தை ஸாங்க்யதீ : என்றும் சொல்லுகிறது. நித்யாத்ம கோசரா என்பது ஸாங்க்யதீ : அஸங்க கர்ம ஈஹா என்பது யோகதீ : பலனில் பற்றற்ற கர்ம யோகத்தைப் பற்றிய ஞ்ஞாநம். இவற்றை மோஹ சாந்திக்காக (கலக்கம் தெளிவதற்காக) உபதேசிக்கிறுன் கண்ணன்.

நாஞே, நீயோ இந்த அரசர்களோ இல்லாத காலமே இல்லே. வருங்காலத்திலும் நாம் எல்லோரும் இல்லாமல் இருக்கப் போவதில்லே. சரீரத்தில் உள்ள ஆத்மா, (அந்த சரீரத்தின்) பிள்ளேத் தனம். இளமை, முதுமை முதலியவைகளே எப்படிக் கடக்கிறதோ அதே போல் உடல் மரித்ததும் இன்னெரு உடலில் புகுகிறது. ஆத்மாவை உள்ளபடி அறிந்தவன் இதனுல் கலங்குவதில்லே. (2–1 2 ,1 3 ) சரீரங்கள் மாறுபாடுகள் அடையக் கூடியவை. அழியக் கூடியவை. ஆத்மா அப்படியல்ல. அழியாதது. மாறுபாடடையாதது. என்னேப்போன்று நீயும் இவ்வரசர்களும் எப்பொழுதும் உள்ளவர்கள். இப்பொழுது உள்ள உடல் போனுல் வேறு ஒரு உடல் கிடைக்கிறது. புத்தியுள்ளவன் இதுபற்றிக் கலங்கமாட்டான். அழிவுள்ள சரீரமும் அழிவற்ற ஆத்மாவும் ஒன்றல்ல. ஸாங்க்யதீ : என்பது நித்யமான (எக்காலத்திலும் அழியாமலுள்ள) ஆத்மாவைப் பற்றிய தெளிந்த அறிவு. இதை ஸ்ரீஆளவந்தார் நித்யாத்ம கோசரா என்ற சொற்களால் விவரித்தார். கண்ணன் 2–1 7 ,2 3 2 4 ச்லோகங்களால் விவரிக்கிறுன். இந்த ஆத்மாவை யாராலும் அழிக்கமுடியாது. நெருப்பால் கொளுத்தமுடியாது. நீரால் நனேக்க முடியாது. காற்றுல் உலர்த்த முடியாது. ஆத்மா எப்பொழுதும் ஒரே நிலேயில் மாற்றமடையாமல் உள்ளது. ஜீவன் அசித்தினுள் புகுந்து இருக்க முடியும். அசித்து ஜீவனுள் புக முடியாது. நீர்



ஆத்மாவை நனேக்க முடியாது என்பதினுல் இது சொல்லப்பட்டது. சரீரம் பல பொருள்களின் சேர்க்கை. இந்தக் கட்டுக்கோப்பு குலேந்தால் சரீரம் குலேந்துவிடும். (முடிந்துவிடும்) இந்தச் சரீரத்தின் முடிவு (மரணம்) பற்றி வருந்தவேண்டியதில்லே. பிறப்பு இறப்பு இவை சரீரத்தைப் பற்றி வருபவை. பிறந்தவன் இறப்பது நிச்சயம். அதுபோல இறந்தவன் பிறப்பதும் தவிர்க்கமுடியாததே.இவ் விஷயத்தில் வருத்தத்துக்கு இடமேயில்லே.

1 2 வது ச்லோகத்தில் ஆத்மபர பேதமும் ஆத்ம ஆத்ம பேதமும் காட்டப்பட்டுள்ளதை முக்கியமாக அறிய வேண்டும். கண்ணன் நாராயணனின்றும் வேறுபட்டவனல்ல. கண்ணன் பரம்பொருள் என்பது ப்ரமாணஸித்தம். முதலில் "நான் இல்லாத காலமே இல்லே" என்றுன், அதுபோல, "நீ இல்லாத காலமே இல்லே" என்றதால் நான் (பரம்பொருள்) நீ ( ஜீவன்) வெவ்வேறு என்பது தெளிவு. அதுபோல் இவ்வரசர்கள் என்று பன்மையில் சொன்னதால், பலபல உடல்களில் உள்ள வெவ்வேறுன பல ஜீவர்களேச் சொன்னதாயிற்று. பரம்பொருளான நான் எப்பொழுதும் இருப்பவன். ஜீவாத்மாவான நீயும் அப்படியே. பல ஜீவர்களான இவ்வரசர்களும் அப்படியே.

இனி யோகதீ : ப்ரோக்தா அஸங்க கர்ம ஈஹா கோசரா என்பனவற்றைச் சிறிது விசாரிப்போம். கீதையில் யோகம் என்கிற சொல் ஞ்ஞாநம், பக்தி முதலான பல பொருள்களில் சொல்லப்படுகிறது. இங்கு ஸங்கத்தை (பற்றை) த்யஜித்து (விட்டுவிட்டு) அதாவது பலத்தில் ஆசை சிறிதும் இல்லாமல் செய்யப்படும் கர்மாநுஷ்டாநத்தை அர்த்தமாகச் சொல்லுகிறது. பலஸங்கம் (பயனில் ஆசை) துளியும் கூடாது என்பது மிக முக்கியமான அறிவுரையாகும். எதைச் செய்தாலும் பயனேக் குறித்துச் செய்வது

மனித இயல்பு என்பதை நம்முள் அந்தராத்மாவாக உறையும் பகவான் நன்ருக அறிவான். "கர்மண்யேவ அதிகாரஸ்தே மா பலேஷு கதாசந" கர்மாநுஷ்டாநத்தில் மட்டுமே உனக்கு அதிகாரமுண்டு. அதின் பலனில் எப்போதும் கண் வையாதே (2-47) என்று பகவான் வலியுறுத்துகிருன். யுத்தம் உன் கடமை என்று யுத்தம் பண்ணு. ஸுகம், துக்கம், லாபம், நஷ்டம், வெற்றி, தோல்வி இவற்றைக் கணிசியாமல் (எல்லாவற்றையும் ஸமமாக எண்ணி) யுத்தம் உன் தர்மம் என்று (என் ஆஜ்ஞை யென்று) அதைச் செய்வாயாக. இதனுல் பாபம் உன்னேயடையாது. வெற்றியினுல் ராஜ்யலாபம், ஸுகம், ஆநந்தம். தோல்வியினுல் ராஜ்யநஷ்டம், துக்கம். யுத்தத்தின் முடிவு எதுவாயினும் ஆகலாம். ஜயத்தால் ஆநந்தமும் தோல்வியால் க்லேசமும் படக் கூடாது. மனம் விகாரமடைதல் கூடாது. ராஜ்ய லாபத்தையும் வனவாஸத்தையும் ஒன்ருக எண்ணி வனவாஸத்தில் மகிழ்ச்சியுடன் ஈடுபட்டான் சக்ரவர்த்தித் திருமகன். இந்நிலே நமக்குமாக வேண்டும்.

எம்பெருமானுர் தமது அந்திம தசையில் சிஷ்யர்களுக்குப் பண்ணிய உபதேசத்தில் இது முக்கியம். "சரீரத்தைப் பற்றியோ ஆத்மாவைப் பற்றியோ நாம் கவலேப்பட வேண்டாம். சிறையிலுள்ளவனுக்குச் சோறிடுவது அரசன் பொறுப்பு. கர்மாநுகுணமாக பகவான் இச்சரீரத்தை நடத்துகிருன். ஆத்ம நலனும் பகவானுடைய பொறுப்பே. இரண்டில் எதைப்பற்றியும் கவலேப்படாமல் ஸ்ரீபாஷ்யம், பகவத்விஷயம் போன்ற க்ரந்தங்களே ஸேவிப்பதிலும் பகவத் பாகவத கைங்கர்யத்திலும் காலத்தைப் போக்குங்கள்" என்று ஸ்வாமியின் உபதேசம்.

நெடுகிய காலம் பகவதாராதந ரூபமான கர்மாநுஷ்டாநத்தில்



ஈடுபடுவதால் மனம் மாசற்றுத் தூய்மை பெறுகிறது. விருப்பு வெறுப்பு இல்லாமலிருப்பதே மனத்தூய்மை. இப்படி சுத்தமான மனத்துடன் ஜீவாத்மாவைப்பற்றி சிந்தநம் பண்ணுவது ஸ்திரப்ரஜ்ஞை எனப்படும் ஜ்ஞாநநிஷ்டை. இதனுல் ஏற்படுவது பரிசுத்த ஜீவ ஸாக்ஷாத்காரம். அதாவது, தேஹமே ஆத்மா என்ற ப்ரமம் பூராவாக விலகுகை. பற்றற்ற கர்மாநுஷ்டாநம் ஸ்திதப்ரஜ்ஞ லக்ஷா – ஜ்ஞாந யோகத்தைப் பலனுக உடையது. ஜ்ஞாந நிஷ்டை மிகவும் அரிது. இதற்கு உதவும் விஷயங்களே பகவான் மேலே விவரிக்கிருன். மனதில் தோன்றும் ஆசைகள் யாவற்றையும் துறந்து சித்தத்தை ஆத்மாவில் லயிக்கப்பண்ணுமவன் ஸ்திரப்ரஜ்ஞன் (ஜ்ஞாந நிஷ்டையில் ஆழ்ந்தவன்). இந்திரியங்களே விஷயங்களினின்றும் (கண் காது முதலியனவற்றுக்கு இன்சுவையுள்ள விஷயங்கள்) விலக்க வேண்டும். இதில் வெற்றி கண்டாலும் வாஸனே மீண்டும் அதிலே தூண்டிவிடும். பரம்த்ருஷ்ட்வா நிவர்த்ததே (2-59) என்கிறபடி ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்பட்டால்தான் இந்திரிய ஜயம் (ஆசைகளே வெல்வது) ஏற்படும். ஆத்ம தர்சனத்தால் (அநுபவத்தால்) இத்திரிய ஜயம். இந்திரிய ஜயத்தால் ஆத்மதர்சனம் என்ருல், இது அந்யோந்யாச்ரயம் (vicious circle) ஆகாதா என்று கேட்கலாம். இந்திரிய ஜயம் பகவத் ப்ரஸாதத்தால்தான் ஏற்படவேண்டும். ஆகவே ஆத்மாநுபவமும் எம்பெருமான் அருளினுல்தான் ஸித்திக்கும்.

ஆக, ஸாமாந்ய அறிவும் இந்த்ரியஜயமும் பெற்ற அர்ஜுனனுக்கு தேஹாத்ம ப்ரமம் (சரீரமே ஆத்மா என்ற எண்ணம்) விலகுவதற்காக தந்மோஹசாந்தயே (கீ.ஸங்.6) – ஆத்மாவைப் பற்றிய அறிவையும், அதற்கநுகுணமான பலத்தில் ஆசையில்லாமல் அநுஷ்டிக்கப்படும் கர்ம யோகத்தையும் கண்ணன் உபதேசித்தான் என்றதாயிற்று. கர்மாநுஷ்டாநத்தினுல் மனத்தூய்மை பெற்ற

வனே ஜ்ஞாந நிஷ்டைக்கு அதிகாரியாவான். *ப்ரஜஹாதி யதா காமாந்* (2-55) முதல் 4 ச்லோகங்களால் இந்த நிஷ்டை கண்ணனெம்பெருமானல் உபபாதிக்கப்படுகிறது.

கண் காது முதலான இந்த்ரியங்கள் செயல்படுகையில் ஜீவாத்ம சிந்தநமான ஜ்ஞாந நிஷ்டை தடைபடும். வெளி இந்த்ரியங்கள் ஒரு பொருளைச் சுவைக்கும் பொழுது மனது அந்த இந்த்ரியங்களுடன் சேர்ந்து செயல்படும். கண் ரூபத்துடனும் காது சப்தத்துடனும் நாக்கு ரஸத்துடனும் சேராமல் தடுத்து எல்லாம் ஜ்ஞாந நிஷ்டைக்கு அநுகுணமாக இருக்கும்படிப் பண்ணவேண்டும். ஆமை தன் கண் காது எல்லாவற்றையும் ஓட்டினுள் ஒடுக்கிக் கொள்வது போல இந்த்ரியங்களையும் மனதையும் வெளிவிஷயங்களில் சேரவொட்டாமல் தடுத்து ஜீவாத்மாவிடம் ஒருமைப்படுத்த வேண்டும். இந்த நிலை யதமாந ஸம்ஜ்ஞா எனப்படுகிறது.

ஆத்மா பற்பல ஜன்மங்களில் பற்பல உடல்களுடன் ஸம்பந்தப் பட்டு, அவ்வோ உடல்களைக் கொண்டு விஷயங்களை அநுபவித்திருப்பதால் மனதில் உண்டாகும் விருப்பு வெறுப்புகள் (ராகத்வேஷங்கள்) மனத்தூய்மையைப் பாழ்படுத்தும். இதனால் மனது ஆத்ம சிந்தனத்தில் ஊன்ற முடியாதலால் பாங்கல்லாததாய் ஆகி விடுகிறது. முதலில் விஷயங்களில் ஔதாஸீந்யத்தை (கவனித்தலில்லாமை - indifference) வளர்த்துக் கொள்ள வேண்டும். ஔதாஸீந்யமும் அநபிமுகத்வமும் மிகவும் அவசியம். அதாவது ஒரு விஷயத்தை (இன்பம் துன்பம் இவற்றில் மூட்டும் பொருள் - உயிருள்ளதோ அற்றதோ விஷயம் எனப்படுகிறது) பார்ப்பதையும், அதன் சுவையைக் கொண்டாடுவதையும் அறவே விலக்க வேண்டும். இந்த நிலையில் ராகத்வேஷங்கள் பசனப்பட்டு (சமைந்து) நாசமடைந்துவிடும். விருப்பு வெறுப்புகள் மாய்ந்



தாலும் அவற்றின் வாஸனை எளிதில் போகாது. மீண்டும் விஷயாநுபவத்தில் வாஸனை சேதநனைத் தூண்டவல்லது. ஆத்ம பரமாத்ம விஷயங்களில் மனது மூளுவதைத் தடை செய்யக்கூடும். ஆத்மவிஷயத்தின் போக்யதையை (இன்சுவையைக்) காட்டி மனதுக்கு அவ்விஷயத்தில் பற்றுதல் ஏற்படும்படியாக வேண்டும். இந்த போக்யதை மனதில் பதிந்தால் மற்றைய உலக விஷயங்களில் மனது செல்லாது. அப்பொழுது *ஆத்மந்யேவாத்மநா துஷ்ட:* (2-55) என்ற நிலை (மனது ஜீவாத்மாவினிடத்திலேயே இருந்து கொண்டு மற்றெதிலும் செல்லாமல் சிந்தநாநுபவம் பண்ணி ஸந்தோஷமடைதல்) ஏற்படும். மற்றைய விஷயங்களில் ஆசை தன்னடையே விட்டுப் போகும். இந்த அதிகாரி ஸ்திரப்ரஜ்ஞன் என்று அழைக்கப்படுகிறன். இவன் ஸுகத்தினல் இன்பமடைவதில்லை. துக்கத்தினல் சோர்வடைவதில்லை. ஆசை, பயம், கோபம் இவற்றை வெறுத்த நிலைத்த மனத்தினனுய் இருப்பவன் முநி எனப்படுகிறன். பரிசுத்த ஜீவனை மனக்கண்ணினல் கண்டு அதிலேயே ஊன்றியிருப்பது மேல் நிலை. இதுவே ஆத்மஸாக்ஷாத்கார தசை. ப்ரஹ்லாதனை அவன் தந்தை பலவித ஹிம்ஸைகளுக்கு - கொடிய பாம்புகளால் கடிப்பிக்கை, மலையிலிருந்து உருட்டுகை முதலானவைகட்கு ஆளாக்கிய பொழுது அவனுக்கு உடலும் தெரியவில்லை. ஆத்மாவும் தெரியவில்லை. இவற்றைக் கடந்த நிலையில் பரமாத்மாநுபவத்தில் அவன் நெஞ்சு ஊன்றி இருந்ததால் *நவிவேத ஆத்மநோ காத்ரம்* என்று ருஷி சொல்லுகிறர். இது போலவே ஜ்ஞாந நிஷ்டையான ஆத்ம ஸாக்ஷாத்கார தசையும் ஆகும்.

# மூன்றும் அத்தியாயம் – கர்ம யோகம்

மூன்றும் அத்யாயத்தில் முதல் ச்லோகத்தில் அர்ஜுனன் கண்ணனை ப்ரச்நம் பண்ணுகிறான். (கேள்வி கேட்கிறான்) மேலே *எனக்கு மேன்மை தருமதை **நிச்சயித்துச்** சொல்வீராக* என்று கேட்கிறான். அர்ஜுனன் யுத்தத்தினால் வரும் நாசத்தையே (அழிவையே) நினைத்து அதினின்றும் விலகப் பார்க்கிறான். தாயாயும் தந்தையாயும் உடன்பிறப்பாகவும் நண்பனாகவும் புகலாகவும் உள்ள நாராயணன் (கண்ணன்) அவனை தர்மத்தினின்றும் நழுவாமல் (பலஸங்கமற்ற) கர்மத்தை (கடமையை) நிறைவேற்றும்படி வலியுறுத்துகிறான். அர்ஜுனன் மனநிலைக்குச் சேர கேள்வி. அவனவனுக்குரிய தர்மத்தைச் செய்தாக வேணுமென்று கர்ம யோகத்தையும் பிறகு ஆத்ம சிந்தனமான (ஆத்மாவைப் பற்றிய இடையறு நினைவு) ஜ்ஞாந யோகத்தையும் உபதேசித்தருளினாயிற்று. இவற்றுள் ஜ்ஞாந நிஷ்டையே சிறந்ததாகத் தெரிகிறது. இதை அநுஷ்டிப்பவனே ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெற்று ஸுகம் பெறுவானெனத் தேறுகிறது. *ஜீவாத்ம சிந்தநமே ஆத்ம ஸாக்ஷாத்காரத்துக்கு நேர்வழியாய் இருக்க, கர்ம யோக ரூபமான யுத்தத்தில் என்னை நியமிப்பதேன்? ஆத்ம சிந்தநத்தில் நியமிக்காமல் யுத்யஸ்வ (யுத்தம் பண்ணு) என்பது ஏன்?* என்பது அர்ஜுனனின் கேள்வி.

யுத்தத்தை விட்டு விலகினால் தன்னால் ஏற்படக்கூடிய அநேகரின் முடிவை (மரணத்தை)த் தடுக்க முடியும் என்பது அர்ஜுனனின் மனத்திலெண்ணம். உலகம் வாழ வேண்டும் (லோகாஸ்ஸமஸ்தா: ஸுகிநோ பவந்து) என்ற நல்ல மனோபாவம் அர்ஜுனனது. துரோணர் தானறிந்த வில் வித்தை பூராவையும் அர்ஜுனன் ஒருவனுக்கே சொல்லி வைத்தார். தன் மகன் அசுவத்தாமனுக்கும் இப்படி பூர்த்தியாகக் கற்பிக்கவில்லை. சுபமான ஹ்ருதயம் உள்ளவனே பூரண வித்தைக்கு ஏற்றவன். அர்ஜுனன், *ஏன் என்னை



கோரமான கர்மத்தில் நியமிக்கிறது? *கோரே கர்மணி நியோஜஸி* என்று கேட்கிறான். கோரம் என்றால் பயங்கரம் என்று பொருள்படும். கர்மமே (யுத்தமே) பயங்கரமன்று. அர்ஜுனன் அதற்குப் பயந்தவன் அல்லன். அதன்பின் விளைவுகளுக்குப் பயப்படுகிறான். ஆத்மசிந்தநம் நிவ்ருத்தி ரூபமாய் இருக்கும். வெளி இந்த்ரியங்கள் செயல்படாத நிலை. கர்மாநுஷ்டாநம் ப்ரவ்ருத்தி (செயல்படுகை) ரூபமான கர்மா, நிவ்ருத்தி ரூபமான (செயல்படாத நிலையான) ஜ்ஞாநத்தில் எப்படிக் கொண்டு விடும்? குழப்பமாக உள்ளதே – *எதனால் ச்ரேயஸ் (நலன்) ஏற்படுமென நிச்சயித்துச் சொல்வீராக* என்று கேட்கிறான். *என்னைக் கர்மாநுஷ்டாநத்தில் நியமிக்க வேண்டாம், ஜ்ஞாந யோகத்தையே அநுஷ்டிக்க அநுமதி பண்ணுவீராக* என்று கேட்பது போலத் தெரிகிறது.

கர்மாநுஷ்டாநம் ஜ்ஞாநத்துக்கு உதவுமது போக்கி விருத்தமானதன்று என்று கண்ணன் பதில். சாப்பாட்டில் அதிக ஆசை உடையவனை சுத்தோபவாஸத்துக்கு (முழுப்பட்டினி விரதம்) உடனே கொண்டு வந்து விட முடியாது. படிப்படியாக ஆகாரத்தைக் குறைத்துக் கொண்டு வந்து சுத்தோபவாஸத்துக்குக் கொண்டு வர வேண்டும். இந்த்ரியங்கள் பட்டிமேய்ந்து திரியும் காளை போல் கட்டுக்கடங்காமல் விஷயங்களில் பாயும் நிலையிலிருந்து அவைகளைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரவேண்டும். விஹிதமான (சாஸ்த்ரத்தினால் விதிக்கப்பட்ட) கர்மாவில் ஊன்றி இதர விஷயங்களைக் கவனிக்காமல் செயல்பட்டால் இந்த்ரியங்கள் ஒரு கட்டுப்பாட்டுக்கு அடங்கி வரும். அர்ச்சநம் என்ற கர்மாவில் கண் எம்பெருமான் திருவடிகளில் லயிக்க, வாய் திருநாமத்தைப் பாட, கை புஷ்பங்களைத் திருவடியில் சேர்ப்பதும் அஞ்சலிப்பதுமாயிருக்க, இதர விஷயங்களில் கவனம் செலுத்த வாய்ப்பில்லை.

*நாவே! கண்ணனைப்பாடு. காலே! அவன் கோயிலுக்கு நடந்து செல். கண்ணே! அவன் திருமேனி அழகைப்பருகு. கையே! அவனை அர்ச்சித்து வணங்கு. மனமே! அவன் குணங்களையும் திவ்ய சேஷ்டிதங்களையும் நினைத்து மகிழ்* என்று பெரியோர் உபதேசிக்கின்றனர். இப்படிப் பழக்கமானால் மற்றைய (விட வேண்டிய) ப்ரவ்ருத்திகளினின்றும் இந்த்ரியங்கள் நிவ்ருத்தியடையும். ஜ்ஞாநம் என்பது எல்லா காரியங்களினின்றும் விலகிஒரு மூலையில் உட்கார்ந்து தபஸ் பண்ணுவதல்ல. பகவதாராதந ரூபமான கர்மாவே ஜ்ஞாநம் என மேலே பேசப்படுகிறது. *ஆத்மந்யே வாத்மநாதுஷ்ட:* எனக்கூடிய ஜ்ஞாந நிலை உயர்ந்த ஸ்தாநமே. அதற்குப் படிப்படியாக ஏறவேண்டும். விஹித கர்மாநுஷ்டாநமே அந்த உயர்ந்த ஸ்தாநத்துக்கு ஏறும் படிகளாகும். ஆதலால் உனக்கு கர்மாநுஷ்டாநமே ஏற்றது என்று கண்ணனின் பதில்.

அஸக்த்யா லோகரக்ஷாயை குணேஷ்வாரோப்ய கர்த்ருதாம் |
ஸர்வேச்வரே வா ந்யஸ்யோக்தா த்ருதீயே கர்மகார்யதா ||

என்பது மூன்றுவது அத்யாயத்தை ஸங்க்ரஹிக்கும் கீதார்த்த ஸங்க்ரஹ ச்லோகமாகும். அஸக்த்யா – பற்றுதலில்லாமல் – இவ்வுலகங்களிலோ ஸ்வர்க்கம் முதலான மறுவுலக பலன்களிலோ ஆசையில்லாமல் என்று கருத்து. லோகரக்ஷாயை – உலகம் வாழும் பொருட்டு, கர்மாநுஷ்டாநத்தில் உலகத்தவர்களுக்கு வழிகாட்டியாய் நின்று என்று கருத்து. ஸத்வம் முதலான குணஸம்பந்தத்தால் செயல்கள் ஏற்படுகின்றன. செயல்படுகை (கர்த்ருத்வம்) பகவததீநம் என்றும் செயல்படும் கர்மகார்யதா முன்றுவது அத்யாயத்துக்கு விஷயமாம்.

பாண்டவர்கள் வனவாஸம் இருந்தபோது அஸ்த்ரங்களைப் பெறுவதற்காக அர்ஜுனன் ஐந்து ஆண்டுகள் ஸ்வர்க்க லோகத்தில் இருக்க நேரிட்டபோது ஊர்வசி என்கிற பேரழகி அவன் மேல் ஆசைப்பட *நீ எனக்குப் பூஜிக்கத் தகுந்தவள்* என்று வணங்கி விலகினான். இதனால் அவனுடைய இந்த்ரிய ஜயம் (புலனடக்கும் வலிமை) தெரிகிறது. இந்த அர்ஜுனனை பகவான் ஜ்ஞாந யோகத்துக்கு நேரே தகுதியற்றவனாகப் பேசுகிறான். நம் போல்வார் நிலை எங்கே?



(1) கர்மாநுஷ்டாநம், (2) சித்த சுத்தி, (3) ஆத்மாநுபவத்தில் இச்சை, ப்ரீதி (4) ரஜஸ், தமஸ் ஒழிகை, (5) ராகத்வேஷங்கள் நசிக்கை, (6) இந்த்ரியங்களும் மனதும் கலக்கமற்றிருக்கை – நிலை பெற்றிருக்கை, (7) ஆத்ம ஸாக்ஷாத்காரம் என்று 7 வது ஸ்தாநத்துக்கு ஆறு படிகள். படிப்படியாகவல்லாமல் நேரே ஏழாவதுபடியான உச்சியை அடைய முடியாது.

பகவான் *ந ஹி கச்சித்க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத்* – ஒரு க்ஷணமும் இந்த்ரியங்களால் தூண்டப்பட்டுச் செயல்படாமல் இருக்க முடியாது (3–5) என்கிறான். ஆகையாலே நேராக மேலே காட்டிய ஏழாவது படியான ஆத்மஸாக்ஷாத்காரம் அஸாத்யம். மேலும், ஜ்ஞாநத்தின் வழியே செல்ல முயல்பவனுக்கு சரீரம் திடமாய் இருக்க வேண்டும். இதற்கு நல்ல உணவு வேண்டும். உணவு சுத்தமாயிருக்க வேண்டும். உணவுக்கு சுத்தியாவது பகவந் நிவேதிதமாயிருக்கை. *யஜ்ஞசிஷ்டாசிந: ஸந்தோ முச்யந்தே ஸர்வகில்பிஷை: புஞ்ஜதே தே த்வகம் பாபா யே பசந்த்யாத்ம காரணாத்* (3–13) – பகவதாராதனத்தில் பயன்படுத்தப்பட்ட உணவை உண்பவர் எல்லா பாபங்களினின்றும் விடுவிக்கப் படுகிறார்கள். தமக்காகவே சமைக்கப்பட்ட உணவை உண்பவர் பாபத்தையே உட்கொள்கின்றனர். இதனால் தேறுவது என்ன

வென்றால், ஜ்ஞாந மார்க்கத்தில் செல்பவனுக்கு பகவதாராதந ரூபமான கர்மாநுஷ்டாநம் அவச்யம். *சரீரயாத்ராபி ச தே ந ப்ரஸித்த்யேதகர்மண :* சரீர யாத்ரைக்கு (சரீரத்தை நிலையாக வைத்துக் கொள்வதற்கு) செயல்படாமல் இருக்க முடியாது. (3-8) கர்மாநுஷ்டாநத்தினால் உயர்ந்தவர் ஜனகரைப் போல் பலர் உண்டு. உலகத்தவர் நலனுக்காகவாவது (அவர்கள் உன்னைப் பார்த்துக் கெடாமல் இருக்க) நீ கர்மாநுஷ்டாநத்தைச் செய்ய வேணும். (3-20)

மேலே காட்டப்பட்ட ஸங்க்ரஹ ச்லோகத்தில் லோக ரக்ஷாயை என்று உலக நலனுக்காகக் கர்மாநுஷ்டாநம் அவச்யம் என்று ஸ்ரீ ஆளவந்தார் காட்டியருளினார். இந்த ச்லோகத்தின் கருத்து - உலகத்தவர் நலனுக்காக, பற்றில்லாமல் செயலில் தமக்குள்ள முயற்சியை ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய குணங்களில் ஏறிட்டு அதை எம்பெருமானதீனமாக எண்ணிக்கொண்டு, கர்மா நுஷ்டாநம் பண்ணுவது மூன்றாம் அத்யாயத்தில் சொல்லப்பட்டது என்பதாம்.

கண்ணனெம்பெருமான் சொல்வது - *நான் கர்மாநுஷ்டாநத் தினால் பெற வேண்டுவது ஏதும் இல்லாத பரிபூர்ணனாய் இருந்தும், கர்மாவை விடாமல் செய்வதில் நிலைத்துள்ளேன்.* (3-22) *நான் இப்படிச் செய்யாவிடில் என்னைப் பின்பற்றி பலர் அவரவர் நிலைக்குத் தக்கபடி விதிக்கப்பட்ட கர்மத்தைச் செய்யாமல் அழியக்கூடும். இதைத் தடுக்கவே நான் கர்மாவில் ஊன்றி இருக்கிறேன்.* *வர்த ஏவ ச கர்மணி* (3-22) என்று தான் கர்மாவை அநுஷ்டிப்பதைச் சொல்கிறான். 16108 மனை விமாரோடு 16108 திருமேனிகளைக் கொண்டு கண்ணன் வர்ணாச்ரம தர்மத்தை அநுஷ்டித்துக் கொண்டிருந்ததை நாரதர்



நேரில் ஸாக்ஷாத்கரித்ததாக (கண்டதாக) ஸ்ரீபாகவதம் சொல்லு கிறது. இதனால் கர்மாநுஷ்டாநம் அவச்யம் கர்த்தவ்யம் (செய்யத் தக்கது) என்று கண்ணன் வலியுறுத்துகிறான்.

ஆக மூன்றாவது அத்யாயத்திற்கான ஸங்க்ரஹ ச்லோகத்தில் *லோக ரக்ஷாயை* என்பதின் பொருளை கண்ணனெம்பெருமானின் அநுஷ்டானம் மூலம் கண்டோம். உலகத்தவர்க்கு முன் மாதிரியாக விளங்குதற் பொருட்டு அவாப்தஸமஸ்தகாமனான கண்ணன் கர்மா நுஷ்டாநத்தை விடாமல் கைக்கொண்டிருந்தான். *ப்ரக்ருதே : க்ரிய மாணாநி குணை : கர்மாணி ஸர்வச* (3-27) என்பதனால் ஜீவன் ஈடுபடும் கர்மாக்கள் (செயல்கள்) அவன் புகுந்துள்ள சரீரத்தின் குணங்களுக்கு ஏற்ப அமைகிறது என்கிறது. ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆன குணச் சேர்க்கையும் அதற்கேட்ப செயல்படும் இயல்பும் சரீரத்தைப் பொறுத்தது. தனிஜீவாத்மா குணச் சேர்க்கை யற்ற சுத்த இயல்புடையது. சரீரத்தின் (ப்ரக்ருதியின்) குணஸம்பந் தத்தாலே பலவிதப்பட்ட செயல்களைச் செய்ய நேரிடுகிறது. இப் படி குணச்சேர்க்கையாலே குணநுகுணமாக அமையும் காரியங் களை *நான் செய்தேன்* என்று அஹமர்த்தமான ஜீவாத்மா நினைப்பது தவறு. *அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹமிதி மந்யதே* (3-27) என்பது இதைத் தெரிவிக்கிறது.

பரமாசார்யரும் *குணேஷ்வாரோப்ய கர்த்ருதாம்* (கீ. ஸங்.) (செயல்படும் முயற்சியை குணங்களில் ஏறிட்டு) என்று இக் கருத்தைக் காட்டியருளுகிறார். நெருப்பில் காய்ச்சிய இரும்புத் துண்டு நெருப்பாகவே ஜ்வலிப்பதுபோலே சரீரத்துடன் சேர்ந்த ஜீவன் சரீரமாகவே தோன்றி அத்துடன் ஒன்றிப்போவதால் சரீரத் தின் இயல்புகளைத் தன்னதாக எண்ணிக் கலங்குகிறான். இந்தக் கலக்கம் கூடாது என்று இங்கு சிக்ஷிக்கப்படுகிறது.

சுத்த ஜலம் நிறமற்றதாக இருக்க அது பாயும் நிலப்பாங்குக்கேற்ப வெண்மை, சிவப்பு, கருப்பு முதலான வண்ணங்களுடன் காணப் படும். இதுபோல சரீரத்தில் முக்குணங்களில் எது மேலோங்கி இருக்குமோ அக்குணத்துக்குத் தக்கபடி செயல்கள் மாறும். ஒரே புருஷனின் செயல் வெவ்வேறு காலங்களில் வேறுபட்டிருக்கும். குணச்சேர்க்கை மாறுபடுவதாலே, ஸத்வம் மேலோங்கியுள்ள போது தெளிந்த மனதுடன் நற்காரியங்கள் செய்வதில் ஈடுபடுப வன் மற்ற குணங்கள் மேலோங்கும் பொழுது தீய செயல்களில் ஈடுபடக்கூடும்.

ஜீவாத்மாக்கள் எல்லாம் ஒருபடிப்பட்டவையே. பார்க்கப்படும் வேறுபாடுகள் சரீரமடியாக (குணச்சேர்க்கையடியாக) ஏற்படு பவை. ஜீவாத்மாவை கர்த்தாவாக (செயல்களைச் செய்பவனாக) ஒப்புக் கொள்ள வேண்டியிருந்தாலும், செயல்கள் சரீரத்திலுள்ள குணங்களின்படியே அமைகிறது. முன்னமே (2-45) *நித்ய ஸத்வஸ்தோ பவ* என்று அர்ஜுனனுக்குக் கண்ணன் சொன்ன வார்த்தை. *ஸத்வ குணத்தை நித்தமும் வளர்த்துக் கொள்* என்றான். குணங்கள் நாம் உட்கொள்ளும் ஆகாரத்துக்கேற்ப மாறு படும். ஸத்வவ்ருத்தியி[illegible] நோக்குடன் நமது ஆகாரத்தை அமைத் துக் கொள்ள வேண்டு[illegible]க்கியமாக பரம ஸாத்விக தெய்வமான எம்பெருமான் அமுது [illegible]த (இதர தேவதா ஸம்பந்தமற்ற) உண வையே உட்கொள்ள வேணும். நிஷித்தமான (விலக்க வேண்டிய வை என்று விதிக்கப்பட்டவை) உணவு வகைகளை எக்காரணத்தா லும் புசிக்கவே கூடாது. ஸத்வம் வளர்ந்தால் நம் செயல்களும் தீதற்று – தோஷமில்லாததாய் இருக்கும்.

மேலும் ஸங்க்ரஹச்லோகத்தில், *ஸர்வேச்வரே வா ந்யஸ் யோக் தா கர்மகார்யதா* என்பதால் எம்பெருமானிடம் ஸமர்ப்பிக்கப்



பட்ட கர்மகார்யதா (கர்மயோகத்தில் ஈடுபாடு) இவ்வத்யாயத்தில் (உக்தா) சொல்லப்பட்டதாகிறது. *மயி ஸர்வாணிகர்மாணி ஸந்யஸ்ய அத்யாத்ம சேதஸா* (3-30) என்பதின் பொருள் இங்கு தெரிவிக்கப்படுகிறது. நமது சரீரத்திலுள்ள உறுப்புகள் உள்ளுறையும் ஜீவனின் கட்டளைக்குச் சேர செயல்களைச் செய்கின் றன. சரீரத்திலுண்டாகும் ஸுக துக்கங்களை அநுபவிப்பவன் ஜீவன். இவன் துக்கமுண்டாகாமல் ஸுகமாக இருப்பதையே குறிக் கோளாகக் கொண்டு சரீரம் இயங்குகிறது. உடலுக்கும் உயிரான ஆத்மாவுக்குமுள்ள ஸம்பந்தமே ஆத்மாவுக்கும் அதனுள் உயிராக உறையும் ஸர்வேச்வரனுக்கும் உள்ளது. உயிருக்கும் உயிரான ஸர்வேச்வரனிட்ட வழக்கு நமது செயல்கள் என்பதை உணர வேண்டும். சாரீரக சாஸ்திரத்தில் *கர்த்தா சாஸ்த்ரார்த்தவத்வாத்* என்ற ஸூத்ரத்தினால் ஜீவனுக்குச் செயல்படும் ஆற்றல் உண்டு என்று வ்யாஸரால் ஸ்தாபிக்கப்பட்டது. உடனே *பராத்து தச்ச்ருதே:* என்ற ஸூத்ரத்தினால் அந்த கர்த்ருத்வமும் பகவததீனம் (பகவானிட்ட வழக்கு) என்று நிலைநாட்டப்பட்டது.

*அத்யாத்ம சேதஸா* (3-30) என்பதால் ஆத்மஸ்வரூபத்தைப் பற்றிய அறிவு (ஜீவாத்மா பகவானின் சரீரம் என்ற அறிவு) சொல் லப்பட்டது. ஆத்மாவின் கட்டளைப்படி சரீரம் செயல்படுவதுபோல ஜீவனின் செயல் அதன் உயிராயுள்ள பகவானால் தூண்டப்பட்டதா கும். ஆனால் இங்கு ஒரு ஐயம் யாவருக்கும் எழும். கர்த்ருத்வம் அவனதீனமானால் அதனால் வரும் ஸுகதுக்கங்களை அநுபவிப்பவ னும் அப்பரமனேயாக வேண்டுமன்றோ? புண்யபாபங்களை நாமன் றோ அநுபவிக்கவேண்டியுள்ளது? அதிலும் குறிப்பாக நாம் செய் யும் தீய செயல்களை எம்பெருமான் செய்வித்ததாக நினைத்து அதன் பலனும் அவனதாகட்டுமே என்ற எண்ணம் உண்டாகலாம். குணச்சேர்க்கைக்குச் சேர செய்யப்படும் செயல்களைச் செய்யும்

**போது** அவன் அநுமந்தாவாகவும் (அநுமதிப்பவனாகவும்) சாக்ஷியாகவுமே இருக்கிறான். ஜீவஸ்வரூபத்தை நன்குணர்ந்த (அத்யாத்ம சேதஸா)வன் செய்யும் செயல் தீயதாக இருக்க வாய்ப்பே இல்லை. சரீரம் செய்யும் செயல்கள் ஜீவனை மகிழ்விப்பதாக அமைவது போல ஜீவனின் செயல்படுகை ஜீவனுக்கும் ஜீவனாக (உயிராக) உள்ள புருஷோத்தமனின் மகிழ்ச்சிக்குறுப்பாகவே அமையும். பாபச் செயல்களைச் செய்வதற்கு முக்கியகாரணம் தேஹாத்மாபிமானம். கர்த்ருத்வம் பகவததீனம் என்று உணர்ந்து அதை அவனிடம் ஸமர்ப்பித்து அவன் செய்விப்பதாக நினைத்து பகவதாராதந ரூபமான செயல்களில் ஈடுபடவேண்டும். இதுவே ஆத்மஸ்வரூபத்தை உணர்ந்தவனின் படியாக இருக்கும். கர்மாநுகுணமாகவும் குணாநுகுணமாகவும் செய்யப்படும் செயல்களுக்கு பகவான் ஸாக்ஷியாகவே மட்டும் உள்ளன் என்பதை அறிய வேண்டும்

## நான்காம் அத்தியாயம் – ஜ்ஞாந யோகம்

ப்ரஸங்காத் ஸ்வஸ்வபாவோக்தி: கர்மணோ கர்மதாஸ்ய ச |
பேதா ஜ்ஞாநஸ்ய மாஹாத்ம்யம் சதுர்த்தாத்யாய உச்யதே ||

என்பது நாலாமத்யாய விஷயமான ஸங்க்ரஹ ச்லோகம். இங்கு 4 விஷயங்கள் அருளிச்செய்யப்படுகின்றன. (1) ஸ்வஸ்வபாவ உக்தி: (இது அவதாரங்களைப் பற்றியது. (2) கர்மண: அகர்மதா (கர்மயோகமும் ஜ்ஞாநமேயாம்) (3) அஸ்ய ச பேதா: (கர்மயோகத்தின் உட்பிரிவுகள்) (4) ஜ்ஞாநஸ்ய மாஹாத்ம்யம் (கர்மத்திலடங்கிய ஜ்ஞாநத்தின் சிறப்பு) என்று நான்கு விஷயங்கள் ப்ரஸங்காத் (அவசியமேற்பட்ட படியால்) நான்காம் அத்யாயத்தில் பேசப்பட்டன.



மூன்றாம் அத்யாயத்தின் **ஆரம்பத்தில் அர்ஜுனன் *கர்மத்தை**விட சிறந்ததாகத் தெரியும் **ஆத்ம சிந்தநமாகிற ஜ்ஞாநத்தில்** நான் செல்கிறேன். **கோரமான** (பயங்கரமான) **கர்மத்தில் என்னை** நியமிக்க **வேண்டாம்* என்று கண்ணனை வேண்டினான். கண்ணனும் அர்ஜுனனை, *ஆத்ம சிந்தநமான ஜ்ஞாந யோகத்திற்கு** இப்பொழுது நீ **தகுதியற்றவன். அப்படித் தகுதியிருப்பதாகக்** கொண்டாலும், **லோக க்ஷேமார்த்தமாக உன் தர்மமான யுத்தத்**தைச் செய்வாயாக* **என்று நியமித்தான்.**

இங்கு ***உன்னை** எப்படியாவது யுத்தத்தில் முயற்சி உடையவனாக ஆக்க வேண்டும் என்று இப்பொழுது பேசுவதாக எண்ணாதே. இந்த கர்மயோகத்தை நான் முன்பு விவஸ்வானுக்கு (ஸூரியனுக்கு) உபதேசித்தேன். விவஸ்வான் மநுவுக்கும், மநு இக்ஷ்வாகுவுக்கும் மேலே பரம்பரையாக ராஜரிஷிகள் மூலம் பரப்பப்பட்ட இந்தச் சீரிய அர்த்தத்தை நீ எனக்கு பக்தனும் இனிய நண்பனும் ஆனமையால் உனக்குச் சொல்கிறேன். உன்னை சாக்கிட்டுச் சொல்லுகையால் இது உலகத்தவருக்கு நற்பயனைத் தரும்* என்ன, அர்ஜுனன் *விவஸ்வான் உனக்குக் காலத்தால் மிகவும் முற்பட்டவனாயிற்றே. அவனுக்கு நீ எப்படி இந்த யோகத்தை உபதேசித்திருக்க முடியும்?* என்று ப்ரச்நம் பண்ண பகவான் மேலே பதில் சொல்லுகிறான்.

*காலத்தால் பிற்பட்ட நீ காலத்தால் முற்பட்ட விவஸ்வானுக்கு எப்படி உபதேசித்திருக்க முடியும்?* என்பது அர்ஜுனனுடைய கேள்வியென்று அப்படியே கொள்ளவில்லை பகவான். இதற்கு பகவானுடைய பதில் விரிவாக அமைந்துள்ளது. க்ருஷ்ணன் பரமாத்மா என்பதும் அவன் பற்பல காலங்களில் பற்பல திருவவதாரங்களை எடுத்திருக்கிறான் என்பதும் அர்ஜுனன் அறியாததல்ல.

முன்பொரு காலத்தில் ஸூரியனுக்கு உபதேசித்திருக்கக் கூடுமென்று அர்ஜுனன் அறிந்தவனே. ஜீவாத்மா நித்யவஸ்து என்று கண்ணனே சொல்லக் கேட்டவன் அர்ஜுனன். அதே போல் பரமாத்மாவும் நித்யன் என்பதையும் அறிந்தவனே. கர்மானுகுணமாக ஜீவன் பல ஜன்மங்களில் பல சரீரங்களோடு சேரும்படியாகிறது என்பதும் அர்ஜுனன் அறிந்ததே. ஆகையால் அர்ஜுனனுடைய அபிப்ராயம் யாது என்பதை கண்ணன் அறிந்து பதில் சொல்லுவதிலிருந்து நாமும் அவன் மனத்திலோடுவதை அறியலாம்.

*உலகத்தில் சரீர ஸம்பந்தமுள்ள வரையில் நமக்கு இன்பதுன்பங்கள் உண்டு. உடலின் தொடர்பு அற்றுப் போனால் இன்பதுன்பங்களும் பூரணமாக விலகி விடும். இது மோக்ஷ நிலையில்தான் கூடும். எல்லோருக்கும் மோக்ஷம் தரும் ஆற்றல் உடைய க்ருஷ்ணனுக்கு நம்மைப் போலொரு சரீர ஸம்பந்தம் உண்மையாக உள்ளதா? அந்த ஸம்பந்தம் எப்படி ஏற்படும்? பகவான் பல பிறப்புகள் எடுப்பதின் காரணம் என்ன? கர்மமடியாக வரும் இவ்வுலகத்திய ஜீவராசிகளையொத்த உடல்களுடன் பகவான் அவதாரம் பண்ணுவதால் இவ்வுலகத்திய தோஷங்கள் அவனுக்கு உண்டா?* என்பதெல்லாம் அர்ஜுனன் அறிய விரும்பும் விஷயங்கள்.

பகவான் எடுத்துக் கொள்ளும் சரீரம் அப்ராக்ருத திவ்ய மங்கள விக்ரஹம். (பஞ்ச பூதங்களின் சேர்க்கையான நமதுடல் போன்றதன்று அவனது. அது விண்ணுட்டிலுள்ள தெய்வீகமான சரீரம்) என்பதை அர்ஜுனனுக்கு எடுத்துச் சொல்லுகிறான் பகவான். இதனால் இவ்விஷயம் அர்ஜுனனுக்குத் தெரியாது என்பது விளங்குகிறது. அகிலஹேயப்ரத்யநீகனான அவன் (எவ்விதமான தாழ்ந்ததும் தோஷமும் தட்டாதவன்) கர்மமடியாக நாம் கூடும் ஹேயமான (தாழ்ந்ததான) சரீரத்துடன் கூட அவஸரமேயில்லை.



ஆநந்தமயனான பரமபுருஷன் ஆத்மாராமன். ( திவ்யாத்ம ஸ்வரூபத்தாலேயே ஆநந்திப்பவன்) ஒரு சரீரம் கொண்டு செய்ய வேண்டுவது அவனுக்கு ஒன்றுமில்லை. ஒத்தாரும் மிக்காரும் இல்லாதவன் பகவான் என்பதும் அர்ஜுனன் அறிந்ததே. அவாப்தஸமஸ்தகாமனான ஸர்வேச்வரன் ஒரு சரீரம் எடுத்துக் கொண்டு இவ்வுலகில் ஏன் பிறக்க வேண்டும்? விவஸ்வானுக்கு உபதேசம் பண்ணியபோது இருந்த சரீரமும் க்ருஷ்ணனாக இப்பொழுது கொண்டிருக்கும் உடலும் உண்மையா? வெறும் தோற்றமா? (இந்திர ஜாலம் என்னும் மாயையா?) என்பதை அறியவேண்டுமென்ற நோக்கத்துடன் அர்ஜுனன் கேள்விகேட்கிறான் என்று நமது பாஷ்யகாரரின் அபிப்ராயம்.

இந்த கேள்விக்குப் பதில் சொல்வதின் மூலம் பகவான் தன் அவதாரத்தின் உண்மையை உரைக்கிறான். *உன்னைப் போலவே நானும் பல பிறவிகள் பிறக்கிறேன். என் ஜன்மங்கள் யாவற்றையும் நானறிவேன். உன்னதை நீ அறியாய்* (4–5) என்கிறான். உனது கடந்த பிறவிகள் பல என்று குறிப்பிடுவதால் இனி பிறவி இல்லை என்று காட்டப்பட்டதாயிற்று. சாஸ்த்ராரம்பத்தில் (2–12) தான் எப்பொழுதும் உள்ளதாகச் (நித்யன்) சொல்லி *அதுபோல் நீயும் நித்யமாய் உள்ளவனே* என்றான். இங்கு *உன் கடந்த காலப்பிறவிகளைப் போல் எனக்கும் உண்டு* என்கிறான். அர்ஜுனன் தனது பிறவிகளை ஸத்யமாகவே நம்புவதாக கொள்ளவேண்டும். *எனக்கு ச்ரேயஸ் தரும் அர்த்தத்தை நிச்சயித்து அருள வேண்டும்* (2–7) என்று அர்ஜுனன் ப்ரார்த்தித்ததுக்கு விடையாகவன்றோ கண்ணன் அருளும் பலவிஷயங்களும் அமைந்துள்ளன? அர்ஜுனனுடைய கடந்த பல ஜன்மங்களைக் காட்டி அதுபோல தனது ஜன்மங்கள் என்கையாலே இரண்டுமே ஸத்யம் என்றே கொள்ள வேண்டும். அர்ஜுனன் வேண்டும்

ச்ரேயஸ் இவ்வுலகத்தியதல்ல. உலக ஸுகங்களும் ராஜ்யமும் வேண்டாம் என்ற மநோநிலையில் இருப்பவன் அர்ஜுனன். பகவானும் *ஸோம்ருதத்வாய கல்பதே* என்னும்படியான சாச்வதமான ஆத்மக்ஷேமத்தைத் தருவதையே சொல்லி வருகிறான்.

ஆக இதுவரை இந்த அத்தியாயத்தில் ஆரம்பத்தில் காணப்படும் அர்ஜுனனுடைய கேள்வி எந்த அபிப்ராயத்துடன் கேட்கப்பட்டது என்பதையும், இது பகவானுடைய பதிலில் இருந்து அறியப்பட வேண்டும் என்பதையும், அர்ஜுனன் மனதிலிருப்பதை அறிந்து பதில் சொல்லக் கூடியவன் பகவான் என்பதையும், தனக்கு நலன் பயப்பதை நிச்சயித்துச் சொல்லுமாறு ப்ரார்த்தித்துக் கொண்ட அர்ஜுனனுக்கு பகவான் மோக்ஷ சாஸ்த்ரத்தையே அருளிச் செய்கிறான் என்றும் கண்டோம்.

இங்கே, ஆரம்பத்திலேயே (ச்லோ.9) கண்ணனெம்பெருமான் *என் அவதாரங்களின் உண்மையை அறிபவன் உடலை விட்டு மறு பிறவியை அடைவதில்லை. என்னையே அடைகிறான்* என்று அருளிச்செய்கிறான். பகவதவதாரங்களைப் பற்றிய பல விஷயங்களை அறியும் பொருட்டு அர்ஜுனனின் கேள்வி. பகவான் அருளும் பதிலிலிருந்து அர்ஜுனன் மனத்திலோடும் எண்ணங்களை நமது ஸ்வாமி எம்பெருமானார் காட்டியருளுகிறார்.

(1) உனது (கண்ணனது) பிறவி ஸத்யமானதா? அது இந்திர ஜாலம் போன்று வெறும் தோற்றம் அல்லவே? (2) உன் பிறவி ஸத்யமானால் உன் பெருமேன்மைகள் (சரீரத்தையும் ஆத்மாவையும் பற்றியவை) இங்கும் தொடர்ந்து வருகின்றனவா? (3) இங்குள்ள ஜீவராசிகளின் உடல்களைப் போல நீயும்சரீரம் கொண்டு பிறப்பதால் உன் சரீரமும் (எங்களுடையதைப் போல) முக்குணச்



சேர்க்கையால் ஏற்பட்டதா? (4) உனது அவதாரத்துக்குக் காரணம் யாது? (5) எந்தெந்த காலங்களில் நீ பிறக்கிறாய்? (6) எங்களைப் போல் இன்பதுன்பங்களை அநுபவிப்பதற்காக நீ பிறவியெடுக்கிறாயா? இவை அர்ஜுனனுடைய மனதில் ஓடும் கேள்விகள். பகவானுடைய பதிலிலிருந்து இந்த கேள்விகளை ஊகிக்க இடமுள்ளது.

4,5 வது ச்லோகங்களில் தன்னுடைய ஜன்மங்கள் பல என்று சொல்லி, 6,7,8 ச்லோகங்கள் மூன்றிலுமாக அர்ஜுனனுடைய கேள்விகளுக்கு பதில் சொல்லி 9வது ச்லோகத்தில் இப்படி தன்னுடைய அவதார உண்மைகளை அறிபவனுக்கு மறுபிறவி இல்லை என்கிறான் பகவான் கண்ணன். இதில் 6,7,8 மூன்று ச்லோகங்களும் மிக முக்கியமானவை என்பது சொல்லாமலே விளங்கும்.

*உனது கடந்த ஜன்மங்களைப் போல* என்று உதாரணமாகக் காட்டுகையாலே அர்ஜுனன் பிறவி ஸத்யம் என்று தெளிவாகிறது. இவை பொய்யானால் அவை கழிந்து பிறவியற்ற மோக்ஷம் பெறுதல் பற்றி ஏன் கவலை கொள்வது? பிறவித்துன்பம் கழிவதன்றோ மோக்ஷத்தை விரும்புபவனின் கோரிக்கை? ஆக அர்ஜுனன் (ஸகல ஸம்ஸாரி ஜீவர்களும்) எடுத்த பிறவி உண்மை. அதைப் போல பகவானின் பிறவிகளும் (அவதாரங்களும்) ஸத்யமே. செப்பிடு வித்தையன்று. முதலில் ச்லோகம் (4-6)

அஜோऽபி ஸந் அவ்யயாத்மா பூதாநாமீஶ்வரோऽபிஸந் |
ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்மமாயயா ||

என்கிறான். அஜோऽபிஸந் ஸம்பவாமி – பிறப்பற்றவனாயிருந்து

கொண்டு பிறக்கிறேன்* என்கிறான். *அஜாயமாந : பஹுதா விஜாயதே* என்றும் *ஸ உ ச்ரேயாந் பவதி ஜாயமாந : * என்றும் ஓதுகிறது ச்ருதி. *பிறப்பில் பல்பிறவிப் பெருமான்* என்று ஆழ்வார் திருவாக்கு. *ஆத்மமாயயா* என்பதற்கு *என் ஸங்கல்பமடியாக* என்று பொருளாகும். *பிறப்பற்றவன் பல பிறவிகளை எடுக்கிறான்* என்பதாலும் *பிறப்பினால் அவன் மேன் மேலும் ஒளி வீசுகிறான்* என்பதினாலும், *ஆத்மமாயயா* என்பதினாலும் அவன் பிறவி நாம் கர்மத்தினால் ஆளப்பட்டு எடுக்கும் பிறவி போன்றதல்ல என்று தெரிகிறது. *ஸ்வாம் ப்ரக்ருதிம் அதிஷ்டாய ஸம்பவாமி* என்கையால் தனக்கே உரித்தான இயல்பான தெய்வீகமான திருமேனியுடனேயே பிறக்கிறான் என்றும் தெரிகிறது.

முன் காட்டிய கேள்விகளில் முதல் மூன்றுக்கு விடைகளை இச்ச்லோகத்தில் காணலாம். அவதாரம் ஸத்யம். தன் பெருமேன்மையான ஸ்வரூபம், குணங்களுடன் பகவான் தன் ஸங்கல்பமடியாக பிறக்கிறான். இந்த உலகத்தியது போன்ற சரீரத்துடன் தோன்றினாலும், அவனுடைய தனியியல்புடன் பிறப்பதால் முக்குண சேர்க்கையையுடைய (ப்ராக்ருதமான) சரீரமல்ல. விண்ணாட்டிலுள்ள தெய்வீகத் திருமேனியுடனே பிறக்கிறான் எனவும் தெரிகிறது.

ஸ்ரீராமாவதாரத்திலே மனிதன் போலப் பிறந்து மனிதன் போலவே நடந்து கொள்கிறான் எம்பெருமான். ஸீதையைப் பிரிந்த போது புலம்பியது மனித இயல்புக்குச் சேர்ந்தது. அதுபோல ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்திலும் ருக்மிணியுடன் கைலாஸயாத்திரை பண்ணி சிவனிடம் பிள்ளை வரம் கேட்டதாக ஒரு சரித்திரம் உள்ளது. ஸ்ரீ ராமாவதாரத்தில் பெரிய உடையாருக்கு (ஜடாயுவுக்கு) *கச்ச லோகாநநுத்தமாந்* என்று மோக்ஷம் கொடுத்தான். சிவனிடம்



மோக்ஷம் கேட்ட கண்டாகர்ணன் என்னும் பிசாசத்தினிடம், *மோக்ஷம் தர வல்லவன் ஜனார்த்தனன் ஒருவனே, கண்ணனாய் அவன் இங்கு வருகிறான்* என்று சிவன் சொல்லிவிட, அந்த பிசாசமும் அவன் வரும் வழியில் கண்ணனுக்கு விருந்திட்டு முக்தி பெற்றது. மோக்ஷம் தரும் ஆற்றல் (மோக்ஷப்ரதத்வம் என்ற மற்ற எந்த ஒரு தேவதைக்கும் இல்லாத பெருமேன்மை) அவதார தசையிலும் இவனிடம் உள்ளது. தன் பெருமேன்மையை இழக்காமல் வைத்துக் கொண்டே பகவான் பிறப்பதற்கு இவை சான்றுகளாம்.

நாம் இறக்கும்போது இந்த்ரியங்களுடன் ஸூக்ஷ்மமான உடலுடன் ஆத்மா வெளிப்படுகிறான். பிறக்கும்போது கர்மாநுகுணமாக ஒரு சரீரம் கிடைக்கிறது. அதிலும் பூதஸூக்ஷ்மங்களுடனே இவன் புகுகிறான். பகவான் பிறப்பது இப்படியல்ல. *ஆத்மமாயயா* – கேவலம் அவனது இச்சை (விருப்பம்)யடியாகப் பிறக்கிறான். *பிதரம் ரோசயாமாஸ தசரதம் ந்ருபம்* (தசரத மன்னனைத் தகப்பனாக வரித்தான்) என்பதினாலும், *பிதா புத்ரேண பித்ருமாந் யோநி யோநௌ* ( ஸர்வலோக பிதா ஒவ்வொரு பிறவியிலும் தன் ப்ரஜை ஒருவர் மூலம் தகப்பனுடையவன் ஆகிறான், ஒரு ப்ரஜையைத் தகப்பனாகக் கொண்டு பிறக்கிறான்) என்பதாலும் அவன் பிறவி ஸங்கல்பமடியாக ஏற்படுகிறது என்று தெரிகிறது. அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹத்துடனே வந்து பிறப்பது *ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய* என்பதினால் சொல்லப்பட்டது. *ஈச்வரோபிஸந்* என்பதினால் ஈச்வரத்வத்துக்கு உறுப்பான ஸர்வஜ்ஞத்வம், ஸர்வசக்தித்வம் முதலான திவ்ய குணங்கள் விலகாமலிருப்பது சொல்லப்பட்டது.

அவதாரம் பண்ணுவதன் கால நிர்ணயம் மேலே பேசப்படுகிறது.

*தர்மம் எப்போதெல்லாம் வாட்டமடைந்து, அதர்மம் பொலிந்து காட்டுமோ அப்போது நான் வந்து பிறக்கிறேன்* என்று தர்மம் அழியாது ஆனால் அதர்மம் ஓங்கி தர்மம் சுருங்கும்போது ஜனங்களின் கஷ்டத்தைப் போக்க நானே வந்து பிறப்பேன் (4–7) என்கிறான். இந்த ச்லோகம் ப்ரஸித்தமானது.

*பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்|
தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே ||*

அதாவது, ஸாதுக்களான நல்லோர்களை நன்கு காப்பதற்கும் தீமை செய்பவர்களை நாசம் பண்ணுவதற்கும் தர்மத்தை நிலை நாட்டுவதற்குமாக வேண்டியபொழுது நான் பிறக்கிறேன் என்கிறான். நாம் அநுபவிப்பது போன்ற இன்ப துன்பங்களை அநுபவிப்பதற்காக அவன் பிறப்பதில்லை. இங்கு மூன்று ப்ரயோஜனங்கள் (பயன்கள்) சொல்லப்பட்டன. ஸாது பரித்ராணம் (நல்லவர்களைக் காத்தல்) துஷ்க்ருத் விநாசனம் (தீயவர்களை அழித்தல்) தர்ம ஸம்ஸ்தாபநம் (தர்மத்தை நிலைநாட்டுதல்) என்பவை அவதாரப் பயன்கள்.

ஸாது சப்தத்தால் அவனிடம் அதிமாத்ர ப்ரேமம் கொண்ட ஸ்ரீ வைஷ்ணவப் பெரியார்களைச் சொல்லுகிறது. தன்னைக் காட்டியே இவர்களை ரக்ஷிக்க முடியும். *தொழுங்காதல் களிறு அளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே* என்கிறபடியே (அளிப்பான் – உயிரளித்து காத்தல் பொருட்டு) அவனே வந்து தோன்றுகிறான். *உண்ணுஞ்சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன் – வாஸுதேவஸ் ஸர்வம்* என்றிருக்கும் அதிகாரிகளை ஸாது என்ற சொல்லால் குறிப்பிடுவதால் இவர்களுக்குத் தன்னைக் காட்டி ரக்ஷித்தல் ஒரு பயன்.



துஷ்க்ருத்விநாசனம் திவ்யாயுதங்களைக் கொண்டு இருந்த இடத்திலிருந்தே செய்து விடலாமாயினும், *வெந்நகரம் சேரா வகையே சிலைகுனித்தான்* – நரகத்துக்குப் போக வேண்டாதபடி இங்கேயே கொடிய நரக வேதனையை அநுபவிக்கும்படி அம்புகளால் சின்னபின்னமாக்கி வதம் செய்து தன்னடியார்க்கு அவர்கள் செய்த தீங்கு பொறாமல் தண்டிக்கிறான். *மாற்றாரை மாற்றழிக்க வல்லான்* என்கிறபடி சத்ருக்களின் சாத்ரவத்தையே (விரோத மனப்பான்மையையே) அழிக்கிறானும் பகவான். விரோதம் சரீரத்திலுள்ளது தானே. சரீரத்தையன்றோ பகவான் அழிப்பது. ஆத்மாவையல்லவே.

இனி தர்மஸம்ஸ்தாபநம் – தனக்கு ஆராதநரூபமான தர்மத்தை நிலைநிறுத்தல். தன்னுடைய அழகிற்சிறந்த உருவைக் காட்டி அன்பை (பக்தியை) வளர்த்து, இதர விஷய விரக்தி வரும்படி செய்து அவர்களை உய்விக்கிறான். *நிரதிசய ஸௌந்தர்ய குணகண ஆவிஷ்காரேண அக்ரூரமாலாகாராதீந் பரமபாகவதாந் க்ருத்வா* என்று ஸ்ரீகீதாபாஷ்ய அவதாரிகையில் நம் ஸ்வாமி எம்பெருமானாருடைய ஸ்ரீஸூக்தி. (மிகச் சிறந்த அழகு, சீலம் முதலான உயர்ந்த குணங்களைக் காட்டி அக்ரூரர் மாலாகாரர் முதலானோர்களைப் பரம பாகவதர்களாகச் செய்து – இது அவன் தர்ம ஸம்ஸ்தாபநம் செய்யும்படி.

*இப்படித் தன் அவதாரங்களைப் பற்றியும் திவ்யச் செயல்களைப் பற்றியும் உள்ளபடி அறிபவன் என்னையே அடைகிறான். மறுபடியும் பிறவி எய்துவதில்லை* (4–9) என்று சொல்லி முடிக்கிறான் கண்ணன். விச்வாமித்திரன் சொல்லியும் ராமனுடைய ஆற்றலை நேரில் கண்டும் (பரசுராம கர்வபங்கத்தில்) தசரதன் ராமனை பரமபுருஷனின் அவதாரம் என்றறியவில்லை. கைகேயியை ஸமா

தானம் பண்ணும் பொருட்டு, "எந்த ஏழையைப் பணக்காரன் ஆக்க வேண்டும். எந்தப் பணக்காரனை ஏழையாக்க வேண்டும். நீ இஷ்டப்பட்டதைச் செய்கிறேன்" என்று அதர்மப் பேச்சுப் பேசுகிற மன்னன், "என் வாக்கு பொய்யாகட்டும். ஸ்ரீராமனைக் காட்டுக்கு அனுப்ப மாட்டேன்" என்று சொல்லத் துணியவில்லை. ஸாக்ஷாத் தர்மமான பெருமானை (பரதர்மத்தை)க் கைவிட்டு ஸாமாந்ய தர்மத்தைக் கைக்கொண்ட அரசன் பேற்றையிழந்தான். இவனுக்கு ஸ்வர்க்கம் மட்டுமே – அதுவும் பகவான் அருளால் கிடைத்தது. ஒரு பொய் சொல்லி ததிபாண்டன் (அவன் அபிமானித்த தயிர்த்தாழியும் கூட) மோக்ஷம் பெற்றமை க்ருஷ்ணவதாரத்தில் ப்ரஸித்தம். அவதாரத்தின் உண்மை காணாத சக்ரவர்த்தி பேற்றை இழந்தான். (அவன் உணர்த்தி) அதைக் கண்ட ததிபாண்டன் பெற்றுப் போனான்.

உபன்யாஸ ரீதியில் (ப்ரஸங்காத்) மற்றொரு முக்யமான விஷயத்தையும் பகவான் இங்கு சொல்லியருளுகிறான். "தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே ஆம்" (முதல் திரு 44) என்கிறபடி யார் யார் என்னை எந்த உருவத்தில் ஆச்ரயிப்பார்களோ (பூசிப்பார்களோ) நானும் என்னை அவ்வண்ணமாகவே அமைத்துக் கொண்டு அவர்களை வாழ்விக்கிறேன் (என்னைக் காட்டுகிறேன்) (4-11) என்பதாம். இதனால் அர்ச்சாவதாரம் பேசப்பட்டதாயிற்று. இது வரையில் "ப்ரஸங்காத் ஸ்வஸ்வபாவோக்தி :" என்று 4ம் அத்யாயத்துக்கான ஸங்க்ரஹ ச்லோகத்தில் சொன்ன அவதார தசையில் ஸர்வேச்வரனின் ஸ்வபாவங்களை விளக்கியாயிற்று.

இனி "கர்மணோ அகர்மதா" என்று கர்ம யோகமே ஜ்ஞாநயோகமாயிருத்தல் பேசப்படுவதைப் பார்ப்போம். மேலே "என்னை இப்படி



அறிந்து பாபமற்ற முமுக்ஷுக்கள் கர்மயோகத்தைத் தூயோராய் அநுஷ்டித்தனர். விவஸ்வான், மநு முதலிய முன்னோர்களால் செய்யப்பட்ட கர்ம யோகத்தை நீயும் செய்வாயாக" (4-15) என்று சொல்லிவிட்டு "கர்மம் எது, அகர்மமான ஜ்ஞாநம் எது என்று கவிகளும் (அறிவாளிகளும்) கலங்கி நிற்பர். எதை அறிந்து ஸம்ஸாரத்தினின்றும் (உடல் தொடர்பிலிருந்து) விடுபடுவாயோ அதை உனக்கு நன்றாகச் சொல்லுகிறேன்" (4-16) என்று பீடிகையிட்டுக் கொண்டு, ஜ்ஞாந யோகம் கர்மயோகத்தில் அடங்கி உள்ளது என்னும் அர்த்தத்தை உபபாதிக்கிறான் பகவான்.

வர்ணம் (ஜாதி) ஆச்ரமம் (நிலை) இவற்றுக்குச் சேர விதிக்கப்பட்ட கர்மங்களைப் பலத்தில் ஆசையற்றுச் செய்கையால் சித்த சுத்தி ஏற்பட்டு (விருப்பு வெறுப்பற்ற தூய்மையுள்ள மனம்) பெற்று, தூயமனதை ஜீவனிடம் சேர விட்டு மனனம் (சிந்தனைத் தொடர்) பண்ணுவது ஜ்ஞான யோகம் ஆகும். இதனால் மனக்கண்ணால் அந்த ஜீவனை ஸாக்ஷாத்கரித்து (கண்டு) ஜீவனை அடைந்து (மோக்ஷ தசையில் சரீரமற்ற சுத்த ஜீவனாக ஆகி) வாழ்ச்சி பெறுதல் ஜ்ஞாந யோக ஸித்தி. இது இரண்டாம் அத்யாயத்தில் பேசப்பட்டது.

மேலத்யாயங்களில் பேசப்படும் கர்மயோகத்தினுள் சேர்ந்த ஜ்ஞாந யோகம் (அகர்மா) சிறிது வேறுபடுகிறது. உபநயநம் பெற்ற அதிகாரி மூன்று வேளையும் காயத்ரீ ஜபம் பண்ணுகிறான். "த்யாத்வா தேவம் ஜபேத் மநும்" என்கிற விதிப்படி மந்திரத்துக்குள்ளீடான தெய்வத்தை மனதில் த்யாநித்து மந்திரத்தை (பிறர் காதில் படாதபடி) உச்சரிக்க வேண்டும். மந்த்ரோச்சாரணம் கர்மா. தேவதாத்யாநம் ஜ்ஞாந கார்யம். ஜீவனைப் பற்றிச் சிந்திக்கும் பொழுது ஜீவன் பரமாத்மாவின் சரீரமாய் அவனுக்கு சேஷப் பொருளாய் இருப்பவன் என்று அறிந்து சிந்தநம் பண்ண வேண்

டும். இப்படிப்பட்ட அறிவுடன் கர்மாநுஷ்டாநத்தைப் பண்ண வேண்டும். பகவதாராதந ரூபமான கர்மாவில் நம்மைப் பற்றிய அறிவு, பகவானைப் பற்றிய அறிவு, கர்மாநுஷ்டாநம் இவை மூன்றும் உண்டு. அகர்மமான ஜ்ஞாநத்திலும் அறிய வேண்டியது உண்டு. விகர்ம எனப்படும் விதவிதமான (விதிக்கப்பட்ட) கர்மாக் களிலும் அறிய வேண்டுவது உண்டு. விதவிதமான கர்மா – நித்ய நைமித்திக காம்ய கர்மாக்கள் – ஸ்நாநம், சுத்தவஸ்த்ரதார ணம் (மடி வஸ்த்ரமணிதல்) புண்ட்ர தாரணம் (திருமண் இட்டுக் கொள்ளல்) எல்லாம் விகர்மாவில் சேர்ந்தவை என்று சொல்ல லாம். ஜீவனை உள்ளபடி அறிந்து (யாதாத்ம்ய ஜ்ஞாநத்துடன்) த்யானிப்பது அகர்மா. (4-17) கர்மத்தில் அகர்மத்தையும் அகர்மத்தில் கர்மத்தையும் பார்ப்பவனே சிறந்த அறிவாளி. அவ னே மோக்ஷத்துக்கு யோக்யதை உள்ளவன். அவனே க்ருதக்ருத் யன். (எல்லாம் செய்தவன்) (4-18) மேல் வரும் ச்லோகங்கள் ச்லோகம் 4-18ல் உள்ள கருத்தை மேலும் விளக்குகின்றன.

இந்த அறிவாளியின் கர்மத்தில் அடங்கிய ஜ்ஞாநம் என்னும் நெருப்பு அவனின் புண்யபாபங்களான கர்மங்களை எரித்து விடுகிறது. கர்மாவின் பலனில் ஆசையை அடியோடு விட்ட இந்த அதிகாரி கர்மாவில் ஈடுபட்டிருப்பினும் எக்கர்மத்தையும் செய்வ தில்லை. *கர்மண்யபிப்ரவ்ருத்தோபி நைவ கிஞ்சித்கரோதி ஸ:* (4-20) ஆத்மாவைப் பற்றிய உண்மையை அறியப் பெற்ற கர்ம யோகிக்கு நெஞ்சு ஆத்ம சிந்தநத்தில் ஊன்றியிருக்கும். இவன் தான் செய்யும் கர்மத்தின் உண்மையான தொடர்பு இல்லா மலிருப்பான். ஒரு மாணுக்கன் கல்வி கற்கும் இடத்தில் உட்கார் ந்து கொண்டு பொந்தில் எலி புகுவதைக் கவனித்துக் கொண்டி ருந்தான். உபாத்யாயர் சொல்வது காதில் விழுந்தாலும் மனதில் பதியவில்லை. இவனைக் கவனித்த உபாத்யாயர் *நான் சொல்வது உன் நெஞ்சில் நுழைந்ததா?* என்று கேட்டார். பிள்ளை *எல் லாம் நுழைந்தது. வால் மட்டும் நுழையவில்லை* என்றுனும். இது வெறும் வேடிக்கைக் கதையாயினும் ஒரு காரியத்தில் நெஞ்சு ஊன்றுவிடில் அந்தக் காரியமே நடக்காததாகும் எனத் தெரிகிறது.



கர்ம யோகிக்கு ஆரம்ப நிலையில் நெஞ்சு ஆத்ம ஜ்ஞாநத்தில் ஊன்றியிராது. கர்மாவே முக்கியமாயிருக்கும். கர்மேந்த்ரியங்கள் இதர விஷயங்களில் செல்லாமல் அநுகூல விஷயமான பகவதா ராதநத்தில் ஊன்றும். இந்த்ரியங்கள் அடங்கி வசப்பட்டுவிட்டால் ஆத்ம சிந்தநம் முக்கியமாகி, கர்மத்தைச் செய்யும் போதும் நெஞ்சில் ஆத்மாவே நிறைந்திருப்பதால் கர்மம் செய்தபோதிலும் செய்யாதவன் என்னலாம்படி இருக்கிறுன். இபபடிப்பட்டவனுக்கு கர்மம் ஜ்ஞாநமாகவும் ஆகிவிடுகிறது.

(1) ப்ரஸங்காத் ஸ்வஸ்வபா வோக்தி: (2) கர்மணோ கர்மதா (கீ. ஸங்.) என்ற இரண்டு விஷயங்கள் இதுவரை பேசப்பட்டன. இனி (3) அஸ்ய ச பேதா: (4) ஜ்ஞாநஸ்ய மாஹாத்ம்யம் என்ற இரண்டு விஷயங்களைப் பார்ப்போம்.

அஸ்ய ச பேதா: – கர்ம யோகத்தில் பல வகைகள் உண்டு. முதலில்,

தைவமேவாபரே யஜ்ஞம் யோகிந: பர்யுபாஸதே |
ப்ரஹ்மாக்நாவபரே யஜ்ஞம் யஜ்ஞேநைவோப ஜுஹ்வதி ||

என்ற ச்லோகத்தில் (4-25) அபரே யோகிந: தைவமேவ பர்யுபாஸதே என்று ஒரு அதிகாரி சொல்லப்படுகிறுன். தேவ பூஜையை யஜ்ஞம் என்ற சொல் குறிக்கும். தேவதைகளைக்

குறித்து அர்ச்சநம் முதலான கர்மாக்கள் மூலம் நன்றாகப் பூஜிப்பதில் ஊன்றியிருப்பவர் ஒருவகை கர்மயோகிகள். எந்த தேவதையைப் பூஜித்தாலும் அப்பூஜை அந்த தேவதைக்கு அந்தர்யாமியான பரமபுருஷனையே சேருகிறது என்றும் அறிய வேண்டும். எல்லா நல்ல காரியங்களும் கர்ம யோகத்தில் சேர்ந்தவையே.

*அபரே ப்ரஹ்மாக்நௌ யஜ்ஞம் யஜ்ஞேந ஏவ உபஜுஹ்வதி* எனப்படுகிறது. இன்னொரு அதிகாரி ப்ரஹ்மாத்மகமான அக்நியில் யாகத்துக்கு வேண்டிய ஸாதநங்களைக் கொண்டு யாகம் பண்ணுவதில் (ஹவிஸ்ஸை சேர்ப்பதில்) ஊன்றியிருப்பவன். யாக ஹோமங்களில் ஊன்றி இருக்கும் அதிகாரி இவன். இந்த்ரிய நிக்ரஹத்தில் (புலன்களை வெல்வதில்) ஊன்றியிருப்பவன், வேதாத்யயநம், வேத அர்த்த விசாரம் இவற்றில் ஊன்றியிருப்பவன். ப்ராணாயாமத்தில் ஊன்றுபவன். இப்படி நற்காரியங்களில் ஊன்றி நிற்கும் அதிகாரிகள் எல்லோரும் கர்ம யோகிகள்தான். இவர்கள் கர்மாநுஷ்டாநத்தினால் பாபம் நீங்கப் பெற்று தேவ பூஜையில் உபயோகப்பட்ட உணவின் மிச்சத்தை உண்டு ப்ரஹ்மாத்மகமான ஆத்மாவை அடைகிறார்கள். எந்தவிதமான யோகத்தில் ஊன்றி நின்றாலும் பகவத் கைங்கர்ய ரூபமான நித்ய நைமித்திக கர்மாக்கள் அவச்யம் விடாமல் அநுஷ்டிக்கப்பட வேண்டும். இவை ஆத்ம ஸாக்ஷாத்காரத்துக்கு உதவுகின்றன. மேலே

ச்ரேயாந் த்ரவ்யமயாத்யஜ்ஞாத் ஜ்ஞாநயஜ்ஞ: பரந்தப |
ஸர்வம் கர்மாகிலம் பார்த்த! ஜ்ஞாநே பரிஸமாப்யதே ||

என்று (ச்லோகம் 4-33) ஜ்ஞாநத்தின் மேன்மையைச் சொல்லுகிறது. இதுவே ஜ்ஞாநஸ்ய மாஹாத்ம்யமாகும். த்ரவ்யங்களைக் கொண்டு செய்யப்படும் கிரியைகளை (யாகம் முதலானவை)



முக்கியமாகக் கொண்ட கர்மயோகத்தைவிட, அதில் உள்ள ஜ்ஞாந யஜ்ஞம் (ஜ்ஞாநமான அம்சம்) மிகச் சிறந்தது. அதன் அங்கங்களுடன் கூடிய எல்ல கர்மங்களும் ஜ்ஞாநத்திலேயே முடிவடைகின்றன. வர்ணாச்ரம தர்மத்தை அநுஷ்டிப்பதும் கர்மயோகமே. அர்ஜுனனுக்கு வில் முதலான த்ரவ்யாம்சங்களைக் கொண்டு கர்மாநுஷ்டாநம் வாய்க்கிறது. இங்கும் மாய்வது சரீரமே. ஆத்மா அழிவற்றவன் என்ற ஜ்ஞாநம் முக்கியம்.

கர்மாவை முறைப்படி பகவதாராதநமாகச் செய்பவனுக்கு ஆத்ம ஸாக்ஷாத்காரமான ஜ்ஞாந யோக ஸித்தி நிச்சயமாக ஏற்படும். *ஜ்ஞாநம் லப்த்வா பராம் சாந்திமசிரேணாதிகச்சதி* (4-39) – கர்ம யோகத்தை அநுஷ்டிப்பவன் விரைவில் ஜ்ஞாநயோக ஸித்தி பெற்று, அத்மாநுபவமாகிற மேலான சாந்தியை (நிலையை) அடைகிறான். இவ்விதமாக கர்மயோகத்தின் அம்சமான ஜ்ஞாநத்தின் உயர்வு பேசப்பட்டது.

முன்னத்யாயத்தில் கண்ணன் தன்னை கர்மாநுஷ்டாநமான யுத்தத்தில் தூண்டியபோது கலங்கி, *என்னை ஜ்ஞாந மார்க்கத்தில் செல்ல விடு, கர்மாவில் தூண்டாதே* என்று அர்ஜுனன் கேட்டதற்கு, *உன் நிலையில் அகர்மாவான ஜ்ஞாநத்தை விட கர்மாவே சிறந்தது* என்று சொன்னான் பகவான். இங்கு ஜ்ஞாநமே மிகச் சிறந்தது என்று சொல்லுகையால் முரண்பாடு தோற்றக்கூடும். அங்கு சொன்ன விஷயம் வேறு. கர்மயோகம், ஜ்ஞாநயோகம் என்று இரண்டு தனிப்பட்ட வழிகள் அங்கு பேசப்பட்டன. அவற்றுள் கர்ம மார்க்கம் ஜ்ஞாந மார்க்கத்தைவிட எளிது, சிறந்தது என்றான். இங்கு கர்மம் ஜ்ஞாநம் இவை இரண்டையும் கர்மாநுஷ்டாநத்தின் இரண்டு அம்சங்களாகச் சொல்லுகிறான். இவற்றுள் ஜ்ஞாந பாகமே சிறந்தது. இதுவே ஜ்ஞாநத்தின் பெருமையாகும்.

ஒரு செடியின் வித்தே (விதையே) செடியாக வளர்ச்சியடைகிறது. நம் போன்ற ஒருவன் நல்ல குருவிடம் உபதேசம் பெறுவதால் ஆத்மாவைப் பற்றி அறிவு ஏற்படுகிறது. இப்படி ஏற்படும் ஆத்ம ஜ்ஞாநம் விதையாகும். ஜீவாத்மா எம்பெருமானுக்கு உடலாக இருக்கிறன் (பகவச்சரீர பூதன்) என்று அறிதல் உண்மை அறிவு (யாதாத்ம்ய ஜ்ஞாநம்) எனப்படும். இதை மனதில் நினைத்துக் கொண்டே பகவதாராதநமாகக் கர்மாவை அநுஷ்டிக்கும்போது இந்த நினைவு முதிர்ச்சி அடைகிறது. இதுவே விதை செடியாக வளருவதாகும். மோக்ஷதசையில் ஜீவாத்மாநுபவத்துக்கு கர்மா ஜ்ஞாநம் இரண்டுமே ப்ரயோஜனங்களாக உள்ளன.

## ஐந்தாம் அத்தியாயம் – ஸந்ந்யாஸ யோகம்

கர்மயோகஸ்ய ஸௌகர்யம் சைக்ர்யம் காச்சந தத்விதா : |
ப்ரஹ்மஜ்ஞாநப்ரகாரச்ச பஞ்சமாத்யாய **உச்யதே** ||

**என்பது ஸ்ரீஆளவந்தார் அருளிச் செய்யும் ஐந்தாம் அத்யாய கீதார்த்த ஸங்க்ரஹ ச்லோகமாகும்.** கர்மயோகத்தை எளிதில் செயல் **படுத்தக்கூடிய ஸௌகர்யம், அதன்** விரைவில் பயனளிக்கும் இயல்பு, பரிசுத்தமான **ஜீவாத்ம** தரிசனமான ப்ரஹ்ம ஜ்ஞாநத்தின்படி இவை மூன்று விஷயங்களும் ஐந்தாவது அத்யாயத்தில் பேசப்படுகின்றன.

இவ்வத்யாயத்தின் முதலில் அர்ஜுனன், "கர்மம் ஜ்ஞாநம் இவற்றுள் எது ஒன்று சிறந்தது என்று உன்னால் உறுதியாக நிச்சயிக்கப்படுமோ (எண்ணப்படுமோ) அதை எனக்குச் சொல்" என்று கேட்கிறன். மேலே பகவானுடைய பதில் பார்க்கப்படுகிறது. அர்ஜுனன் கேள்வியில், "கர்மணும் ஸந்யாஸம் புநர்யோகம்



**ச சம்ஸஸி"(5-1) என்று சொல்லி இவற்றுள் எது சிறந்தது? என்று நிச்சயித்துச் சொல் எனக் கேட்டான். "கர்மணும் ஸந்யாஸம் – ஜ்ஞாநயோகம்" என்று பாஷ்யமிடுகிறர் நம் ஸ்வாமி. இங்கு கர்மாவை அடியோடு விட்டுவிடுவது ஸந்யாஸமல்ல. ஜ்ஞாநயோகத்தையே ஸந்யாஸம் என்கிறது. கர்மயோகத்தை அநுஷ்டிப்பதனால் மனது தூய்மை அடைகிறது. விருப்பு வெறுப்புகள் நீங்குகின்றன. இந்த்ரியங்களின் செயல்படுகை அடங்கி நிற்கும்போது மனது ஆத்மாவை நோக்கி நிற்கும். இந்த்ரியங்கள் முற்றிலும் அடங்கி மனது ஆத்மாவலோகனத்தில் ஊன்றியிருக்கும் நிலையே ஸந்யாஸம் எனப்படுகிறது. இதுவே ஜ்ஞாநயோகமாகும்.**

மேலும், பகவானின் பதிலிலிருந்து **அர்ஜுனனின் கேள்வியில்** என்ன அபிப்ராயம் என்று அறியலாகிறது. "ஸந்யாஸ கர்மயோகச்ச – உபௌ" என்கிறன் கண்ணன். ஸந்யாஸம் (ஜ்ஞாநயோகம்) கர்மயோகம் இரண்டுமே (ச்ரேயஸ்ஸை அளிப்பவை) என்கையால் கர்மத்தை விடுகையைக் கண்ணன் ஸந்யாஸம் என்று சொல்லவில்லை என்பது தெரிகிறது. கர்மாவையும் ஜ்ஞாநத்தையும் வேறுபட்டவைகளாகச் சொல்பவர் அறிவிலிகள் என்கிறன் பகவான். இவற்றை ஒன்றுகப் பார்ப்பவனே பண்டிதன் (அறிவாளி). மீண்டும் கர்மயோகம் எளிதில் அநுஷ்டிக்கப்பட்டு சீக்கிரம் பலனளிக்கவல்லது என்பதை வலியுறுத்துகையாலே ஸந்யாஸம் என்பது கர்மாவை அடியோடு விட்டுவிடுவதாகாது என்பது ஸித்தம்.

த்யாஜ்யமான (விடத்தக்க) அம்சங்களை விடுகை, உபாதேயமான (கொள்ளத்தக்க) அம்சங்களைப் பற்றுகைக்காக கர்மா உண்மையில் விடுபட்டுப்போவது ஜ்ஞாநம் முழுமையாக நிறம் பெறும் போதுதான். உறங்குவான் கைப்பண்டம் போல ஜ்ஞாநம் பூரண

மாக விகாஸமடையும்போது (மலரும்போது) கர்மம் தன்னடையே விலகிவிடும். உபாதேயாம்சமாவது இங்கு ப்ரஹ்மஜ்ஞாநம். இரண்டாம் அத்யாயத்தில் சொல்லப்பட்ட ஜ்ஞாநயோகம் ஆத்ம ஸாக்ஷாத்காரத்துக்குச் சிரமமான, தாழ்த்துப் பலனளிக்கவல்ல வழியாகும். மேல் அத்யாயங்களில் சொல்லும் கர்மாவில் உள் ளடங்கிய ஜ்ஞாநயோகம் கர்மஸந்யாஸத்தைவிட (கர்மாவை விட்டொழிப்பதைவிட) சிறந்தது. ஆத்மஸாக்ஷாத்காரமாகிற பல த்தை சீக்கிரம் அளிக்கவல்லது. பகவத் ஸாக்ஷாத்காரத்துக்கு பக்தியும் ப்ரபத்தியும் வேறுபடுவதுபோலே இங்கும் கொள்ளலாம்.

ஆக, ஐந்தாம் அத்யாயத்தின் முதலில் அதாவது ச்லோகங்கள் 2 முதல் 6 வரை கர்மயோகம் எளிதில் செய்து தலைக்கட்டக்கூடியது என்றும் விரைவில் பயனளிக்கிறது என்றும் காட்டப்பட்டது. *கர்மயோகஸ்ய ஸௌகர்யம் சைக்ர்யம்* என்று ஸங்க்ரஹ ச்லோகத்தில் காட்டப்பட்ட அர்த்தம் இது. *யோகயுக்தோ முநிர் ப்ரஹ்ம நசிரேணாதிகச்சதி* (5-6) – கர்ம யோகத்தை அநுஷ் டித்து (யோகயுக்த:) ஆத்மாவை மநநம் பண்ணுபவன் (முநி:) சிறிது காலத்திலேயே (நசிரேண) ஆத்ம ஸாக்ஷாத்காரம் (ப்ரஹ்ம அதிகச்சதி) பெறுகிறான் என்று கண்ணன் இதைச் சொல்லு கிறான். மேலே, *யோகயுக்தோ விசுத்தாத்மா விஜிதாத்மா ஜிதே ந்த்ரிய:* – கர்ம யோகாநுஷ்டாநத்தினால் சித்தசுத்தி பெற்று மனதையும் இந்த்ரியங்களையும் ஜயித்தவனாய், ஸர்வபூதாத்ம பூதாத்மா – தேவர் மனிதர் திர்யக் முதலான எல்லா ஜீவராசி களின் ஆத்மாக்களோடு ஒன்றாக (ஸமமாக) உள்ள ஆத்மாவை உடையவனாய் (இவ்விதம் அறிந்தவனாய்) குர்வந்நபி நலிப்யதே (4-7) – கர்மயோகத்தை அநுஷ்டிப்பனாயினும் தேஹாத்ம ப்ரமம் முதலான தோஷங்களால் கட்டுப்படுவதில்லை என்று மேலே சொல்லப்போகும் விஷயங்களுக்கு பீடிகை இடுகிறான்.



*காச்சந தத்விதா: ப்ரஹ்மஜ்ஞாநப்ரகார:* என்று ஸங்க்ரஹ ச்லோகத்தில் பரமாசார்யரான ஸ்ரீஆளவந்தார் காட்டியருளிய விஷ யங்கள் இனி விளக்கமாகப் பார்க்கப்படுகின்றன. கர்மயோகத்துக் குறுப்பான ப்ரகாரங்களை முதலில் கூறுகிறான். முக்கியமாக எதை யும் *நான் செய்கிறேன்* என்ற எண்ணத்துடன் செய்யக்கூடாது. குணகார்யமாய் செய்ய நேரிட்டது. அந்தராத்மாவான பகவான் தூண்டுதலால் செய்ய நேரிட்டது என்று எண்ண வேண்டும் என்று முன்னமே சொல்லி வைத்தான் கண்ணன். *நைவ கிஞ்சித் கரோமி இதி மந்யேத* – நான் எதையும் செய்பவனல்லேன் என்று எண்ணக்கடவன். கர்மேந்த்ரியங்கள், ஜ்ஞாநேந்த்ரியங்கள், ப்ராண, அபாந முதலான மூச்சுக் காற்றுக் கள் முதலானவை செய்ததாக எண்ணவேண்டும். (5-8,9) ப்ராக்ருதமான சரீரம் பண்ணியதாக எண்ணு. நீ செய்ததாக எண்ணாதே என்பது கருத்து.

பகவதாராதனமான காரியத்தில் வாக்கால் பகவந்நாமத்தைச் சொல்லி, கண்ணால் அவன் திவ்யமங்களவிக்ரஹத்தை ஸேவி த்து, கைகளால் புஷ்பங்களை அவன் திருவடிகளில் சேர்ப்பது அர்ச்சநம் என்ற கர்மா. இப்படியே மற்ற ஆராதனரூபமாகக் கர்மா வைச் செய்வதால் இந்த்ரியங்களும் மனதும் இதர விஷயங்களில் சபலம் இல்லாமல் ஆத்மாவில் ஈடுபட்டவன் கர்மாவின் ஐஹிக (இவ்வுலகத்திய) பலன்களில் இச்சை இல்லாமல் நிலையான ஆத்மாநுபவரூபமான ஆனந்தத்தை அடைகிறான். விஷய ஸுகத் தில் ஆசை உள்ளவன் ஸம்ஸாரத்தில் கட்டுப்படுகிறான். (5-12) ஆத்ம ஸாக்ஷாத்காரத்தில் உறுதியுடன் ஊன்றி நின்று அதை யே பரம ப்ரயோஜனமாகக் கொண்டவன் முன் செய்த வினைகள் அழியப் பெற்றவனாய் திரும்பி வருதல் இல்லாத ஆத்மாநுபவத்தை (மோக்ஷத்தை) அடைகிறான். (5-17)

இனி ப்ரஹ்மஜ்ஞாநப்ரகாரம் பேசப்படுகிறது. இங்கு ப்ரஹ்ம சப்தம் ஆத்மாவையே குறிக்கிறது. பரிசுத்த தசையில் (ப்ரக்ருதி ஸம்பந்தம் பூரணமாக விலகிய தசையில்) ஜீவனுக்கு எல்லாம் அறியும் ஜ்ஞாநப் பெருமை உள்ளதால் ப்ரஹ்ம (பெரிது) சப்தத்தால் ஜீவனைச் சொல்லலாம். பலவிதமான சரீரங்களிலுள்ள ஜீவர்கள் வெவ்வேறு ஜீவர்களாயினும் ஒரே விதமானவர்கள், ஜ்ஞாநமே ஸ்வரூபமானவர்கள் என்பதில் ஒரு ஒருமைப்பாடு உண்டு. அதாவது ஸ்வரூபத்தில் ஸாம்யம். குணசாலி, குணஹீனன் (குணமில்லாதவன்), உருவில் பெரியது, சிறியது, வாழும் முறையில் வேறுபட்டவர் (நாய், நாயிறைச்சியை உண்பவன்) இப்படி பலபல சரீரங்களில் உள்ள ஆத்மாக்களை அறிவாளிகள் ஒன்றுகப் பார்க்கின்றனர். (5-1 8)

வித்யாவிநயஸம்பந்நே ப்ராஹ்மணே கவி ஹஸ்திநி |
சுநி சைவ ச்வபாகே ச பண்டிதா: ஸமதர்சிந: || (5-18)

வித்யாவிநய ஸம்பந்நன் குணசாலி. ப்ராஹ்மணே என்பது பிறப்பில் மட்டும் ப்ராஹ்மணனுயிருந்தும் குணமில்லாதவன். பசு, யானை (கவி ஹஸ்திநி) இவை உருவ வேறுபாட்டைக் காட்டும். சுநி (நாய்) ச்வபாக (நாயிறைச்சியைப் பதப்படுத்தி உண்ணும் சண்டாளன்) இவை வ்ருத்தத்தில் (வாழ்க்கை முறையில் வேறுபாடு) வ்யத்யாஸம் காட்டும். இப்படி மூன்று விதத்தில் வேறுபாடு காட்டப்பட்டது. வித்யா விநய ஸம்பந்நே ப்ராஹ்மணே (குணசாலியான ப்ராஹ்மணன்) என்று அர்த்தம் கொள்வது தவறு. மற்றபடி கவி, ஹஸ்திநி என்றும் சுநி, ச்வபாகன் என்று இரண்டிரண்டாக கூறுகிறபடியால் முதலதும் வெவ்வேறுன இரட்டையையே சொல்லுவதாக் கொள்ள வேண்டும். வித்யாவிநயஸம்பந்நனே *தொண்டாம் இனமும்* என்றும், வெறும் ப்ராஹ்மணனை



*துணை நூல் மார்பில் அந்தணரும்* என்று திருமங்கையாழ்வார் திருமொழியில் காட்டித் தந்துள்ளார். (1-5-9) பின்னவருக்கு மார்பில் நூல் வெறும் அடையாளம் மட்டுமே. இவ்வாறு வ்யக்திகளில் ஜ்ஞாநத்தின் முதிர்ச்சி வேறுபட்டிருக்கும். ஆத்மா ஜ்ஞாந ஸ்வரூபன் (அறிவு). அறிவாளியும் (ஜ்ஞாநகுணகன்) கூட. ஜ்ஞாநமே உருவான (ஸ்வரூபம்) படியில் மாறுபாடில்லை. குணமான ஜ்ஞாநத்தின் மலர்ச்சி அவரவர் வினைப்படி வேறுபடும். ஜீவனின் ஸ்வரூபத்தை மட்டும் பார்ப்பவன் பண்டிதன் - அறிவாளி. அவன் எல்லா ஜீவர்களும் ஸ்வரூபத்தில் (ஜ்ஞாநாகாரம்) ஒன்றே என்று பார்க்கிறன். வித்யாவிநய ஸம்பந்நே, ப்ராஹ்மணே, கவி, ஹஸ்திநி என்று இவைகளில் (ஏழாம் வேற்றுமை) அறிவாளி ஸமநோக்குடையவன் என்கையால் ஆத்ம ஸ்வரூபம் ஒன்றைப் பற்றியே இங்கு ஸாம்யம் என்று கருத்து. இதுவே ப்ரஹ்ம ஜ்ஞாந ப்ரகாரம்.

மேலே இப்படி ஸமதர்சியான பண்டிதனின் பெருமை பேசப்படுகிறது. இந்த அறிவாளி ஆத்மாவை உள்ளபடி உணர்ந்தவன். கர்மாநுஷ்டாநத்தினுல் மனத் தூய்மை பெற்று இந்த்ரியங்களை அடக்கி ஐஹிக (இவ்வுலகம் சுவர்க்கம் முதலியன) பலன்களில் ஆசையற்று ஆத்மாவை அநுபவிக்கும் ஆனந்தத்தில் நிலை நிற்பவனே பண்டிதன், ஸமதர்சி எனப்படுவான். ஸுகம், துக்கம் இவைகளை ஸமமாகப் பார்ப்பவனும் ப்ரியமானவை அப்ரியமானவை இவைகளின் (தன்னுடன்) சேர்க்கையால் மனம் விகாரமடையாமல் இருப்பவனுமானவனே ஸமதர்சியாவான்.

கர்ம ஜ்ஞாந யோகங்களில் சிறந்த ஒன்றை நிச்சயித்துச் சொல்லும்படி (5-1) கேட்ட அர்ஜுனனுக்கு செயற்கெளிதானதும் விரைவில் பயனளிக்க வல்லதும் கர்ம யோகமாகையால் அதுவே

சிறந்தது என்று நிரூபித்தருளினுன் கண்ணபிரான். கர்ம யோகத்தில் ஜ்ஞாநம் உள்ளீடாகச் சேர்ந்ததாலே இதனுல் ஆத்மஸாக்ஷாத்காரம் ஏற்பட்டு மோக்ஷம் கிட்டுவதைச் சொன்னுன். கர்மயோகம் ஸர்வலோக மஹேச்வரனும், ஸர்வபூத ஸுஹ்ருத்துமான (எல்லா உயிர்களுக்கும் நன்மையை விருப்புமவன்) கண்ணனுக்குத் திருவாராதனமாக அமைகிறது. இதை ஏற்றுக் கொள்பவன் பரம புருஷனுன க்ருஷ்ணன். இதனுலும் கர்மயோகமே எளிதில் அநுஷ்டிக்கக் கூடியதும் சிறந்ததும் என்று தெளிவாகிறது. அவச்யம் செய்ய வேண்டிய நித்ய நைமித்திக கர்மாக்களினுல் பரம உதாரனுன ஸர்வேச்வரன் மிகுந்த ப்ரீதியை அடைகிருன் என்பதை அறிந்து கர்மயோகநிஷ்டன் மிகுந்த சாந்தியை (ஸுகத்தை) அடைகிருன்.

## ஆரும் அத்தியாயம் – அத்யாத்ம யோகம்

யோகாப்யாஸ விதிர்யோகீ சதுர்த்தா யோகஸாதநம் |
யோகஸித்தி : ஸ்வயோகஸ்ய பாரம்யம் ஷஷ்ட உச்யதே ||

என்பது ஆரும் அத்யாயத்துக்கான கீதார்த்த ஸங்க்ரஹ ச்லோகமாகும். (1) யோகாப்யாஸ விதி – ஆத்ம ஸாக்ஷாத்காரத்துக்கான பயிற்சி முறை, (2) சதுர்த்தா யோகீ – நான்கு விதமான ஸமதர்சிகள் (யோகி), (3)யோகஸாதநம் – அதற்கு வேண்டிய அப்யாஸம், வைராக்யம் இத்யாதி, (4) யோக ஸித்தி யோகம் – (நடுவில் தடைப்பட்டாலும் மேலே) பயன் தருவது, (5) ஸ்வயோகஸ்ய பாரம்யம் – தன்னைப்பற்றிய (பகவானைப் பற்றிய) பக்தியின் மேன்மை ஆக இவை ஐந்தும் ஆரும் அத்யாயத்தில் சொல்லப்பட்ட விஷயங்கள் என்று பரமாசார்யரான ஸ்ரீஆளவந்தார் அருளிச் செய்கிருர். இதில் யோகாப்யாஸ விதி என்ற முதல் விஷயமே முக்கியமாகச் சொல்லப்படுகிறது என்றும் மற்றவை ப்ரஸங்காத் சொல்லப்படுகின்றன என்றும் நம் ஸ்வாமி எம்பெருமானுர் திருவுள்ளம்.



நம்மை நாம் எவ்வளவு உத்க்ருஷ்டராக (உயர்ந்தவராக) நினைத்துக் கொண்டாலும் உண்மையில் நம் போல்வார் நேரே ஜீவ ஸாக்ஷாத்காரத்துக்கான யோகத்தை அப்யஸிக்க வல்லவரல்லர் என்று பகவதபிப்ராயம். முதலில், கர்மங்களுக்கு ஐஹிக (இவ்வுலகத்திய மற்றும் ஸ்வர்க்கம் முதலான) பலன்களில் பற்றில்லாமல் கர்மயோகத்தை அதுவே ப்ரயோஜனம் என்று அநுஷ்டிப்பவன் ஸந்யாஸி. (ஜ்ஞாநயோகநிஷ்டன்). கூடவே, அவனே யோகி (கர்மயோகி). இவன் கேவல கர்மயோகியுமல்லன், இவன் கேவல ஜ்ஞாந யோகியுமல்லன் என்னும் (ஐந்தாம் அத்யாயத்தில் சொன்ன) இக்கருத்தை மேலும் திடப்படுத்துகிருன். (6–1) ஜ்ஞாநம் என்னும் ஸந்யாஸம் கர்மயோகமே. தேஹாத்மாபிமானத்தை விடாதவன் கர்மயோகியாக மாட்டான். கர்மயோகநிஷ்டன் இந்த்ரியங்களால் அநுபவிக்கப்படும் விஷயங்களில் பற்றற்ற நிலையை அடைந்து ஆத்மஸாக்ஷாத்காரம் பெறுகிருன். விஷயங்களில் பற்றற்ற மனத்தை உடையவனுய்த் தன்னை உயர்த்திச் கொள்ளக்கடவன். மனமே பற்றற்ற நிலையில் நண்பன். பற்று உண்டானுல் அதுவே கொடிய விரோதி. (6–5)

ஆருவது ச்லோகம் முதல் யோகாப்யாஸத்துக்கு உண்டான தகுதியைச் சொல்லுகிருன். மனதைப் பரிசுத்த ஜீவனில் ஒன்றவைத்து ஜீவஸாக்ஷாத்காரம் (அதைப் பார்த்து அநுபவித்தல்) பெற விரும்புவன் குளிர், வெப்பம், ஸுகம், துக்கம், மானம் (கௌரவித்தல்) அவமானம் (அவமதித்தல்) எல்லாவற்றிலும் மனவிகாரம் அடையாமல் பொறுமையுடையவனுய் இருத்தல் வேண்டும். இதுவே

திதிக்ஷ என்பது. ஸ்ரீபாகவதத்தில் பிக்ஷுகீதை என்று சிறிது கடினமான பகுதி ஒன்று உண்டு. அதில் வரும் அதிகாரி சந்தனம் புஷ்பம் முதலியவற்றால் பூஜையையும், மலமூத்ராதிகளால் பரிபவத்தையும் இவை "சரீரத்துக்கு ஏற்படுமவையே" என்று மனம் எவ்வித சலிப்பும் அடையாமல் பார்க்கப்படுகிறான். நண்பன், எதிரி யாரையும் மண், பொன் இவற்றையும் ஸமநோக்குடன் பார்ப்பவனாயிருக்கிறான். இவனே யோகத்துக்குத் தக்க அதிகாரி. (7,8,9)

தர்மபுத்ரரை கர்மநிஷ்டரில் தேர்ந்த அதிகாரியாகச் சொல்லலாம். அவருக்கு எதிரியே கிடையாது. சொக்கட்டானாடி ராஜ்யத்தை இழந்து வனம் செல்லும்போது தமது கண்களை மூடிக் கொண்டு சென்றார். பரிபவப்படுத்திய கௌரவர்களைக் கண்ணால் பார்த்தால் அவர்களுக்கு ஏதாவது கெடுதல் வரக்கூடும் என்று அவர்களும் வாழ வேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில். இப்படிப்பட்டவர்களுக்கே பல விரோதிகள் பார்க்கப்படுகின்றனர். ஸர்வபூத ஸுஹ்ருத்தான கண்ணனுக்கும் இப்படியே.

யோகாப்யாஸ நிலையில் தனிமை மிக முக்கியம். ஸாதந நிலையில் இருந்தாலும் ஆத்மாவலோகந (ஸாக்ஷாத்கார) நிலையில் யாரும் வேண்டாம். ஏகாகீ (தனியனாய்) நிராசீ அபரிக்ரஹ: (பற்றற்றவனாய்) ஆத்ம தரிசனம் பண்ண வேண்டும். பாகவதக் கதை ஒன்றை இங்குச் சொல்ல விரும்புகிறேன். ஒரு வீட்டிற்குத் திடீரென சில விருந்தினர் வந்தனர். அப்பொழுது அந்த வீட்டுக்காரரின் பெண் தனியாக இருந்தாள். வந்தவர்களுக்கு சமைத்திட அரிசி வீட்டிலில்லை. குடும்ப கௌரவத்தை விட்டுக் கொடுக்கலாகாது என்று வந்தவர்களை விருந்துண்ண அழைத்துவிட்டு "ஸ்நானம் பண்ணி வாருங்கள்" என்று அவர்களை அனுப்பிவிட்டு



வீட்டிலிருந்த நெல்லை உரலில் குத்த ஆரம்பித்தாள். அவள் கையிலிருந்த வளையல்கள் ஒன்றோடொன்று பட்டு சப்தம் கேட்டது. அவர்கள் அங்கு வந்தால் அது கேட்டு வீட்டில் வேலைக்காரி இல்லை என்று எண்ணப் போகிறார்களே என்று இரண்டு வளைகளை மட்டும் வைத்து மற்றவைகளைக் கழற்றி விட்டு நெல்லைக் குத்த ஆரம்பித்தாள். அப்பொழுதும் ஓசை கேட்கவே ஒரு வளையை மட்டும் வைத்துக் கொண்டு மற்றதைக் கழற்றி விட்டாள். இரண்டு வளை இருந்தால்தானே ஒலிக்கும்? யோகிக்கு எந்த ஸங்கமும் தடை. ஸத்ஸங்கமும் கூட வேண்டாம்.

பதினொன்றாம் ச்லோகம் முதல் யோகிக்கு வேண்டிய கட்டுப்பாடுகளை விவரிக்கிறான் கண்ணபிரான். முதலில் சுசௌ தேசே – சுத்தமான இடத்தில் அப்யஸிக்க வேண்டும் என்கிறான். பாபிகள் ஸம்பந்தம் கூடாது. அவர்கள் ஸொத்தான இடமோ அவர்கள் அபிமானிக்கும் இடமோ ஆகாது. பாஷண்டி, பதிதன், பொன் திருடுமவன் இவர்களை முக்கியமாகப் பாபிகளாக எடுக்கிறார்கள். வேதத்தில் சொன்ன ஆசாரத்தைக் கைவிட்டுத் தன் நெஞ்சில் தோற்றியதைச் செய்பவன் பாஷண்டி. பிறர் மனைவியைப் புணர்பவன் பதிதன்.

ஆஸனத்தில் அமர வேண்டும். அது உயரமாகவோ மட்டமாகவோ இல்லாமல் நடு அளவில் இருக்க வேண்டும். அதன்மேல் துணி விரிப்பு. அதன்மேல் மான் தோல். அதன்மேல் பரப்பிய தர்ப்பம். இப்படி ஆஸனம் அமைய வேண்டும். தர்ப்பம் ஸத்வ வர்த்தகம். தர்ப்பப் படுக்கையில் உயிர் விடுமவன் மோக்ஷமடைகிறான். மரணத் தருவாயில் ஆப்தர்களை தர்ப்பப் படுக்கையில் விடுதல் நலம். உடல், கழுத்து இவை நேராகவும் அசையாமலும் இருக்க வேண்டும். கண்பார்வையை மூக்கின் நுனி மேல் செலுத்த

வேண்டும். மனத்தை அடக்கி அதை ஆத்மாவில் ஒன்ற வைக்க வேண்டும். மனதில் பயம் கூடாது. மனதை பகவானிடம் லயிக்கப் பண்ண வேண்டும். மிதமான ஆகாரம் அவச்யம். அதுபோல மிதமான தூக்கமும் வேண்டியதே. பிரமசரியம் அவச்யம். மனது ஆத்மாவிலேயே நிலைத்திருக்கப் பெற்றவனே யோகி. இது அப்யாஸ தசை.

ஸாக்ஷாத்கார தசையில் ஆத்மாநுபவ ஸுகம் பேரின்பமாக இருக்கும். நல்ல தூக்கத்தில் ஸம்ஸாரி ஜீவனும் ஆத்மாநுபவம் பண்ணுகிறான். ஆனால் இது தெளிவான அநுபவம் அன்று. யோக தசையில் இந்த அநுபவம் விலக்ஷணமாய்த் தெளிவுடன் இன்ப மயமாய் இருக்கும். ஒரு தீபம் இருக்குமிடத்தில் ப்ரபை (ஒளி) பார்க்கப் படுகிறது. காற்றிருந்தால் ப்ரபை சலிக்கும். (அசையும்). ஜீவன் தீபம். ஜ்ஞாநம் ப்ரபை. ஜ்ஞாநம் சலனமில்லாமல் ஆத்மாவை அநுபவிப்பது யோகதசை. ஆத்மஸேவயா உபரமதே – சித்தம் வெளி விஷயங்களில் அணுகாமல் ஆத்மாவிலேயே ஈடுபட்டு ரமிக்கும் நிலை. இதை அடைந்தால் வேறு எதையும் பொருட்படுத்த மாட்டான். எந்த ஸுகமும் துக்கமும் துளியும் பாதிக்காது. *இது தன்னையே அநுபவிக்க அமையாதோ?* என்று தன் பக்கலிலே கால் தாழப் பண்ணும். (உற்றது வீடுயிர்– திருவாய்மொழி 1–2–5 ஈடு) இக்குழியில் விழவேண்டா. செற்றது *மன்னுறில் அற்றிறை பற்றே* என்று உபதேசிக்கிறார் ஆழ்வார். எம்பெருமானிடத்தில் பக்தி பண்ணுங்கோள் என்றபடி.

இனி யோகீ சதுர்த்தா என்று ஸங்க்ரஹ ச்லோகத்தில் சொல்லப் பட்டது விவரிக்கப்படுகிறது. நான்கு தசைகளிலுள் யோகிகளை – முதல்படி, இரண்டாம்படி, மூன்றும்படி, நான்காம்படி என்று பாகுபடுத்தி நான்கு வகையாகப் பேசுகிறது.



இவர்களுள் முதல் படியிலிருப்பவனை – ஸர்வத்ரஸமதர்சந : (6–29) என்கிறது. தன்னை எல்லா ஆத்மாக்களிலும் எல்லா ஆத்மாக்களையும் தன்னிலும் இவன் பார்க்கிறான். அதாவது, எல்லா ஜீவர்களுடன் ஒத்தவனாகத் தன்னையும் தன்னுடன் ஒத்தவர்களாக எல்லா ஜீவர்களையும் காண்கிறான். இவன் தன் ஆத்மாவை உள்ளபடி ஜ்ஞாநாநந்த ஸ்வபாவனாகப் பார்த்து, மற்றைய ஆத்மாக்களும் இப்படியே என்று பார்த்து, எல்லாம் ஒத்தவை (ஸமமானவை) என்று அறிகிறான். தன்னை அறிந்து விட்டால் மற்ற ஆத்மாக்கள் தன்னையொத்தவை என்று நிச்சயித்து அறிதல் எளிதாகும்.

*யோமாம் பச்யதி ஸர்வத்ர ஸர்வம் ச மயி பச்யதி* (6–30) என்பது இரண்டாவது நிலை. *எல்லா ஆத்மவஸ்துக்களிலும் என்னைப் பார்க்கிறான் – என்னில் எல்லா ஆத்ம வஸ்துக்களையும் பார்க்கிறான்.* புண்யபாபங்கள் அழிந்த முக்தி நிலையில் ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒத்த தத்வங்களாயிருக்கும். இதை அறிவது இரண்டாம் நிலை.

*ஸ யோகீ மயி வர்த்ததே* (6–31) பரமாத்மாவுடன் ஸாம்ய அறிவை வேறொரு விதத்தில் பார்ப்பதை மூன்றாவது நிலையாகச் சொல்லுகிறான். பரமாத்மா ஸ்வரூபத்தால் விபு – எங்கும் உள்ளவன். சுருக்கமற்ற தனது ஜ்ஞாநத்தாலும் (எல்லாம் அறிபவனாய் இருக்கும் இருப்பு) எங்கும் உள்ளவன். ஜீவன் அணு (மிகச்சிறியவன்). தானாக எங்கும் இருக்க முடியாது. ஆனாலும் முக்தநிலையில் இவன் அறிவு பரமாத்மாவின் அறிவைப்போல எங்கும் பரந்துள்ளதாய் இருக்கும். இப்படிப் பரமாத்மாவுடன் ஒத்தமையை அறிவது மூன்றாவது நிலை.

*ஸ யோகீ பரமோ மத :* (6–32) என்று எல்லோரிலும் சிறந்த

வறுக ஒரு யோகியைச் சொல்லுகிறன். இவனது நான்காவது நிலே. இவன் ஆத்மாவில் ரமிப்பவன். எத்தகைக்தான பெரிய துக்கத்திலும் (நஷ்டத்திலும்) துயரமடைவதில்லே. எத்தகைத்தான பெரிய ஸுகத்திலும் (லாபத்திலும்) இவன் மகிழ்ச்சி அடைவதில்லே. ஸுகம் துக்கம் எல்லாம் ஒரே மாதிரி ஒத்தவையாயுள்ளன இவனுக்கு. இதுவே நான்காவது நிலே. இப்படி நான்கு விதமாக *யோகீ சதுர்த்தா* என்பது காட்டப்பட்டது.

இனி யோக ஸாதநம். இங்கு 33,34 ச்லோகங்கள் அர்ஜுனன் வசனம். *காற்றைப் பிடித்துக் கலத்திலடைக்கப் போமோ? சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண! மனது எப்போதும் நிலேயில்லாமல் சலிக்கிறது. தன் வழியே இழுப்பதில் பலமுடையதாகப் பார்க்கப் படுகிறது. அதை அடக்குவது என்பது இயலாத கார்யம் என்று நான் நினேக்கிறேன்.* இப்படி அர்ஜுனன் சொல்ல, கண்ணன், *நீ சொல்வது உண்மைதான். ஆயினும் அப்யாஸத்தால் (பயிற்சியால்) மனதை அடக்கி ஒருபடிப்படுத்த முடியும்* என்கிறன். அப்யாஸமாவது மீண்டும் மீண்டும் பண்ணும் முயற்சி. உலக விஷயங்களில் உள்ள குறைகளேக் கண்டு விலகுகை வைராக்யம். ஆத்மாவில் மனதை ஒருங்கவிடுவது அப்யாஸத்தினுல் ஆகவேண்டும். தினமும் கோயிலுக்குச் சென்று பெருமாளே ஸேவித்தால் பகவத் ஸம்பந்தம் திடப்படுகிறது. இது அப்யாஸம். ஆழ்வார், *என்னேத் தீமனம் கெடுத்தாய்! மருவித் தொழும் மனமேதந்தாய்* என்று நன்றி தோற்றப் பேசுகிருர். இதையே நாம் ப்ரார்த்தனேக்கு விஷயமாக்கலாம். *தீமனம் கெடுத்து மருவித்தொழும் மனமே தந்தருள்வாய்* என்று மீண்டும் மீண்டும் வேண்டினுல் அவன் அப்படியே க்ருபை பண்ணியருளுவான்.

மேலே அர்ஜுனன் கண்ணனிடம் ஒரு ப்ரச்நம் பண்ணுகிறன்.



*கர்மயோகத்தினுல் ஜீவஸாக்ஷாத்காரம் கைகூடும் என்றும். இப்படி ஸாக்ஷாத்கரிப்பதற்கு முன்னமேயே இந்த யோகத்திலிருப்பவன் மரணமடைந்தால் என்னவாகும்? இவனுக்கு இவ்வுலக போகமும் இல்லாமல் அவ்வுலகத்திய மோக்ஷமும் இல்லாமல் நாசமடைந்து விடாமலிருப்பானு?* என்று. இதற்கு பகவான் அளிக்கும் பதில் - *கல்யாணக்ருத் கச்சித் துர்க்கதிம் ந ஹி கச்சதி - மங்களகரமான காரியத்தைச் செய்யும் அதிகாரி எவனும் துர்க்கதியை அடையவே மாட்டான்* என்பதே. இப்படி நழுவியவன் நல்லுலகங்களில் சென்று ஸுகப்பட்டுப் பிறகு நற்குடியில் பிறந்து ஆத்மப்ராப்தியான மேலான கதியை அடைகிறன். (41-45)

மேலே 46வது ச்லோகத்தில் இதுவரை விவரிக்கப்பட்ட யோகியின் உயர்வு பேசப்படுகிறது. *தபஸ்வி (உடலேச் சுருக்கி ஐம்புலன்களே அடக்கி தபஸ் மட்டும் செய்பவர்), கர்மி (பலனே உத்தேசித்து யாகம் முதலிய கர்மாக்களேச் செய்பவர்), ஆத்மஜ்ஞாநம் தவிர மற்ற அறிவு படைத்த ஜ்ஞாநி இவர்களெல்லாரையும் விட ஜீவாத்ம யோகியே மிகச் சிறந்தவன். ஆகையால் நீ யோகியாக ஆவாய் அர்ஜுனு!* என்கிறன் பகவான்.

இந்த அத்யாயத்தின் இறுதி ச்லோகத்தில் (47) கண்ணன் மேல் ஷட்கத்தில் (ஆறு அத்யாயங்களில்) சொல்லப்போகும் பக்தி யோகத்தை அறிமுகப்படுத்துகிறன். *ச்ரத்தாவாந் பஜதே யோமாம் ஸ மே யுக்ததமோ மத: - ச்ரத்தையுடையவன் - ஆர்வத்துடன் என்னே உபாஸிப்பவன் (பக்தி பண்ணுமவன்) மிக உயர்ந்தவன் என்பது எனது மதம் (எண்ணம்)* என்கிறன். இதையே *ஸ்வயோகஸ்ய பாரம்யம்* - பக்தியோகத்தின் உயர்வு என்று கீதார்த்த ஸங்க்ரஹ ச்லோகம் காட்டித்தருகிறது.

யோகிநாமபி ஸர்வேஷாம் மத்கதேநாந்தராத்மநா |
ச்ரத்தாவாந் பஜதே யோ மாம் ஸ மே யுக்ததமோ மத: ||

என்று இந்த 47வது ச்லோகம். "முற்கூறிய யோகிகளைக் காட்டிலும் என்னிடம் ஈடுபட்டிருக்கும் நெஞ்சினனாய், என்னைக் கிட்டுவதில் ச்ரத்தை உடையவனாய் எவன் என்னை பஜிக்கிறானோ அவன் மிகவும் உயர்ந்தவன் என்பது எனது அபிப்ராயம்" என்கிறான் கண்ணன். "யோகிகளுள் என்னை பஜிப்பவன் சிறந்தவன்" என்பது ஆறும் வேற்றுமையின் அர்த்தம். அது இங்கு ஏலாது. இங்கு உயர்ந்தவனாகச் சொல்லப்படும் அதிகாரி முன்பு சொல்லப்பட்டவர்களில் வேறுபட்டவன்.

ஒரு உதாரணம் கொண்டு விளக்குவோம். 36 கால் மண்டபத்தில் உள்ள தூண்களில் ஒரு குறிப்பிட்ட தூண் அழகாக உள்ளது. (6ம் வேற்றுமை). 16 கால் மண்டபத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட தூண் அம்மண்டபத்தில் உள்ள தூண்களில் அழகு. (6ம் வேற்றுமை) (16 கால் மண்டபத்தூண் 36 கால் மண்டபத் தூண்களைவிட அழகு (5ம் வேற்றுமை). இவையெல்லாம் பொருத்தமானவை. 36 கால் மண்டபத் தூண்களில் 16 கால் மண்டபத் தூணே அழகு என்பது சரியாகாது. தபஸ்வி, கர்மி முதலான அதிகாரிகளைவிட ஜீவாத்ம யோகி சிறந்தவன் என்றான், 6-46ல். இங்கு (47) தன்னை பஜிக்கும் பக்தனை உயர்ந்தவன் என்பதால் முன் சொன்னவர்கள் யாவர்களைக் காட்டிலும் இவன் சிறந்தவன் என்று 5ம் வேற்றுமைப் பொருளே பொருந்தும். இதை விரிவுக் கஞ்சாமல் நம் ஸ்வாமி எம்பெருமானார் இங்கு விவரித்தருளுகிறார். ச்லோகத்தில் 6ம் வேற்றுமை தோன்றினாலும் பொருள் 5ம் வேற்றுமைப் பொருளே. கீழ்ச் சொன்ன யோகிகளுள் அவர்களுள் சிறந்த ஜீவாத்ம யோகியும் ஒருவன். இவர்கள் எல்லாரையும்விட பரமாத்மயோகி (பக்தி நிஷ்டன்) மிகச் சிறந்தவன். முதல் 6 அத்யாயங்களில் சொல்லப்பட்டவை ஜீவாத்மாவையே முக்கியமாகக் கொண்டவை. இங்கு பரமாத்மாவைச் சொன்னது ப்ராஸங்கிகம். பரமாத்ம யோகியைப் பற்றி இனிமேல்தான் சொல்லப் போகிறான் கண்ணன். "மத்கதேநாந்தராத்மநா" தன்னிடத்தில் (கண்ணனனிடம்) ஊன்றிய மனதை உடையவன் என்று ஒரு புதிய அதிகாரியை அறிமுகப்படுத்துகிறான். இவன் முன் சொல்லப்பட்டவர்களைவிட மிக உயர்ந்தவன்.



இந்த 47ம் ச்லோகத்தில் என்னிடம் (பரமாத்மாவிடம்) லயித்த மனதை உடையவன் என்றதால் பரமாத்ம ஜீவாத்ம பேதம் சொல்லப்பட்டதாயிற்று. "யோகிநாம் ஸர்வேஷாம்" என்று பன்மையில் சொல்லியதால் ஜீவர்கள் வேறுபட்ட பலர் என்று பேதம் காட்டப்பட்டதாயிற்று. ஆறும் அத்யாயத்தில் ஜீவாத்மாவைப் பற்றியே பேச்சு. மேலே இவன் பரமாத்மாவிடம் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும் என்று பேசப்படுகிறது. அத்வைதிக்கு ஜீவ பர பேதம் இல்லை. இருவரும் ஒன்றே. முன் சொன்ன பாகுபாடு அத்வைதத்துக்குச் சேராது. ஸ்ரீபாஷ்யத்தில் மங்கள ச்லோகமாக ப்ரார்த்தனை (அகில புவந ஜந்ம....) பார்க்கப்படுவது போல சங்கர பாஷ்யத்தில் இல்லை. ஒரு வைதிகர் பண்ணிய பாஷ்யத்தில் மங்கள ச்லோகம் இல்லாதது குறையே. ஆனால் ஜீவபர அபேதம் (இருவரும் ஒன்றே என்பது) சொல்லுகையால் யாரை யார் துதிப்பது என்று மங்கள ச்லோகம் இல்லை என்பர்.

## முதல் ஷட்கத்தின் திரண்ட கருத்து

இந்த 6 அத்யாயங்கள் பூர்வஷட்கம் (முதல் ஷட்கம்) எனப்படும். இவற்றின் ஸாரத்தை "ஜ்ஞாநகர்மாத்மிகே நிஷ்டே யோகலக்ஷ்யே

ஸுஸம்ஸ்க்ருதே | ஆத்மாநுபூதி ஸித்த்யர்த்தே பூர்வஷட்கேந சோதிதே || என்று பரமாசார்யரான ஸ்ரீஆளவந்தார் ஸங்க்ரஹித்து உள்ளார். பலத்தைப் பெறும் வரை நிலையாகப் பண்ணும் முயற்சி நிஷ்டையாகும். அப்படியே ஜ்ஞாநமாகிற நிஷ்டை ஜ்ஞாநயோகம். கர்மயோகம் தபஸ், தீர்த்த ஸ்நாநம், யாகம் முதலியவற்றைச் செய்தலாகும். இதனால் சித்தசுத்தி பெற்று பரிசுத்த ஆத்மாவான தன் ஸ்வரூபத்தை த்யானம் பண்ணுவது ஜ்ஞாநயோகம். இது இரண்டாம் அத்யாயத்தில் சொல்லப்பட்டது. கர்ம யோகத்தின் மூலமாகவே ஆத்மஸாக்ஷாத்காரம் பெறுகை மூன்றும் அத்யாயத்தில் சொல்லப்பட்டது. சிஷ்டர்கள் (சாஸ்த்ர தார்பர்யம் அறிந்த பெரியோர்கள்) அநுஷ்டிக்கும் முறை இதுவே. நாம் பகவானுக்கு சேஷப்பட்டவர்கள் என்ற அறிவும் இதர பலன்களில் பற்றில்லாமையும் கர்மஜ்ஞாந நிஷ்டைக்கு அவசியம். இப்படி கர்மஜ்ஞாந யோகங்களை அநுஷ்டிப்பவனுக்கு ஆத்மாவலோகனம் (ஆத்மாவைப் பார்ப்பது) எனப்படும் ஆத்மஸாக்ஷாத்காரமே பலன். பிறகு சரீரம் விலகப்பெற்ற நிலையில் ஆத்மாநுபவம் பலனுகிறது. இவை முதல் ஆறு அத்யாயங்களில் விதிக்கப்பட்டன. முதலத்யாயமும் இரண்டில் 11 ச்லோகங்களும் முன்னுரை என்பது நம் ஸ்வாமி எம்பெருமானாருடைய மதம் என்பதை நினைவு கூற வேண்டும்.

இனி இந்த ஆறு அத்யாயங்களில் கூறப்பட்டுள்ள அர்த்த விசேஷங்களை *ஷட்க க்ரோடீகரணம்* என்ற முறையில் மீண்டும் ஒரு முறை சுருக்கமாக அநுபவத்தில் கொள்வோம். விஷயத்தின் கௌரவத்தைப் பார்க்கும்போது இது தவிர்க்கமுடியாததாகிறது.

நமக்கு வேதம் அநாதியான ப்ரமாணமாகும். வைதிகரில் த்ரி மதஸ்தர்களும் (சங்கரர், ராமாநுஜர், மத்வர் இவர்களை ஆசார்யர்களாகக் கொண்ட மதஸ்தர்கள்) உபநிஷத், வ்யாஸரின் ப்ரஹ்ம ஸூத்ரம் (சாரீரகம்), பகவத்கீதை இவை மூன்றையும் ப்ரஸ்தாந த்ரயம் என்ற முக்கிய ப்ரமாணங்களாகக் கொண்டுள்ளனர். கீதையின் ஆழ் பொருள்களை ஸ்ரீமந்நாதமுனிகள் நம்மாழ்வார் அருளால் பெற்று உய்யக்கொண்டார் மணக்கால் நம்பி மூலமாகத் தமது திருப்பேரனை ஆளவந்தாருக்குக் கிடைக்கும்படி செய்தார். ஆளவந்தார் இவ்வர்த்தங்களைத் தமது கீதார்த்த ஸங்க்ரஹ நூலில் 32 ச்லோகங்களாக அருளிச் செய்தார். இந்நூலை அடிப்படையாகக் கொண்டே நம் ஸ்வாமி எம்பெருமானார் தமது கீதா பாஷ்யத்தை அருளிச் செய்தார்.

*அவரவர் வர்ணாச்ரமங்களுக்குரிய தர்மங்கள், ஆத்ம ஜ்ஞாநம், பற்றின்மை இவைகளால் உண்டாகும் பக்திக்கு விஷயமாம் பரம்பொருளான நாராயணன் கீதா சாஸத்ரத்தில் கூறப்படுகிறான்* என்று சாஸ்த்ர ஸாரத்தை முதலில் காட்டியருளியிருக்கிறார் ஸ்ரீ ஆளவந்தார்.

*சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம்* என்றும் *ஸ்வேஸ்வே கர்மண்யபிரத:* என்றும் சொல்லுகிறபடி வர்ணாச்ரமங்களுக்குச் சேர பகவானின் ஆஜ்ஞாரூபமான தர்மம் விதிக்கப்பட்டுள்ளது. ஸ்வதர்மமாவது கர்ம யோகம். இது வைராக்யத்துடன் (பற்றில்லாமல்) அநுஷ்டிக்கப்பட வேண்டும். பகவானைத் தவிர்த்து இதர விஷயங்களில் ராகம் (ஆசை, பற்று) இல்லாமலிருப்பதே வைராக்யம். வைராக்யம் உள்ளவனுக்கே மோக்ஷமுண்டு. வைராக்யம் இல்லையேல் மோக்ஷமில்லை. ராகமே ஸம்ஸாரத்திற்கு (பலபிறவிகள் எடுப்பதற்கு)க் கிழங்காகும். கர்மாநுஷ்டாநத்தினால் சித்த சுத்தி ஏற்பட்டு ஆத்மாவைப்பற்றிய உண்மையறிவு ஏற்பட்டவனுக்கு பக்தியோகம் அடுத்த நிலையாகும். பக்தி ஒன்றினாலேயே அடையத் தகுந்தவன் பரமாத்மா – பகவான் நாராயணன். இந்த

அர்த்தமே கீதா சாஸ்த்ரத்தில் ஸாரமாக ஸ்ரீக்ருஷ்ணனால் பேசப்பட்டுள்ளது.

அர்ஜுனனுக்கு இடமில்லாதவிடத்தில் ஸ்நேஹம் (ப்ரீதி, ஆசை) காருண்யம் இவை ஏற்பட்டதால் விளைந்தது தர்ம விஷயத்தில் கலக்கம். இவன் காட்டிய கருணை இவனுடைய வர்ணாச்ரம தர்மங்களுக்கு ஒத்ததல்ல. இதனால் கலங்கியவன் கண்ணனை அடிபணிந்து ப்ரபன்னனாய்த் தனக்கு ச்ரேயஸ் ( உயர்வு, ஆத்ம நன்மை) அளிக்கும் வழியை நிச்சயித்துக் கூறும்படி கண்ணனை வேண்ட அதனால் பிறந்தது இந்த கீதா சாஸ்த்ரம். உடலே ஆத்மா என்று இருக்கும் நபர்களுக்கு இந்த கீதை அவசியமில்லை. அவயவங்களின் கூட்டமான உடலே உண்மைப் பொருள். இதற்கவ்வருகு வேறில்லை. எப்பாடுபட்டும் இதை ஸுகமாக வைத்திருக்க வேணும் என்று எண்ணுபவனுக்கு கீதையால் ஒரு பயனும் இல்லை. தங்கள் பலத்தை அறிந்த அர்ஜுனன் இப்படிப்பட்ட தேஹாத்மவாதியாய் இருந்தால் யுத்தத்தினின்றும் விலக மாட்டான். விரோதிகளைக் கொன்று ராஜ்யத்தை அடைந்து ஸுகப்படுவதில் முனைவான். எது ச்ரேயஸ் அளிக்க வல்லது? என்று கேட்டது சரீரத்தைப் பற்றியது அல்ல என்பது தெளிவு.

முதலில் ஆத்மாவைப் பற்றிய உண்மையை நாம் அறிய வேண்டும் என்பது பகவதபிப்ராயம் ஆகும். இதை அறிவதுதான் ச்ரேயஸ்ஸை அளிக்கவல்லது என்று ஆரம்பித்து கண்ணன் ஆறும் அத்யாய இறுதியில் மநநம் சிந்தநம் எனப்படும் பக்தி மூலம் பகவானை அடையலாம் என்று கூறுகிறான். இவை அர்ஜுனனை வ்யாஜமாக வைத்துக் கொண்டு அவனுக்குச் சொல்லுவதாக உலகத்துக்குச் செய்யும் உபதேசமாகும். முதன்முதலில் சரீரம் வேறு ஆத்மா வேறு என்றும் ஜீவாத்மாவான அர்ஜுனன் வேறு, பரமாத்மாவான



தான் வேறு என்றும் பல ஜீவாத்மாக்கள் உண்டு, அவை ஒன்றிலிருந்தொன்று வேறுபட்டவை என்றும், ஆத்மா நேற்று, இன்று, நாளை என்ற முக்காலத்திலுமுள்ள நித்ய வஸ்து என்றும் சொன்னான். இங்குச் சொன்ன பேதங்கள் (வேறுபாடுகள்) இயல்பானவை. ஒரு காரணத்தை (உபாதியை)க் கொண்டு வந்தவையன்று. இங்கு பரஸ்பர பேதம் (ஒன்றிலொன்று வேறுபட்டிருக்கை) உபாதியால் வருவது (ஔபாதிகம்) என்பது சங்கர வாதம் என்பதை நினைவு படுத்திக் கொள்ள வேண்டும். பேதம் நிருபாதிகம் (உபாதியால் ஏற்படாதது – இயல்பானது) என்ற ராமாநுஜ மதமே கண்ணனால் இங்கு சொல்லப்பட்டுள்ளது.

ஆத்மா நித்யன் என்பதையும் பலபடிகளால் விவரிக்கிறான். இங்கு ஸ்தூலத்தில் (gross) ஸூக்ஷ்மம் (subtle) ப்ரவேசிக்கும். மண், நீர், தீ, காற்று, ஆகாசம் (வெளி) மஹத், ப்ரக்ருதி, ஜீவன், பரமாத்மா என்று தத்வங்களை ஸ்தூலத்வம் குறைய ஸூக்ஷ்மத்வம் அதிகமாகும் க்ரமத்தில் (order ) சொல்லலாம். "அணோரணீயாந்" (நுண்ணிதினும் நுண்ணிது) என்றது ஸூக்ஷ்மத்வத்தைப் பற்றி. சரீரத்தை ஆயுதம் (சஸ்த்ரம்) பிளக்கும். நுண்ணிதான ஆத்மாவைப் பிளக்க முடியாது. ஜீவனை (ஆத்மாவைவிட) ஸ்தூலமான நீர் அதில் புகுந்து அதை நனைக்கக் கூடியதன்று. தீ அதை எரிக்கக் கூடியதன்று. காற்று உலர்த்தக் கூடியதன்று.

அவிநாசி து தத்வித்தி யேந ஸர்வமிதம் ததம் |
விநாசமவ்யயஸ்யாஸ்ய ந கச்சித் கர்த்துமர்ஹதி || (2-17)

அசேதநப் பொருள்களில் வ்யாபிக்கக்கூடிய ஆத்மவஸ்து விநாசம் (அழிவு அற்றது). அழியாததான இவ்வாத்மாவுக்கு எந்தப் பொருளும் அழிவை உண்டாக்க முடியாது. இங்கு சங்கராசாரியர்

*ஈச்வரனுலும் அழிக்கமுடியாதது* என்று கூறுவது வியப்புக்கு விஷயமாகிறது. ராமாநுஜர் அஸ்த்ரசஸ்த்ரம் முதலான அசேதநப் பொருளால் அழிக்க முடியாது என்றே பொருள் கொள்கிருர். மேலே கண்ணனே சஸ்த்ரங்களால் (ஆயுதங்களால்) இவனை உடைக்க முடியாது, தீயால் கொளுத்த முடியாது என்று பலபடியாலும் விவரிக்கிறபடியால் இதுவே தக்க பொருளாகும். மேலும் *அணேரணீயான்* எனக்கூடிய பரமாத்மா ஜீவாத்மாவினுள் புகுரமுடியும். அதனுல் அழிக்கவும் முடியும். ஆனுல் அவன் எப்பொழுதும் அப்படி ஸங்கல்பிக்க மாட்டான் என்பது திண்ணம்.

*ப்ரயோஜநமநுத்திச்ய நமந்தோபி ப்ரவர்த்ததே* – ஓர் பலனை உத்தேசியாமல் அறிவில் மிகத் தாழ்ந்தவனும் செயல்பட மாட்டான் என்பது உலக வழக்கு. ஆனுல் அஸங்கமென்ற பற்றின்மையைக் கண்ணன் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிருன். உனது வர்ணுச்ரமத்துக்குச் சேர கர்மாவை (தர்மத்தை) பலத்தில் ஆசையில்லாமல் அநுஷ்டிப்பதே (செய்வதே) நலந்தருவது. (ச்ரேயஸ்கரம்). இப்படிப்பட்ட தர்மாநுஷ்டாநம் மனதைத் தூய்மைப் படுத்தி ஆத்ம சிந்தனமான ஜ்ஞாநயோகத்தில் கொண்டுவிடும். தர்மாநுஷ்டாநத்தினுல் எம்பெருமான் ப்ரீதியடைகிருன். இது அவனுக்கு கைங்கர்யமாக அமைகிறது என்று எண்ணி இது க்ருஷ்ணுர்ப்பணம் என்று தர்மாநுஷ்டாநமான கர்மயோகத்தைச் செய்ய வேண்டும். விஷயங்களில் இந்த்ரியங்கள் ஸம்பந்தப்படும்போது இன்ப துன்பங்கள் விளைகின்றன. இவை வந்து போகும் நிலையற்ற (passing phase - not permanent) இயல்புடையவை. வெப்பம், குளிர் முதலானவற்றை ஒருபடியாக (ஸமமாக) எண்ண வேண்டும். இப்படியே லாபம், நஷ்டம், வெற்றி, தோல்வி, ஸௌகர்யம், அஸௌகர்யம் எல்லாவற்றையும் ஸமமாக நோக்க வேண்டும். விருப்பு வெறுப்பற்றிருக்க வேண்டும். இப்படியெல்லாம்



உள்ளவனுக்கே மனத்தூய்மை கிட்டும். பலனை உத்தேசித்து காரியம் செய்தால் ஆசை வளரும். ஆசை விவேகத்தை அழுத்தி ஆத்மநாசத்தில் கோண்டுவிடும். மனத்தூய்மை எந்த யோகிக்கும் முக்கியம். செயலில்தான் அதிகாரம் உண்டு. பலனில் இல்லை. பலத்தில் ஆசையில்லாத கர்மாநுஷ்டாநத்தை அவசியம் அநுஷ்டிக்க வேண்டும். இதில் ஈடுபாடு அவசியம்.

ஸ்ரீராமன் ராஜ்யாபிஷேகம் பண்ணிக் கொள்வதென்று முதல் நாள் மனைவியான பிராட்டியுடன் *ஸஹபத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயண முபாகமத்* என்று விரதங்களை அநுஷ்டித்..வன் மறு நாள் தனக்கு ராஜ்யமில்லை, வனவாஸம்தான் என்று ..பொழுது *வநவாஸோ மஹோதய : * என்று அதை உகப்புட.. ஏற்றுக் கொண்டான். இரண்டு அவஸரங்களிலும் அவன் மன நிலை ஸமமாக இருந்தது. ஆசைக்கு அளவில்லை என்பதற்கு ஒரு கதை சொல்வதுண்டு. ஒருவன் ஒரு தெய்வத்தைக் குறித்துத் தவமிருந்தான். அந்தத் தெய்வம் அவன் முன் தோன்றி ஒரே ஒரு வரம் கேட்டுக் கொண்டால் தருவதாகச் சொல்ல அவனும் தான் தனது 21வது தலைமுறை பேரன் ஏழடுக்கு மாளிகையில் தங்கக் கிண்ணத்தில் க்ஷீராந்நம் ..ண்பதைப் பார்த்துவிட்டு அந்தத் தெய்வத்தை வந்தடையும்படி ப்ரார்த்தித்துக் கொண்டானும்.

பற்றற்ற தூய மனத்துடன் ஆத்மசிந்தநம் பண்ணுமவன் சுத்தாத்மாவ..ப் பார்த்து ஆநந்தப்பட முடியும். இப்படி ஆத்மாவில் மனத்தை ஒன்றப் பண்ணி சிந்திக்கும் நிலை ஸ்திதப்ரஜ்ஞதை ஆகும். இப்படி நிலைத்தவன் ஸ்திதத ீ. ஜீவஸாக்ஷாத்காரம் பெற்று பக்தியோகத்துக்கு அதிகாரி (தகுதி பெற்றவன்) ஆகிருன். ஆத்ம ஸாக்ஷாத்காரம் என்பது ஆத்மாவை மனக்கண்ணுல் தெளிவாகப் பார்த்தல். இப்படி ஸாக்ஷாத்கரித்தவனே யோகி ஆவான். இவனு

க்கு மனத்திலுள்ள விருப்பங்கள் (பலத்தைப் பற்றியவை) யாவும் விலகிவிடும். மனது ஆநந்தஸ்வரூபனான ஆத்மாவையே பற்றி நின்று மகிழும். இவன் துன்பம் தரும் நிகழ்ச்சிகளால் துன்பப் படுவதில்லை. இன்பம் தருவனவற்றில் ஆசை வைப்பதில்லை. ஆத்ம சிந்தநத்திலேயே ஊன்றி (ஸ்திததீ) தனக்கு நேரும் நன்மை தீமைகளில் ஒரே மாதிரி மனநிலை உடையவனாய் இந்த்ரியங்களை விஷயங்களில் செல்ல வொட்டாமல் வாங்கி ஆத்ம விஷயத்தில் நிலைத்திருப்பவனே யோகியாவான். இப்படிப் பற்றற்றவனே மனத் தெளிவையும் (ப்ரஸாதம் எனப்படுவது இது) நிம்மதி (சாந்தி) யையும் அடைகிறான். மனதில் ஆசைகளை உடையவனுக்கு, அதாவது இந்த்ரியங்களை விஷயங்களில் சேரவிடுமவனுக்கு (இவன் காமகாமீ எனப்படுகிறான்) சாந்தியே கிட்டாது. *ஜ்ஞாநகர்மாத்மிகே நிஷ்டே யோகலக்ஷ்யே ஸுஸம்ஸ்க்ருதே* என்பது முதல் ஷட்க ஸங்க்ரஹ ச்லோகத்தின் முதல் பாதி. நியதமாயுள்ளது – ஊன்றியிருப்பது – நிஷ்டையாகும். யோகத்தில் (ஆத்ம ஸாக்ஷாத்காரத்தில்) நோக்கையுடைய கர்ம நிஷ்டை (அநுஷ்டாநம்) ஜ்ஞாந நிஷ்டை இவையிரண்டும் ஸுஸம்ஸ்க்ருதங்களாக இருக்க வேண்டும். *நிர்மம: நிரஹங்கார:* (2-71), (*நீர் நுமதென்றிவை வேர் முதல் மாய்த்து* – திருவாய். 1-2) நிஸ்ஸ்ப்ருஹனாய் (ஆசையற்றவனாய்) இந்நிலை பகவானின் இன்னருளால் வந்தது என்ற ஆழ்ந்த நம்பிக்கையுடையவன் சாச்வதமான சாந்தியை அடைகிறான். இவனே பரமாத்மாவலோகமான பக்தி யோகத்துக்கு தகுதி பெற்றவன்.

மூன்றாவது அத்யாயத்தில் முதலில் அர்ஜுனனுடைய கேள்வி பார்க்கப்படுகிறது. இங்கு ச்லோகங்கள் எளிய நடையில் அமையவில்லை. ஜீவாத்மாவைக் கண்கூடாகக் காணும் ஜ்ஞாநயோகம் ஆத்மக்ஷேமம் அளிக்கக்கூடியது என்று கண்ணன் சொல்லிக்கேட்ட



அர்ஜுனன், தான் ஸ்திதப்ரஜ்ஞ நிலையை அடைவதில் ஊக்கமுடையவனாய், *யுத்தம் செய்வதாகிற ஸ்வதர்மத்தை (க்ஷத்ரிய தர்மத்தைக்) காட்டிலும் யுத்தத்தினின்றும் மீள்வதாகிற ஜ்ஞாந யோகமான ஸ்திதப்ரஜ்ஞதை விசேஷமாகத் தெரிகிறதே. யுத்த்யஸ்வ என்று என்னை ஏன் யுத்தத்தில் நியமிக்கிறாய்?* என்று கண்ணனைக் கேட்கிறான்.

இந்தக் கேள்விக்கு அபிப்ராயத்தை நமது ஆசாரியர்கள் விளக்கும் படி – கர்மாநுஷ்டாநம் ஆத்மசிந்தநம் இரண்டும் ஆத்மஸாக்ஷாத்காரத்துக்கு இரண்டு படிகள். முதலதில் இந்த்ரியங்கள் உள்ளடங்கி இருத்தல் வேண்டும். இப்படி இவை ஒன்றுக்கொன்று முரணானவையாகத் தோற்றும்.

பகவதர்ச்சநம் என்ற கர்மா (எல்லா கர்மங்களும் பகவதாராதன பரமாக அமைவதை உணர வேண்டும்) திருநாமங்களை வாய் சொல்லுவது, கை துளஸீபுஷ்பங்களை எடுத்து அவன் திருவடிகளில் சேர்ப்பது, கண் அவன் திருமேனியையும் திருவடிகளையும் கண்டு ஸேவிப்பது இப்படி 3 காரியங்களின் திரட்சியாகும். இப்படியே மற்ற கர்மாக்களையும் யோஜித்துக் கொள்க. ஜ்ஞாந யோகத்தில் இந்த்ரியங்களையெல்லாம் ஆமை போல உள்ளடங்கும்படி செய்து கொண்டு, தூயதான மனத்துடன் ஆத்ம சிந்தநம் பண்ணும் நிலை பார்க்கப்படுகிறது. இந்த்ரியங்கள் இருந்தும் இல்லாத நிலையிது. இந்த்ரியங்கள் வெளியில் நடையாடும் கர்மா (ஸ்வ தர்மமான யுத்தம்) எதற்கு? உன்னால் ச்ரேய: கரம் ( ஆத்ம நலன் பயப்பது) என்று சொல்லப்படும் ஜ்ஞாநத்தில் ஈடுபடக்கூடாதா? – என்று இவ்வாறு அர்ஜுனனுடைய கேள்வி பார்க்கப்பட வேண்டும் என்று நமதாசார்யர்கள் விளக்கி உள்ளார்கள்.

இதற்கு கண்ண[illegible]ாக்கமாக விடை கூறுகின்றான். அவன் நியமிப்பது – "நியதம் குரு கர்மத்வம், கர்ம ஜ்யாயோ ஹி அகர்மண:" (3–5) – வெகு காலமாக நீ பழகியுள்ள கர்மாவை (யுத்தத்தைச்) செய்வாயாக. பகவதாராதன ரூபமான கர்மயோகத்தைச் செய்யாதவனுக்கு முறைப்படி ஜ்ஞாந யோகத்துக்கு வேண்டியதான ஆரோக்யமுள்ள உடல்நிலையும் கை கூடாது என்று. இதுவானது இது பர்யந்தம் சொன்ன ஜ்ஞாந நிஷ்டையிலிருந்து வேறுபட்டது. ஜ்ஞாந யோகத்தை உள்ளீடாகக் கொண்ட கர்மயோகம் ஆத்மஸாக்ஷாத்காரத்தளவும் பயனளிக்க வல்லது.

ஆத்ம ஜ்ஞாநம் என்பது ஆத்மா நித்யன் (எப்பொழுதும் உள்ளவன்) தேஹத்தினின்றும் வேறுபட்டவன் என்று அறிகை. ஆத்மயாதாத்ம்ய ஜ்ஞாநம் – உண்மை நிலை பற்றிய அறிவு – ஜீவாத்மா பரமாத்மாவான நாராயணனுடைய சரீரம் என்று அறிகை. "யஸ்ய ஆத்மா சரீரம்", அந்த: ப்ரவிச்ய சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா" என்றும் உபநிஷத்து பரமாத்மாவை ஆத்மாவுக்கு சரீரியாய் (தேஹத்தையுடையவன்) நியமிப்பவனும் ஓதியுள்ளது. பஞ்சபூதங்களால் ஆன ஒரு சரீரத்தை ஜீவாத்மா நடத்துகிறான். ஆத்மா பிரிந்தால் சரீரம் தரிக்காது. பாழாய் விடும். சரீரம் ஆத்மாவுக்கு நியாம்யமாய் (நடத்தப்படுமதாய்) இருக்கும். ஆத்மா தனது மகிழ்ச்சிக்கு ஏற்ப சரீரத்தைக் காரியம் கொள்ளுகிறான். ஜீவனுக்குச் சரீரம் உடலாவது போல பரமபுருஷனுக்கு இந்த ஜீவன் உடலாகிறான். இதனால் இவன் ஸர்வஸ்வாமியான (சேஷி) பரமனுக்கு சொத்து – சேஷப் பொருள். இதை கீதையில் பல வாக்யங்களில் பகவான் வலியுறுத் தியுள்ளான். இதையறிந்து தர்மாநுஷ்டாநம் பண்ணுவதே கர்ம யோகம்.

முதல் ஷட்க ஸங்க்ரஹ ச்லோகத்தில் ஸுஸம்க்ருதே என்பதற்கு



ஆத்மயாதாத்ம்ய ஜ்ஞாநம் – பகவச்சேஷத்வ ஜ்ஞாநம், பற்றின்மை இவற்றுடன் செய்யப்பட்டது என்று பொருளாகும். இப்படிச் செய்யப்படும் கர்மயோகத்தில் பகவத் த்யாநம், பகவதாராதநம் இரண்டும் உள்ளன. ஆதலால் இது கேவல ஜ்ஞாநயோகத்தைவிட சிறந்தது. 3–8ல் அகர்மண: என்பது ஜ்ஞாநத்தை. இது கர்ம ஸஜாதீயமாய் கர்மாவினின்றும் வேறுபட்டதாயுள்ளதொன்று. கர்மாநுஷ்டாநம் நமக்கு ஜ்ஞாநத்தைவிட இயல்பாக அமைவது. செயல் சரீரத்துக்கு உடன்பிறந்தது. கண்ணால் கண்ணனைப்பார், வாயால் கேசவனைப் பாடு என்று செயல்படும் இந்த்ரியங்களுக்கு பகவானை விஷயமாக்குதல் வேண்டும். பகவதாராதனத்தில் சேஷப்பட்ட அந்நத்தையே உண்ணவேண்டும். நமது நிலைக்கு அகர்மாவான (செயலற்றது) ஜ்ஞாந யோகம் சேர்ந்து வராது. இங்கு சொல்லப்படும் (ஆத்மயாதாத்ம்ய) ஜ்ஞாநத்தையும் கொண்ட கர்மயோகம் நமக்கு அநுஷ்டிக்கப் பாங்கானது. இந்தப்படியான கர்மாநுஷ்டாநத்தை ஆறும் அத்யாயம் வரை கண்ணன் விவரிக்கிறான்.

ஸ்திதப்ரஜ்ஞதையான ஜ்ஞாந யோகத்துக்கு அர்ஜுனன் தகுதி பெற்றவனல்லன் என்று பகவதபிப்ராயம். நாமும் தகுதி அற்றவர்களே. "நான் இப்பொழுது சொல்லும் கர்மயோகத்தை நீ செய்தால் உன்னைப் பார்த்துப் பலர் செய்வர். பலனை விரும்பாமல் செய்யப்படும் கர்மாநுஷ்டாநத்தினால் உலகம் ரக்ஷிக்கப்படும். உலகத்தவர் உன்னைப் பின் சென்று நலன் பெறுவர். வழிகாட்டியான நீ சிஷ்டனுவாய். நான் நிறைவு பெற்றவன். (பூர்ணன்) கர்மத்துக்கு வசப்பட்டவனல்லன். ஆயினும் உலக நன்மைக்காக நான் கர்மாநுஷ்டாநம் பண்ணுகிறேன். அப்படியே நீயும் செய்வாயாக. இதனால் உலகம் ஸுகமடையும்" என்கிறான் கண்ணன். நற்காரியம் செய்யும்போது நான் செய்கிறேன் என்று எண்ணுவது

மூடத்தனம். ஸர்வேச்வரனுல் இந்தக் காரியம் நடந்தது என்றும் குணச்சேர்க்கை தூண்டக் காரியம் செய்ய நேரிட்டது என்றும் நினைக்க வேண்டும். *குணேஷுகர்த்ருதாம் ஆரோப்ய* என்று கண்ணன் திருவாக்கு. குணக்ருதம் என்ற எண்ணம் முதல்படி. ஈச்வர க்ருத்யம் என்ற நினைவு இரண்டாம் படி.

நீரின் ஸ்வபாவம் வண்ணம், ருசி ஏதுமில்லாதிருக்கை. அது பாயும் நிலத்தின் இயல்பால் மணம், வண்ணம், ருசி முதலியன வை பார்க்கப்படும். உடலின் (இந்த்ரியங்களின்) சேர்க்கை கொண்டு ஜீவன் செயல்படுகையால் உடலில் கலந்து நிற்கும் ஸத்வம், ரஜஸ், தமஸ்ஸுக்கள் அந்தந்த குணம் மேலோங்கியுள்ள நிலைக்கேற்பச் செயல்பட நேரிடுகிறது. மேலும் ஆத்மாவுக்கு ஆத்மாவான, ஸர்வநியந்தாவான பரமாத்மா செய்விக்கிருன் என்றும் எண்ண வேண்டும். இந்த நினைவுகளுடன் அஹங் காரமமகார ரஹிதமாய் (இவைகளை விலக்கி) பலனில் நோக்கில் லாமல் செய்யப்பட்ட கர்மா ஆத்மாவலோகநத்தில் (ஜீவாத்மாவை உட்கண்ணுல் காண்கையில்) கொண்டுவிடும்.

முதல் ஷட்கத்தில் பகவத்விஷயம் ப்ரதாநமாகக் காட்டப்படவி ல்லை. பகவத்விஷயத்தை ப்ரதாநமாக வலியுறுத்துவது மத்யம ஷட்கத்தில். (அத் 6-12) இங்கு (நாலாம் அத்யாயத்தில்) அவ தார விஷயமான பேச்சு ப்ராஸங்கிகம். முன் விவரித்தபடி நினைவு டன் கர்மநிஷ்டையில் ஊன்றுவதை அகர்மா என்கிறது. அகர்மா வில் கர்மாவைக் காண வேண்டியது அவசியம். நமது ரஹஸ்ய க்ரந்தங்களில் கர்மயோகத்தை *கொண்டிப்பசுவுக்குத் தடி கட்டி விடுவது போலே* என்று விவரிப்பர். எதையும் காண்பது எதை யும் புஜிப்பது என்பது நமது இயல்பாக உள்ளது. கர்ம யோகம் நிர்ப்பந்தங்களை விதித்து நினைத்தபடியெல்லாம் தன்னிச்சைப்படி நடந்துக் கொள்ளாமல் தடுக்கிறது. தன்னிச்சைப்படி ஓடித்திரியும் பசுவுக்கு ஒரு மரத்தடியைக் கழுத்தில் கட்டிவிட்டு பட்டிமேய்ந்து திரியவொட்டாமல் தடுத்து வைப்பதுபோல கர்மயோகம் விதிக்கும் நிர்பந்தங்கள். *கண்டவிடத்துக்கும் செல்லாதே - கோவிலுக்கு நடந்து செல், இதுவே கால் படைத்த ப்ரயோஜனம். எம்பெருமா னுடைய திவ்யமங்களவிக்ரஹத்தை கண்ணுரக்கண்டு களிப்பதே கண்படைத்த ப்ரயோஜநம்* என்பன போல நினைவுகள் அமைய வேண்டும்.



காம்ய கர்மா என்பது பலனில் நோக்குடன் செய்யப்படுவது. முமுக்ஷு பண்ணுவது நிஷ்காம்ய கர்மா. (பலனில் நோக்கற்றது) நிஷ்காம்யமாய் பகவதாராதன ரூபமாகக் கர்மாவைச் செய்வதே (செயல்படுகையே) கர்மயோகமாகும். ஆத்மாவின் பகவச்சேஷத்வ ஜ்ஞாநம் (எம்பெருமானுக்கு தாஸனுயிருக்கை) நெஞ்சில் ஊற ஊற இந்த்ரியங்கள் கட்டிலடங்கி நிற்பது அதிகமாகும். இந்நிலை யில் உள்ளவன் செயலைச் செய்தாலும் செய்யாதவனுயிருப்பான். த்வயத்தின் உத்தரவாக்யம் (ஸ்ரீமதே நாராயணய நம:) சொல்லி பகவானுக்கு அர்க்ய பாத்யாதிகளை ஸமர்ப்பிக்கிறோம். அர்க்யபாத் யாதி ஸமர்ப்பணம் கர்மாவில் ப்ரதாநாம்ச. உத்தர வாக்ய உச் சாரணமும் அதன் அர்த்த சிந்தனையும் ஜ்ஞாநாம்சங்கள். இந்த ஜ்ஞாநாம்சம் வலிதாக வலிதாக, செய்யும் கர்மா அப்ரதாநமாய் விடும். நழுவிப் பொகாமல் கைங்கர்யரூபமாய் எஞ்சி நிற்கும் கர்மமே ஜ்ஞாநத்தில் நம்மைச் சேர்ப்பதை இங்கு காணலாம். ஜ்ஞாநமே கர்மமாகவும் கர்மமே ஜ்ஞாநமாகவும் ஆகி விடுவதை இங்கு காணலாம். ஆகையால் ஜ்ஞாநத்தில் கர்மத்தையும் கர்மத் தில் ஜ்ஞாநத்தையும் காண வேண்டும் என்கிறது.

முன்பு காட்டப்பட்ட (இரண்டாம் அத்யாயத்தில் சொன்ன) ஜ்ஞாந

யோகம் அநுஷ்டிப்பது ச்ரமஸாத்யம். விளம்பித்துப் பலனளிப்பது. இங்கு சொல்லப்படும் (கர்மாவில் உள்ளிட்டு நிற்கும்) ஜ்ஞாந யோகம் ஸுலபம். சீக்கிரம் (விளம்பமில்லாமல்) பலனளிக்க வல்லது. எம்பெருமானை ஸேவித்தால் *ஏதோ ஸத்வ குணம் மேலிட்டதால் கண் அவனை ஸேவித்தது. மேலும் அவனருளால் அவன் தன்னைக் காட்டி அழைக்க ஸேவிக்க நேரிட்டது. இது அவன் ஸங்கல்பம்* என்கிற மனநிலை அவசியம். *எல்லா ஜீவாத்மாக்களும் ஆகாரத்தில் ஒத்தவர்கள். அணு மாத்ரம். ஜ்ஞாநஸ்வரூபன். ஜ்ஞாநத்தைக் குணமாக உடையவன். பார்க்கப்படும் தேஹ, குண, வ்ருத்த பேதங்கள் சரீரத்தைப் பற்றியவை* என்று உணர வேண்டும். *வித்யா விநயஸம்பந்நே ப்ராஹ்மணே...* (5-18) என்ற ப்ரஸித்தமான ச்லோகத்தில் எடுக்கப்பட்ட வ்யக்திகளை ஸமம் என்னவில்லை. இந்த பேதப்பட்ட சரீரங்களில் உள்ள ஆத்மாக்கள் (பரிசுத்த நிலையில்) ஒருபடிப்பட்டவை என்று வலியுறுத்துகிறது.

*யோகலக்ஷ்யே* என்பதனால் கீழ்ச்சொன்னவைகளுக்கெல்லாம் குறிக்கோள் ஆத்மஸாக்ஷாத்காரமான யோகம் என்கிறது. இது ஒர் இன்பம் தருமதான ஸுகம். ஸுகம் இரண்டு வகைப்படும். விஷயஸுகம், ஆத்மஸுகம் என்று. ஆத்மபரமாத்ம விஷயங்களாலன்றி மற்ற எதனாலும் வரும் ஸுகம் விஷயஸுகம் எனப்படும். விஷயம் என்பது நல்ல உணவு, வசதியான வீடு, விளைநிலம், ஆடையாபரணங்கள், புஷ்ப சந்தனாதிகள், அனுகூலரான மனைவி மக்கள் எல்லாவற்றையும் குறிக்கும். இவற்றினால் வரக்கூடிய கீழ் மட்டத்திலுள்ள உலகவின்பங்கள் விஷயஸுகம் எனப்படும்.

ஆத்மாநுபவமாகிற ஸுகம் வேறு. ஒருவன் ஆழ்ந்து தூங்கி எழுந்து நன்றாக ஆனந்தமாக உறங்கினேன் என்கிறான். ஆழ்ந்து



தூங்கும்போது போஜனமோ மற்ற விஷய ஸுகங்களோ அநுபவத்தில் இல்லை. கனவுமில்லை. விஷயஜ்ஞாநமுமில்லை. ஆத்மா ஜ்ஞாநமுள்ள தத்வமானபடியால் தனக்குத்தானே தோற்றிக் கொண்டிருக்கும் நிலை இது. இப்படி ஆழ்ந்து தூங்கும்போது விஷயாநுபவம் எதுவுமே இல்லாததால் ஆத்மாநுபவமே நிகழ்கிறது என அறியலாம். மனது புரீதம் என்ற நாடியில் புகுந்து வெளிவிஷய ஜ்ஞாநமற்றிருக்கும் நிலையில் ஸுகம் என்பது ஆத்மாநுபவமே. இந்த ஆத்ம ஸுகத்திற்கு வேறெந்த ஸுகமும் ஈடு இணையாகாது. இந்த ஸுகம்தான் ஸுகமாகத் தூங்கினேன் என்பதில் சொல்லப்படுகிறது. விழிப்பு நிலையில் விஷயாநுபவமே மேலோங்கி நின்று ஆத்மஸுக உணர்ச்சி சிறிதுமில்லாமலாய் விடுகிறது. தேஹ ஸம்பந்தத்தினால் ஆத்மா தோஷமுள்ளவனாயினும் நல்ல தூக்கத்தில் ஏற்படும் ஆத்மாநுபவம் ஆனந்தாநுபவமாக அமைகிறது. இதனால் தூய்மை பெற்ற நிலையில் (பாபமாகிற தோஷம் மிகக் குறைந்து) ஆத்மா தனக்குத்தானே தோற்றும் ஆத்மாவலோகநிலை மிகவும் மேலான ஸுகமாயிருக்கும் என்று ஊகித்தறியலாம்.

இப்படிப்பட்ட போக தசையில் ஜீவாத்மாவிற்குத் தன்னைத் தவிற வேறெதுவும் தெரியாது. மனது ஜீவாத்மாவிலேயே ஒன்றி விடும் நிலையிது. ஆத்மா தன்னிலேயே ரமிக்கிறது (ஆனந்தப்படுகிறது) என்பர். இந்த நிலையில் விஷயங்களினால் வரும் எவ்வளவு பெரிய ஸுகமும் துக்கமும் ஆத்மாவைத் தொடாது. இவைகளைப் பற்றிய (உலகத்திய) இன்பமோ துன்பமோ ஆத்மாவைத் தட்டாத மேலான இன்ப நிலை இது.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்